விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

நூலகம்
நாவாந்துறை
கிளை நூலகம்

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
நடாள்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9819)

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை (01.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 286

# நல்லாட்சி அரசின் துரோகத்திற்கு
# த.தே. கூட்டமைப்பு துணை போகின்றது

## யாழில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் போது யுத்த மீறல்கள் இடம் பெற்றிருந்தால் எமது நாட்டு நீதிமன்றமே குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கும் எனவும் நல்லாட்சி அரசாங்கம் இழைத்துவரும் துரோகங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணைபோவதாக முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றஞ்சாட்டியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## "பெற்றோல், டீசல்" விலை அதிகரிப்போம் ஐ.ஓ.சி. அறிவிப்பு

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளை இன்று முதல் அதிகரிப்பதற்கு லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தீர்மானித்துள்ளது.

எனினும் விலை அதிகரிப்பு வீதத்தை இதுவரை தீர்மானிக்கவில்லை என லங்கா 15

## மார்பில் கட்டைகுற்றியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மார்புப் பகுதியில் மரக்கட்டை குற்றி இரத்தப்பெருக்கு ஏற்பட்டதில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்

இதில் நீர்வேலி வடக்கை சேர்ந்த சுப்பையா சிவனேசன் (வயது 51) என்பவரே உயிரிழந்தவராவார். குறித்த நபர் நேற்றைய தினம் மாலை ஆடு மேய்ப்பதற்காக வீட்டின் அருகில் உள்ள பற்றை பகுதிக்குள் சென்றுள்ளார்.

அங்கு கால் தவறி கீழே விழுந்த போது நிலத்தில் இருந்த மரக் கட்டை ஒன்று அவருடைய மார்பில் குற்றியுள்ளது. உடனடியாக வீட்டுக்கு ஓடி வந்துள்ளார். மனைவியிடம் விடயத்தை தெரிவித்தவுடன் 15

## மன்னார் ஆயர் இல்லத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் விஜயம்



15

## கிழக்கின் ஆட்சி நேற்றுடன் முடிவு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ ஆட்சிக்காலம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிழக்கு மாகாணத்தின் நிர்வாக நடவடிக்கைகள் இன்று முதலாம் திகதியுடன் 15



## தமிழ் இனத்தின் வீர வரலாற்றை உலகறியச் செய்தவர் பிரபாகரன்

### மட்டு மண்ணில் பாரதிராஜா

(மட்டக்களப்பு)

தமிழ் இனம் ஒன்று உள்ளது அதற்கும் வீர வரலாறு இருக்கிறது என்பதை உலகறியச் செய்தவர் பிரபாகரன் மட்டுமே என இயக்குநர் சிகரம் பாரதிராஜா மட்டு மாவட்ட கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கூறியுள்ளார். அங்கு உரையாற்றிய பாரதிராஜா மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பிரபாகரன் மட்டும் இல்லையென்றால் தமிழ் என்ற ஒன்று இருப்பதே தெரியாத நிலை இருந்திருக்கும் காலம் எமது 15

## அரசியல் கைதிக்கு ஆதரவாக ஏனைய கைதிகள் அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல்கைதிகளுக்கு ஆதரவாக ஏனைய அரசியல் கைதிகள் நாளை திங்கட்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசி 15

## ஆட்சியை அமைப்பதற்கு உதவிய வடக்கு மக்களுக்கு அரசு என்ன செய்துள்ளது

### யாழில் பஷில் ராஜபக்ஷ கேள்வி

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள தற்போதைய ஆட்சியை அமைப்பதற்கு உதவி செய்த வடக்கு மக்களுக்கு இவ்அரசாங்கம் என்ன உதவியை செய்திருக்கிறது என கேள்வியெழுப்பியுள்ள முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான பஷில் ராஜபக்ஷ எதிர்வரும்தேர்தல்களில் தமது கட்சியே அனைத்திலும் வெற்றியடை 15

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(C-9817)
CNR World Wide Express
இல.491, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us cnrworldwideexpress



## ஆவா குழுவின் ஆயுத பூஜை



16

## யாழ்.சிறையில் கோழிக் கறிக்குள் போதைப்பொருள்

(யாழ்ப்பாணம்)


விளக்கமறியல் கைதிக்கு ஹெரோயின் போதைப்பொருளை கடத்த முற்பட்ட நபரொருவர் யாழ்ப்பாணச் சிறைச்சாலை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

அன்னையின் மடியில் 29 . 05 . 1954



ஆண்டவன் அழைப்பில் 13 . 10 . 2016

அமரர் **விஸ்வலிங்கம் விநாயகமூர்த்தி** (மூர்த்தி)

(நிரு அரைக்கும் ஆலை உரிமையாளர் - புளியங்கூடல்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நாளை (02.10.2017)திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(847)

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

(தி-9675)

## தவறிவிட்டது

உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை இரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் முழங்காவிலுக்கும் நாச்சிக்குடா சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் 30.09.2017 அன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: 0772990948** (தி-9831)

## மலிவு விற்பனை

லைடன் புடவை நிலையத்தில் தீபாவளியை முன்னிட்டு 01.10.2017 - 18.10.2017 வரை சகல பொருட்களும் விசேட விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலைச் சீருடைத் துணிகளுக்கும் விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

**லைடன் புடவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2381

(தி-9824)

## தங்கத்துடன் இந்திய இளைஞன் கைது

(கொழும்பு)

இந்தியப் பிரஜையான 21 வயதுடைய இளைஞன் 435.39 கிராம் தங்கத்தை கடத்துவதற்கு, முயன்றபோது, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், தன்னுடைய பயணப்பொதியில் உள்ள இரும்பு கைப்பிடிக்குள்வைத்தே தங்கத்தை கடத்துவதற்கு முயன்றுள்ளார் என்று சுங்கப்பிரிவினர் அறிவித்துள்ளனர். (மு)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## விஜிதா ரேடிங் பிரபல தனியார் நிறுவனத்தில் வேலைவாய்ப்புக்கள்

01.வட்டா வாகனங்கள்
● மாதாந்த வாடகை அடிப்படையிலும் ● Commission அடிப்படையிலும்
02.சந்தைப்படுத்தல் அதிகாரிகள் (Ref)
03. சேகரிப்பு அதிகாரி (RO)
● வயது எல்லை 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்
கிளைகள்:-யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று, கிளிநொச்சி.

தொடர்பு: கிளிநொச்சி- 0767074609, யாழ்ப்பாணம்- 0778211772, வவுனியா- 0778485389

(851)

FM-94.0, 97.9
மற்றும்
FM-103.1
அலைவரிசைகளில்



# உடனடி வேலைவாய்ப்பு

வெகு விரைவில் நாடு முழுவதிலும் ஆரம்பிக்கப்படவிருக்கும் தனியார் வானொலி சேவையில் இணைந்து பணியாற்ற அரிய சந்தர்ப்பம்.

- வானொலி செய்தி ஆசிரியர்கள் -(ஆண்/பெண்-அனுபவம் உள்ளவர்கள்)
- வானொலி செய்தி வாசிப்பாளர்கள் -(ஆண்/பெண்-35 வயதுக்கு உட்பட்டவர்கள்)
- வானொலி அறிவிப்பாளர்கள் -(ஆண்/பெண்-35 வயதுக்கு உட்பட்டவர்கள்)
- விற்பனை அதிகாரிகள் -(ஆண்/பெண்-35 வயதுக்கு உட்பட்டவர்கள்)
- பிராந்திய செய்தி நிருபர் -(ஆண்/பெண்-40 வயதுக்கு உட்பட்டவர்கள்)
- விரிவாக்கல் அதிகாரிகள் -(ஆண்கள்-35 வயதுக்கு உட்பட்டவர்கள்)
- வரவேற்பாளர் -(பெண்-28 வயதுக்கு உட்பட்டவர்கள்)
- காரியதரிசி -(பெண்-25 வயதுக்கு உட்பட்டவர்கள்)
- தட்டச்சாளர் -(ஆண்/பெண்-தமிழ்,சிங்களம்,ஆங்கிலம்)

(மும்மொழிகளிலும் தட்டச்சுசெய்யக்கூடியவர்கள்-30 வயதுக்கு உட்பட்டவர்கள்)

உங்கள் சுயவிபரக்கோவையை, ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

TRYMAS MEDIA NETWORK(PVT)LTD.
NO,142/21, VIJAYA KUMARATHUNGA MAWATHA, KIRULAPANA.
Email-sam@trymasmedia.com

"வானலையில் புதிய சரித்திரம் படைக்க தயாராகுங்கள்" (852)

# நீங்கா நினைவுகளுடன் முதலாம் ஆண்டில்

வைரமாய் மடியில் 19 . 10 . 1955



வைரவர் அடியில் 01 . 10 . 2016

அமரர் **சோமசுந்தரம் ராஜினி** (பபி)

அற்புதமாய் அனைவரையும் அன்பால் ஆண்டு
அகிலமதில் பலரையுமே மனதால் வென்றீர்
நற்பேறாய் நாமெல்லாம் மகிழ்ந்து இருக்க
நல்லபடி குடும்பத்திற் கொளியைச் சேர்த்தீர்
உற்றவர்கள் உறவுநிலை எல்லை தாண்டி
உயர்வாக சமூகத்தில் ஒன்றி நின்றீர்
சிற்பரனின் சீரடியில் நிலைத்து நிற்க
சிறப்பாக வேண்டுகின்றோம் ஆண்டு ஒன்றில்

எமது குடும்பத்தின் மூலவராக இருந்து இறை பதம் ஏகிய எமது அன்னையின் ஆத்மா இறையடியில் நிலைத்திருக்க முதலாம் ஆண்டு நினைவில் பிரார்த்திக்கின்றோம்.

இல.22, நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை.
(பெரியதம்பிரான் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(846)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா கொலை வழக்கின் குற்றவாளிகள் ஓரிடத்தில் தடுத்து வைக்கப்படமாட்டார்கள்



## சிறைச்சாலை ஆணையர் துஷார தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் புங்குடு தீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஏழு கைதிகளும் தும்பறை சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டிருந்த ஏழு பேர் மீதும் சிறைச்சாலையிலுள்ள கைதிகள் சிலர் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் குறித்து சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனிய தெரிவிக்கையில்,

இவ்வாறு வெளியாகியுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது.

அவ்வாறு சிறைக் கைதிகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு தாம் இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, தும்பறை சிறைச்சாலையிலுள்ள குறித்த ஏழு கைதிகளும் வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனிய மேலும் தெரிவித்தார். (இ-7)

# முஸ்லிம் முதலமைச்சரை அகற்றுவதில் சந்தோசப்படுகின்ற சமூகத்தைப் பார்த்து நான் வெட்கப்படுகின்றேன் -நஷீர்

ஒரு முஸ்லிம் முதலமைச்சர் இல்லாமல் போய் விடவேண்டும் என்று சந்தோசப்படுகின்ற சமூகத்தைப் பார்த்து அல்லது நபர்களைப் பார்த்து நான் வெட்கப்படுகின்றேன் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.



ஏறாவூர் புன்னக்குடா வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலமைச்சரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட வாழ்வாதாரப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் இரவு- பகலாக சமூகத்துக்காக உழைத்துக் கொண்டு இருக்கின்றோம். இதற்காக ஒரு ஐந்து சதமும் களவு செய்யாத எமது மாகாண சபை உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்களை பார்த்தும் நான் பெருமைப் படுகின்றேன். சட்டத்தரணிகள் ஆர்வம் உள்ளவர்கள், படித்தவர்கள், அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்தவர்கள் என சமூகத்துக்காக உழைத்துக் கொண்டு இருக்கின்றோம். இங்கு இருக்கின்ற ஒவ்வொருவரும் உழைத்து இருக்கின்றார்கள். அவர்களைப் பார்த்து நாங்கள் பெருமையடைகின்றோம்.

நாங்கள் செய்த அநியாயம் என்ன? அல்லது இந்தப் பதவியை எடுத்து விட்டு ஓடி ஒளிந்து உறங்கிக் கொண்டு இருந்தோமா" என்னுடைய சம்பளத்தில் ஐந்து சதம் கூட நான் எடுக்கவில்லை. அத்தனையும் மக்களுக்காகச் செலவழித்துள்ளேன். ஒரு லீற்றர் பெற்றோல் கூட எனது தனிப்பட்ட தேவைக்காக பாவிக்கவில்லை. எதையும் நான் எனக்காகச் செய்யவில்லை. சமூகத்துக்காகத் தான் செய்தேன். ஏன் என்னை தொலைக்க வேண்டும் என்று சிலர் நினைக்கின்றார்கள் என்று தெரியவில்லை.

இந்த மண்ணுக்கு என்ன செய்தோம் என்று கேட்கின்றனர். 500 மில்லியன் அல்ல 3 ஆயிரம் மில்லியன் இந்த மண்ணுக்காக செலவழித்துள்ளோம். அதை நான் சொல்லிக்காட்ட விரும்பவில்லை.

இதுவரைக்கும் நாம் எந்தவித ஊழலும் செய்யவில்லை. ஊழல் செய்பவர்கள் எமக்கு பக்கத்திலும் இருக்க முடியாது. அதனால் தான் நாங்கள் அதிகாரத்தை கைபற்றி உள்ளோம்.

கடந்த தேர்தலில் எனக்கும் தலைவர் ஹக்கீமுக்கும் ஒரு உடன்பாடு இருந்தது. நான் மாகாணசபை தேர்தல் கேட்பதற்காக இங்கு வரவில்லை. பாராளுமன்றத்துக்கு தேசியப் பட்டியலில் என்னை அனுப்புவதாக ஒரு உடன்பாடு இருந்தது. ஆனாலும் தலைவர் என்னை மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வைத்தார்.

பல்கலைக்கழகத்துக்கு போன பெண்கள் அடித்து துரத்தப்பட்ட போது அந்தப் பெண்களை எந்தவித பயமும் இல்லாமல் வைத்தியசாலைக்கு பார்க்க முயன்ற போது நூற்றுக்கணக்கானோர் தடுக்க முயன்ற போது இங்கு எதுவும் நடக்கக்கூடாது என்று பயமில்லாமல் சென்றவன் நான். எந்தவொரு பூச்சாண்டியையும் பார்த்து பயப்படத் தேவையும் எங்களுக்கு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய சட்டம் ஒன்றை இயற்றக் கோரிக்கை

உரிய அனுமதி இன்றி கட்டப்பட்டுள்ள பல கட்டடங்களால் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதைத் தடுப்பதற்காக புதிய சட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்று சுற்றுச்சூழல் நீதிக்கான அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அறிக்கை வெளியிட்டிருக்கும் அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஹேமந்த விதானகே, சட்டவிரோத கட்டடங்களைத் தடுப்பதற்கு சுற்றுச் சூழல் ஆய்வுச் சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறான ஒரு சட்டம் இயற்றப்படுவதன் மூலமே சட்டவிரோதமான கட்டடங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அதன்மூலம் இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கேரளக் கஞ்சாவுடன் இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கேரளக் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த இளைஞர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் உடுப்பிட்டிப் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்ற இளைஞர்களை சோதனை செய்த போது கேரளக் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-10)

# ஞானசாரருக்கு எதிரான வழக்கு திடீரென வாபஸ்

(கொழும்பு)

இனங்களுக்கிடையே பதற்றத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டதாக ஞானசார தேரருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு பொலிஸாரினால் வாபஸ் பெறப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கி பொதுபல சேனா அமைப்பு மற்றும் அதன் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் ஆகியோர் தீவிர முஸ்லிம் எதிர்ப்புப் பிரசாரம் மற்றும் தாக்குதல் சம்பவங்களை மேற்கொண்டிருந்தனர்.



இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த ஞானசார தேரர் கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி காலை கோட்டை நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார். பொலிஸார் வழக்கின் முறைப்பாட்டை வாபஸ்பெற்று இலகுவான சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிந்த காரணத்தினால் சில நிமிடங்களில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் லால் பண்டார முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஞானசார தேரருக்கு எதிரான வழக்கை வாபஸ் பெறுவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மத நிந்தனை, இனவாதத் தாக்குதல்கள் உள்ளிட்ட சகல குற்றச்சாட்டுகளையும் பொலிஸார் வாபஸ் பெற்றுள்ளனர். (இ-7)

# கேப்பாபிலவு மக்களின் போராட்டம் 7 மாதங்களைக் கடந்து நீள்கின்றது



கேப்பாபிலவு பூர்வீக மக்களின் தொடர் நில மீட்பு போராட்டம் நேற்றுடன் ஏழு மாதங்களை எட்டியுள்ள நிலையில் புத்தூர் மேற்கு கலைமதி கிராம மக்கள் மற்றும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகியோர் போராட்ட இடத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு பூர்வீக கிராமத்தை விடுவிக்குமாறு வலியுறுத்தி அக்கிராம மக்கள் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கேப்பாபிலவு இராணுவ முகாமிற்கு முன்பாக கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இந் நிலையில் நேற்று போராட்ட இடத்திற்குச் சென்ற சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் மற்றும் கலைமதி கிராம மக்கள் தம்மை போன்று கேப்பாபிலவு மக்களுக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர்.

மக்களின் போராட்ட இடத்தை பார்க்கின்றபோது மிகவும் வேதனையடைவதாகவும் இதன்போது சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் குறிப்பிட்டனர்.

சொந்த நிலத்தையும் கடல் வளத்தையும் இழந்துள்ள மக்கள் பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமது காணி விடுவிப்பு தொடர்பில் உரிய தீர்வொன்றை முன்வைக்கும்வரை தாம் போராட்டத்தை கைவிடப் போதில்லை எனவும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தெரிவித்துள்ளனர். (8-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

Toyota AQVA - hybrid, 2013 Model (Full Option) Low Mileage, Superb Condition, R - Camera, Multifunction, DVD Price - Negotiable, Sale in Jaffna.
(856)

**T.P- 077 412 4328**





# விழிநீர் அஞ்சலி



மானிடராய்ப் பிறந்தார்க்கு
மண்ணில் இறப்புண்டானாலும்
நெஞ்சில் ஈரமுள்ளார்- நம்
மனதில் குடியிருப்பார்
வாழ்வினில் இன்னல்களைக்
கண்டும் துவளாது
வாழ்வதனை வாழ்ந்து காட்டிய
அன்னையே
வாழ்வு நிலையானதல்ல
ஆகையால் - உம்
ஆத்மா இறைவன் மலரடி சேர
இறைஞ்சுகின்றோம்.

அமரர் திருமதி
## பத்மராணி கோபாலச்சந்திரநாயகன்

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான், மருதநகரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும் எமது இல்லக் குழந்தைகளின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவி வரும் திரு. கோபாலச்சந்திரநாயகன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி- கிளிநொச்சி) அவர்களின் அன்புத் துணைவியாருமான திருமதி பத்மராணி கோபாலச்சந்திரநாயகன் அவர்கள் 28.09.2017 (வியாழக்கிழமை) அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்கள் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர்- தி.இராசநாயகம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(C-9830)

# மரண அறிவித்தல்



## திருமதி சாந்தினிதேவி சுப்பிரமணியம்

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தினிதேவி சுப்பிரமணியம் 29.09.2017 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - செல்லாச்சியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப் பிள்ளையின் அன்பு மருமகளும் பரம்நாதன் - நவமணியின் பெறாமகளும் செல்லையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் நிலானி, சிவானி, சுகிர்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவரான துரைரட்ணம் மற்றும் கமலாதேவி, யோகேஸ்வரன் (சுவிஸர்லாந்து), உமாநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்மராஜா, பிரபாகரி (சுவிஸர்லாந்து), திருஞானசம்பந்தமூர்த்தி, சிவபாக்கியம், மங்களேஸ்வரி, சுபா மற்றும் காலஞ்சென்றவர்களான அன்னலக்சுமி, தங்கலக்சுமி ஆகியோரின் மைத்துனியும் தயாளசீலன், லோகதாஸ், தனுசியா ஆகியோரின் அன்பு மாமியாரும் பவினரூபி, பௌசிகா, சரண்யன், பவிதரன், கஜனன், லக்னேஸ், அக்ஷயா, அர்ச்சனா, யதுர்சன், யாதவி, யனுஷ்கா, கஜானன், கனிஸ்ரன், கபிசன், கபிசா, ருபினா, டயான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பகீர், பிரதீசன் - சகிதா, மதனிகா, சுதர்சன் - தர்சினி, சிவதர்சன் - நிர்மலா மற்றும் காலஞ்சென்றவரான சுதர்சினி ஆகியோரின் பாசமிகு சித்தியும் தேவதர்சன் - டினுசா, ரஜிதன் (சுவிஸர்லாந்து), கெயின்ஸ் - விஜயமலர், கணேஸ்வரன் - சுலக்சனா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2017) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வில்லுமதவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
வீரபத்திரர் கோயிலடி, நீர்வேலி


(853)

தகவல்:- குடும்பத்தினர்
T.P:- 077 183 2456, 077 850 5131

# கண்ணீர் காணிக்கை

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவரும் சிறிசுபா பேக்கரி உரிமையாளராகிய திரு.இ.பேரின்பநாயகம் அவர்களின் அன்புச் சகோதரன்

## இராசலிங்கம் நாகராஜா



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**
**நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.**

குறிப்பு:- அன்னாரின் இறுதிக்கிரியை கண்டி வீதி, நுணாவில் சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் 2017.10.02ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை சங்கத்தின் அங்கத்தவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

[illegible]
செயலாளர்

(C-9829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ministry of National Integration and Reconciliation
# தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு

## Request for Proposal (RFP)
## முன்மொழிவுக்கானகோரிக்கை (RFP)

## 50,000 Brick and Mortar Type Housing Programme for North and East
## வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 50,000 நிரந்தர கல்வீடுகளை அமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்

## Financing and Construction of 50,000 Permanent Brick and Mortar Type Houses for the Conflict Affected Families in the Northern and Eastern Provinces of Sri Lanka
## இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50,000 நிரந்தர கல்வீடுகளை நிர்மாணித்தலும் நிதி ஈட்டலும்

1. The Government of the Democratic Socialist Republic of Sri Lanka intends to construct **50,000 brick and mortar type housing units** under contractor-driven modality for the persons affected by conflict in Northern and Eastern Provinces of Sri Lanka by using funds arranged by the bidder on a competitive soft term from reputed Donors or Financing Institutions.

2.The Chairman, Cabinet Appointed Negotiation Committee (CANC), on behalf of Ministry of National Integration and Reconciliation invites sealed Request for Proposals (RFP) from the eligible bidders (national or international or Joint Ventures) for the Construction of 50,000 permanent houses under various packages.This is organized and sliced into number of packages and each package will have 500 housing units. The total number of packages will be 100. A bidder may apply for one or more packages.

3.These houses will be individual housing units with the plinth area of 550 Sq.ft extent per house and should have two bed rooms, living room, verandah, kitchen and toilet facilities.

4.The bidder shall establish a firm commitment of funding from the reputed donors or Funding Agency or Agencies for 100% financing of the relevant package or packages of the project on competitive soft financing arrangements. The Government of the Democratic Socialist Republic of Sri Lanka or its authorized agency will enter into a financing agreement (national / international) with the reputed donor or Funding Agency/ Agencies proposed by the successful bidder. The contractor to be employed will be selected in accordance with the criteria set out in the RFP.

5.RFP will be considered through competitive bidding procedure and is open to all eligible bidder who fulfilled the minimum criteria described in the RFP document.

6.The bidder should submit confirmed financing arrangement with soft terms with a firm commitment letter from internationally or locally recognized and credibility rated bank, financial institution or donor acceptable to the Central Bank of Sri Lanka and Ministry of Finance of Sri Lanka. Financing facility for packages for which bids are submitted should be clearly confirmed without any ambiguity by the financing bank, institution or donorand should be supported with detailed Term Sheet. The financing arrangements with soft terms should be in the form of interest, grace period and repayment period.

7.Interested eligible Bidders may obtain further information from Secretary/ Programme Coordinator, Ministry of National Integration and Reconciliation and inspect the RFP documents at the address given below from 9.00 hours to 15.00 hours on working days from **2nd October 2017 to 12th November 2017**

Ministry of National Integration and Reconciliation(2nd Floor)
No.34, Narahenpita Road,
Nawala, Sri Lanka.
Email address:
ministrysec.nir@gmail.com
Telephone /Facsimile:
Telephone : +94-11-2805360 ;
Fax : +94-11-2806530.

8.A complete set of RFP documents in English language may be purchased by eligible bidders on submission of a written application on a business letterhead to the address above and upon payment of non- refundable fee of SL Rs. 60,000.00 in cash or Bank draft (acceptable by the Central Bank of Sri Lanka) in favour of Secretary, Ministry of National Integration and Reconciliation from **2nd October 2017 to 12th November 2017 from 9.00 a.m to 3.00 p.m** on any working day.

The bidder who wishes to receive the RFP by couriers shall authorize the Ministry to do so.The Ministry will promptly dispatch the hard copy of the documents by courier service on payment of a non-refundable fee but under no circumstances will be held responsible for late delivery or loss of the documents so mailed. An additional non-refundable fee of SL Rs. 20,000.00 should be paid for dispatching the documents by courier.

9. All bids must be accompanied by a bid security as set out in the RFP. Proposals shall be submitted in one (01) original and two (02) copies delivered to the address below **on or before 2.00 p.m on 13th November 2017.**

**"Secretary, Ministry of National Integration and Reconciliation, No.34, Narahenpita Road, Nawala, Sri Lanka"**

The proposals should be submitted under **two envelops system** as set out in the RFP document. Bids shall be marked on the top left hand corner of the envelop **"RFP for 50,000 Housing Programme".**

Bids will be opened immediately after closing of bids.

10. Proposals which are received late will be rejected and returned unopened.The Ministry of National Integration and Reconciliation will not be responsible for any costs or expenses incurred by Bidders in connection with the preparation or delivery of RFP.

11. RFP Documents will be issued from 2nd October 2017.

**Chairman, CANC**
**Ministry of National Integration and Reconciliation**
***No. 34, Narahenpita Road, Nawala, Sri Lanka.***

(C-139)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழில் இன்று கையெழுத்துப் போர்

## த.தே.ம.முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கையெழுத்துப் போராட்டம் இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக நடைபெறும்.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தன்று இலங்கைத் தீவில் வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கிடைக்க வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மாறி மாறி ஆட்சிப் பீடமேறிய சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது கலவரங்கள் என்ற போர்வையில் திட்டமிட்டு மேற்கொண்ட இனவழிப்பு நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கான சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டும், அங்கவீனர்கள் ஆக்கப்பட்டுமுள்ளதுடன், பல்லாயிரக்கணக்கானோர் அநாதைகளாவும் ஆக்கப்பட்டுமுள்ளனர்.

குறிப்பாக இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளைமோர்த் தாக்குதல்கள் மூலம் பெருமளவு பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

செஞ்சோலை சிறார் இல்லம் உட்பட பொது மக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களிலும், தரை மற்றும் கடல் வழித் தாக்குதல்களிலும் பெருமளவான சிறார்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அது மட்டுமன்றி யுத்த முடிவில் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகளுடன் சென்ற அவர்களது பிள்ளைகள் நூற்றுக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பாலச்சந்திரன் உட்பட பல சிறார்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கோரும் வகையிலான விழிப்புணர்வுப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இப்போராட்டத்திற்கு அனைத்து பொதுமக்களையும், பொது அமைப்பு சார்ந்தவர்களையும் கலந்து கொண்டு வலுச் சேர்க்குமாறு அழைக்கின்றோம் என த.தே.ம. முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. (இ-4)

## சீரடி சாயிநாதனின் சமுத்திரத் தீர்த்தம்

நாவலர் வீதி, நல்லூர் சீரடி சாயிநாதனின் சமுத்திரத் தீர்த்தப் பெருவிழா எதிர்வரும் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு பருத்தித்துறை சுப்பர் மடம் தீர்த்தக் கரையில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் ஆர்.கணேசானந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

## புதிய கட்டடத் திறப்பு விழா

மக்கள் வங்கி-புலோலி சேவை நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா நாளை 2ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.15 மணிக்கு பிரதான வீதி, மந்திகையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி, சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய உதவி முகாமையாளர் சி.நித்தியானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

## ஆதார வைத்தியசாலையில் ஆயுத பூஜை



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஆயுத பூஜை இடம்பெற்றது.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மூளாய் வீதி, மாவடிச் சந்தியில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை பால் கொள்வனவு விற்பனை நிலையத்தில் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெறும். (இ-3)

## வர்த்தக ஒருங்கிணைப்பை ஸ்தாபித்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

பிரதேச மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் வர்த்தக ஒருங்கிணைப்பை ஸ்தாபித்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை 2ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் என பிரதேச செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ரகுநாதன் அறிவித்துள்ளார். (இ-3-60)



நெல்லியடி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப பீடத்தினை கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் காலை திறந்து வைத்தார். (படங்கள்:-மகாலிங்கம்)

## இராசி பலன்

**மீனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் அதிகரிக்கும் நாள்.

**மேடம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு.

**இடபம்:** ஆன்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்:** மனச்சஞ்சலங்கள் கூடும் நாள், வேலைச்சுமை கூடும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூனர்பூசம், பூசம் | | ராகு |
| சந் கேது | | | செவ், சுக் |
| | குரு | சனி | சூரி, புத |

01.10.2017
(புரட்டாதி 15, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 1.55 மணிவரை
திருவோணம் முன்னிரவு 7.28 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
ஏகாதசி விரதம்
உலக முதியோர், சிறுவர் தினம்

வளவன்

**கடகம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**சிம்மம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப செய்திகள் ஏற்படலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், எடுத்த காரியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன ... பிக்கை ... நாள்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் ஆர்வம் காட்... வாக்குமேன்மையுண்டு.

**கன்னி:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் தீர்த்தத்திருவிழா சிறப்பிதழ்-01.10.2017

மகாலக்ஷ்மி ரேடர்ஸ்
MAHALUXMY TRADERS

(சீ-9827)
பலசரக்குப் பொருட்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 021 221 9125

CITY MEDICAL CARE (PVT) LTD


40ஆவது ஆண்டுக்குள் காலடி வைக்கும் எமது தாபனத்துக்கு யாழ். மாவட்டத்தில் வேறு கிளைகள் கிடையாது.
CITY MEDICAL CARE (PVT) LTD,
NO.558A HOSPITAL ROAD, JAFFNA.
021 221 7661
CITY MEDICALS NO.487, HOSPITAL ROAD, JAFFNA.
T.P: 021 222 3880, 021 222 7693

## மகிந்தவால் உருவாக்கப்பட்ட மாகாண சபை

# வடக்கு மக்கள் ஜனநாயக ரீதியில் செயற்பட நாங்களே வழியேற்படுத்திக் கொடுத்தோம்

## பசில் ராஜபக்ஷ யாழில் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

வடக்கில் தற்போது வரை மகிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட மாகாண சபையே இயங்கி வருகின்றது என தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ வடக்கு மக்கள் ஜனநாயக ரீதியில் செயற்பட நாங்களே வழியேற்படுத்தி கொடுத்தோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் பயணமாக வடக்கிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள பசில் ராஜபக்ஷ நேற்றுக் காலை 9 மணியளவில் நல்லூரில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டதன் நோக்கம் வடக்கில் ஜனநாயக ரீதியில் செயற்படுகின்ற எமது கட்சி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவே. இவ்வாறு எமது கட்சியின் செயற்பாடுகளை ஆரம்பித்து அதனூடாக மக்களின் சகவாழ்வினை அறியவும் கருத்துக்களை கேட்டறிந்து அவர்களின் முறைகளை நிவர்த்தி செய்வதுமே எமது நோக்காகும். அவ் வேலைத் திட்டத்தின் முதல் கட்டமாகவே நல்லூர் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் எமது வேலைகளை ஆரம்பித்தோம். தற்போது வடக்கிலே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட மாகாண சபையே உள்ளது. வடக்கிற்கு மாகாண சபை தேர்தலை நடத்தியது மகிந்த ராஜபக்ஷவே.

மேலும் மக்களுக்கு நல்லாட்சியை கொடுப்பதே எமது நோக்கமாகும். அதனை தொடர்ந்து செய்யவே நாம் மீண்டும் வந்துள்ளோம் எனத் தெரிவித்தார். இதே வேளை மகிந்த ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்சியான ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணிக்கு ஆட்சேர்க்கும் வகையில் யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் பசில் ராஜபக்ஷ சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் நல்வளர்ச்சிக்கு எதிரான அனைத்து தடைகளையும் அகற்றுவோம்

## உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி

கபடமற்ற தன்மையினதும் அழகினதும் உலகச் சின்னமாகவே பிள்ளைகள் திகழ்கின்றனர். உலகில் எந்த தேசத்திலாவது எந்த இனத்தை அல்லது எந்த மதத்தை தழுவி பிறந்த போதிலும் மானிட வர்க்கத்தின் எதிர்காலத் தலைவிதியின் ஆக்குவிப்பாளர்களாக அவர்களே இருக்கின்றனர்.

பிள்ளைப்பருவம் என்பது அறிவை நாடும் அல்லது அறிவைத் தேடும் பருவமாகும். அந்த வகையில் நீண்ட பிள்ளைப்பராயத்தை கொண்ட மனித இனமானது அந்த நீண்ட பிள்ளைப் பராயத்தில் எதிர்கால மனித உலகின் அறிவை சேகரிக்கின்றனர். ஆச்சரியம் நிறைந்த விழிகளாலும் வியப்பு மிக்க கேள்விகளாலும் உலகின் வியக்கத்தக்க உருவாக்கத்தை புரிந்து கொள்ளும் பிள்ளைகளுக்கு சுதந்திரமாக அறிவை சேகரித்துக் கொள்வதற்கும் கற்பனா சக்தியை வளரவிடுவதற்கும் உணர்வதற்கும் தக்க சூழலை அமைத்துக் கொடுப்பது வளர்ந்தோரின் பொறுப்பாகும்.

தாம் பெற்ற வாழ்க்கையை விட வளமான பரிபூரணமான வாழ்க்கையினை தமது பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பதே ஒவ்வொரு வளர்ந்தோரினதும் எதிர்பார்ப்பாகும். அரசு என்ற வகையில் சமூகப் பொருளாதார அரசியல் காரணிகளின் சுமை சுமத்தப்படாத ரம்மியமான சிறுவர் பராயத்தை நாட்டின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுப்பதே எமது எதிபார்ப்பாகும்.

பாடசாலை கல்வியினைக் கட்டாயப்படுத்தி பிள்ளைகளின் சுகாதார போஷாக்கு மற்றும் ஆத்மீகத் தேவைகளை பூரணப்படுத்துவது அரசு என்றவகையில் அதனை எமது தலையாய கடமையாக கொண்டிருப்பதற்கு காரணமும் இதுவேயாகும்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகளுக்கான பிரகடனத்திற்கமைய சிறுவர்களின் நல் வளர்ச்சிக்கு எதிராக அமையும் அனைத்து தடைகளையும் முற்றாக அகற்றுவது எமது எதிர்பார்ப்பும் கடமையுமாகும். அதனை நிறைவேற்ற ஒன்று திரட்டப்பட்ட ஒட்டுமொத்த் சமூகத்தின் கவனத்தை வென்றெடுப்பதற்கு இன்றைய தினத்தில் அமையும் உலக சிறுவர் தினமானது மிகப் பொருத்தமாக அமைகின்றது.

இவ்வாண்டின் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தாய், தந்தை, முதியோரின் அன்பு, பாசப் பிணைப்பினூடாக சிறுவர்களை அவர்களது அதிசயம் மிக்க உலகிற்குக் கொண்டு செல்வோம் என்ற தொனிப் பொருளில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற உலக சிறுவர் தின தேசிய விழாவுக்காக எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்வதுடன் சிறுவர்களுக்கான அழகிய உலகைப் படைக்க எடுக்கும் சகல முயற்சிகளும் எல்லா வகையிலும் வெற்றி பெற வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

ஜனாதிபதி
மைத்திரிபால சிறிசேன

## கின்னஸ் சாதனை விவகாரம் மத்திய மாகாணத்திற்கு புதிய கல்விச் செயலாளர்



(கொழும்பு)

மத்திய மாகாண கல்வி மற்றும் முதலமைச்சர் செயல்கம் என்பவற்றுக்கான புதிய செயலாளராக ஆர். எம்.பி.எஸ்.ரத்நாயக்க நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண ஆளுனர் நிலூகா ஏகநாயக்கவினால் இந்த நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

கின்னஸ் சாதனைக்காக மணமகளின் நீண்ட சேலையைப் பிடிப்பதற்கு பாடசாலை மாணவர்களை பயன்படுத்தியமை தொடர்பில் மாகாணத்தின் கல்விச் செயலாளர் அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டார். இவருடைய இடத்துக்கே புதிய செயலாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## ஆஸியில் கம்மன்பிலவுக்கு 2 வீட்டுத் தொகுதிகள்

### விசாரணை ஆரம்பம்



உதய கம்மன்பில மற்றும் அவரது சகாக்களின் மோசடிகள் தொடர்பில் விசேட விசாரணைப் பிரிவுக்கு நேற்று முன்தினம் தகவல்கள் கிடைத்துள்ளன. இத்தகவல்களில் கம்மன்பில எம்.பியின் அவுஸ்திரேலியாவிலுள்ள சுமார் 78 கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு வீடமைப்பு திட்டங்கள் பற்றிய தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விசேட விசாரணைப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களுக்கமைய டாக்டர் சமன் பதுகே மற்றும் டாக்டர் அபயகோன் குணரத்ன ஆகிய இருவரும் இணைந்து "சமன் என்ட் அபய" எனும் தனியார் கம்பனியொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இக்கம்பனியின் கீழ் 78 கோடி ரூபாய் பெறு மதியான சொத்துக்கள் கொள் வனவு செய்யப்பட்டுள்ளன. தனது மோசடிக் கொள்வனவு மூலம். கம்மன்பில இதற்கு உதவி வழங்கியுள்ளாரென்றே இம்முறைப்பாட்டில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அவுஸ்திரேலியாவில் மேலும் இரண்டு வீடமைப்புத் திட்டங்களை இக் கம்பனி கொண்டிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. உதய கம்மன்பில எம்.பிக்கு எதிராக விசாரணையை முன்னெடுக்குமாறு சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ, எக்சத் ஜனதா பெரமுன தலைவர் சிறிமாசிறி ஹப்புவாரச்சி ஆகியோர் இத்தகவல்களை விசேட விசாரணைப் பிரிவுக்கு வழங்கியுள்ளனர். மேற்படி கம்பனியால் அவுஸ்திரேலியாவில் கெம்ப்பெல் வீதி, தோமஸ் வீதி, மவுன்டன் ஹில் மற்றும் கோர்ட் வீலர்ஸ் ஹில் ஆகிய இடங்களில் வீடமைப்புத் திட்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக விசேட விசாரணைப் பிரிவுக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. (இ-7)

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்துக்கு சிவப்பு சமிக்ஞை

சைட்டத்தை சட்ட ரீதியான நிறுவனமாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன்னெடுத்து வரும் சகல முயற்சிகளையும் நிறுத்தவில்லையாயின் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி திடீர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பான தீர்மானத்தை அச்சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே தெரிவித்தார். (இ-7)

## ரோஹிஞ்யா அகதிகள் மீது தாக்குதல் நடத்தியவர் கைது

### பொதுபல சேனாவின் வேட்பாளர்

(கொழும்பு)

மியன்மார் ரோஹிஞ்யா அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த கல்கிஸையிலுள்ள வீட்டின் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் ஒருவர் நேற்று முன்தினம் மாலை பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவப் பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் பொதுபல சேனாவின் முன்னாள் செயற்பாட்டாளர் எனவும் கடந்த தேர்தலில் பொதுபல சேனாவின் சார்பில் போட்டியிட்ட ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/7166

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா:செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/சாரதி
தொ.இ: B/7167

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 8 இல்
தகைமை/தொழில்:BSc, MPill/ விரிவுரையாளர்
தொ.இ: B/7168

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
தகைமை/தொழில்:BSc Eng/ பொறியியலாளர்
தொ.இ: B/7169

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/7195

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 16செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/7197

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 43 செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7199

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/7200

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவருக்கு மரண தண்டனை

2006 ஆம் ஆண்டு ஒருவரை படுகொலை செய்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்ட ...ந்த மூவரை குற்றவாளிகளா இனங்கண்ட பாணந்துறை மேல் நீதிமன்றம் அவர்கள் மூவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

பாணந்துறை மாபெல்ல பிரதேசத்தில் தேவகே பியந்த என்பவரை கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு மற்றொருவரை கத்தியால் வெட்டி காயப்படுத்தினர் என்று குற்றம்சாட்டியே இந்த மூவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட்து.

அந்த மூவருக்கும் எதிரான வழக்கு பாணந்துறை மேல் நீதிமன்றத்தில் கடந்த 29ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிபதி மேற்கண்டவாறு தண்டனை விதித்துள்ளார்.

குற்றவாளிகளான பாணந்துறை அலுபோமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சுராஜ் பியந்த (வயது-45), நிலந்த சமிந்த பெரேரா (வயது- 45) மற்றும் மனோஜ் நிஷாந்த (வயது- 48) ஆகியோருக்கே இவ்வாறு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (இ-7)


# மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்

## திரு.சி.ஸ்ரீஇராகவன்

(பிரதி அதிபர், யாழ்/புத்தூர்கலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம், புத்தூர்.)



01.10.2017 இன்று
60ஆவது அகவையை
பூர்த்தி செய்து மணிவிழாவை
கொண்டாடிக் கொண்டு இருக்கும்
**திரு.சி.ஸ்ரீஇராகவன்**
அவர்கள்
சகல நலன்களும் பெற்று
நீடூழி காலம் வாழ்க வாழ்க
என வாழ்த்துகின்றோம்.

சந்தை ஒழுங்கை,
ஆவரங்கால் மேற்கு.

வாழ்த்தி மகிழும்
குடும்ப உறவுகள்.


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-07 பாஷையூர் 2ஆம் குறுக்குத்தெரு வீதி ஆதன இல. 3 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சம்பூரணம் பெண் செல்லம்மா என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் பாஷையூர் கடற்கரை வீதி 169/2ம் இலக்கத்தைச் சேர்ந்த ஆசீர்வாதம் தம்பிராசா அல்லது ஆசீர்வாதம் செபஸ்ரியாம்பிள்ளை, பிரசித்த சொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 353ம் இலக்க 1982/10/13 ஆம் திகதிய பிரகடன உறுதியில் இதே நொத்தாரிசு முகதாவில் 352ம் இலக்க 17/10/1982 இல் தனது பெயரில் முடித்த அறுதி உறுதியின் படி நில.பர.குளி 2 1/4 உம் மேற்கூறிய ஆதனத்தில் தனது தாயார் காலஞ்சென்ற பேனாட் ஆசீர்வாதம் பெண் இராசாத்தியின் வழியில் முதுசமாய் வந்தடைந்த குளி 1 1/8 உம் மேற்கூறிய ஆதனத்தில் காலஞ்சென்ற சம்பூரணம் சந்திரராசவிடம் இருந்து கொள்வனவு செய்த குளி 2 1/4 உம் ஒருங்கிணைந்து ஒரே துண்டுக்காணியான குளி 5 1/16 உம் தனது உரிமையும் தடையற்ற ஆட்சியுமானதென பிரகடனப்படுத்தியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 570 இலக்க 1984/07/08 ஆம் திகதிய அறுதி உறுதியால் ஆசீர்வாதம் தங்கராசா அல்லது ஆசீர்வாதம் செபஸ்தியாம்பிள்ளை குருநகர் கொண்டடி வீதி 10/4ஐ சேர்ந்த பேபியன்ஸ் அன்ரன் உதயகுமாருக்கு அறுதியாக வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 4420 இலக்க 2012/09/21ஆம் திகதிய அறுதி உறுதியால் பாசையூர் சென்யூட்ஸ் வீதியைச் சேர்ந்த முன்பு குருநகரைச் சேர்ந்தவருமாகிய பேபியன்ஸ் அன்ரன் உதயகுமாரன் அதே இடத்தைச் சேர்ந்த சென்செபஸ்தியன் வீதி 24ம் இலக்கத்தைச் சேர்ந்த பேபியன்ஸ் டான்சியஸ் மதிவாணனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று பாஷையூர் இறை "சின்ன மெஞ்ஞன் கந்தன் குடியிருப்பு" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களின் வரைபட இலக்கம் 1180/2009/11/29 இல் துண்டு -1 என காட்டப்பட்ட நில.பர.00 குளி.05.64 ஆகும். இதற்கு எல்லை

கிழக்கு: பாஷையூர் 2ஆம் குறுக்கு தெரு
வடக்கு: எஸ்பி ரியல் பெண் டொனேற்றா,
தெற்கு: கடற்கரை வீதி
மேற்கு: செகராயசிங்கம் ஞானசீலன்

தற்போது இவ்வாதனத்தை பேபியன்ஸ் டான்சியஸ் மதிவாணன் என்னும் பெயரில் எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பேபியன்ஸ் டான்சியஸ் மதிவாணன் என்னும் பெயரிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகர ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(ஜி-9821)

# அமைதிக்காக சர்வமத சமாதான ஊர்வலம்

(கொழும்பு)




உலக சமாதான தினத்தை அனுஷ்டிக்கும்முகமாக தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வ மதப் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட சமாதான ஊர்வலம் நேற்று இடம்பெற்றது.

சமாதானத்தின் அவசியம் உணரப்பட்டுள்ள சமகாலத்தில் அதனைச் செயலுருப் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதை வலியுறுத்தியும் இந்தச் சமாதான ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்ததாக பேரவையின் இணைப்பாளர் இராசையா மனோகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு திருமலை வீதி தாண்டவன்வெளி காணிக்கை மாதா தேவாலய முன்றலில் இருந்து காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இவ்வூர்வலம், மட்டக்களப்பு காந்திப் பூங்காவைச் சென்றடைந்தது.

இந்தப் பேரணியில் பங்கு கொண்டவர்கள் "காணாமல் போனோர் தொடர்பாக அரசே பதில் கூறு, ஊழல் மோசடிக்காரர்களை சட்டத்துக்கு முன் நிறுத்து, அதிகாரத்தைப் பகிர்ந்து தேசிய இனப்பிரச்சினைக்கு முடிவுகட்டு, கிழக்கு மக்களின் நிலங்களை உடன் கையளி" என்ற பதாகைகளை தேசிய நல்லிணக்கத்துக்கான கிழக்கின் குரல் என்ற பெரும் கோஷத்துடன் வலியுறுத்தினர். (இ-7)

# தமிழக மீனவர்களின் 7 படகுகள் விடுவிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை மீட்க வந்த மீட்புக் குழுவினர் விடுவிக்கப்பட்ட படகுகளில் ஏழு படகுகளை மீட்டுள்ளனர். அத்துமீறி மீன்பிடித்த தமிழக மீனவர்களைக் கைது செய்த கடற்படையினர் அவர்களது படகுகளையும் கைப்பற்றியிருந்தனர். முன்னதாக படகுகளை ஆய்வு செய்திருந்த தமிழக மீனவர் குழுவினர் அவற்றுள் 38 படகுகளை மட்டும் மீட்க முடிவு செய்திருந்தனர்.

அதன்படி இலங்கை வந்த மீட்புக் குழுவினர் ஏழு படகுகளை மட்டும் மீட்டெடுத்து காரைநகர் துறைமுகத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். (இ-7)

# வயோதிபரின் சடலத்தை பொறுப்பேற்கவும்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் மரணமடைந்த வயோதிபர் ஒருவரின் சடலத்தை பொறுப்பேற்குமாறு பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா அறிவித்துள்ளார்.

சந்நிதி கோவிலுள்ள மடம் ஒன்றில் இருந்த ஏழாலை கிழக்கைச் சேர்ந்த இளையதம்பி சிவஞானம் (வயது-77) என்பவர் ஊறணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இவரின் சடலம் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி ச.சிவராஜாவின் பணிப்பிற்கமைய வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையுடனோ அல்லது வல்வெட்டித்துறைப் பொலிஸாருடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும் என அறிவித்துள்ளது. (இ-60)

# ஈ-சிற்றி விருது வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இயங்கிவரும் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கில,சிங்கள, கணனிப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ்கள் மற்றும் சமூக சேவை செய்தவர்களுக்கான கௌரவிப்பு வைபவம் என்பன கல்லூரியின் அதிபர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் இயந்திரவியல் பிரிவின் தலைவர் கலாநிதி சிவகுமார் சிவசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி மிமலா தேவி விமலநாதன் மற்றும் கௌரவ விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 95 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 450 | 350 | 400 | 600 |
| தக்காளி | 200 | 100 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 40 | 80 | 60 |
| கோவா | 180 | 80 | 140 | 160 |
| கரட் | 200 | 90 | 180 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 60 |
| புடோல் | 100 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 75 | 100 | 120 |
| பாகற்காய் | 600 | 230 | 280 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 90 | 120 | 160 |
| லீக்ஸ் | 180 | 140 | 160 | 160 |
| பீற்றூட் | 60 | 30 | 70 | 120 |
| கறிமிளகாய் | 250 | 200 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 130 | 150 | 160 |
| போஞ்சி | 250 | 140 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 130 | 180 | 160 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 40 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 70 | 70 | 60-100 |
| இராசவள்ளி | 450 | 250 | — | 400 |
| வெங்காயப்பூ | 200 | 120 | — | 200 |
| முள்ளங்கி | 100 | 25 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 07 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 25 | — | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிந்த உலகம் உனக்காக

இயற்கையின் படைப்பு இறைவனின் அரவணைப்பு
ஐம்பூதங்களின் பரிணாமம் உயிர்களின் ஆரம்பம்
அன்னையின் தந்தையின் அன்புப் பந்தம்
கருவறையினில் உருவாகும் மொட்டுக்கள்

இவர்களே எதிர்கால விடியல்கள் நாளைய தலைவர்கள்
வரலாற்றில் புதுயுகம் படைக்கும் மனிதர்கள்
உங்களின் புது விடியல் உமைப்படிக்க
பெருமைமிகு காவியமாய் யுகம் படைப்பீர்

பெற்றோர் சொல் கேட்டுவீர் பெருமைகள் பல படைத்திடுவீர்
உற்றார் உன்புக் பேசிடவே உள்ளொளி வீசிடுவீர்
கற்றோர் உமைப்போற்ற பாரினிலே யுகம் படைப்பீர்
மற்றோர் உனை வாழ்த்த வையகத்தை வாழ வைப்பீர்

எங்கேயாவது செல்வதாயின் யாருடன் செல்கின்றீர்
ஏன் எந்த இடம் செல்கின்றீர் என்பதை பெற்றோரிடம் சொல்லிவிடு
ஆபத்து ஏற்படும் இடத்தை தவிர்த்து விடு
ஏனெனில் உன்னை ஆழ்மனம் அழித்து விடும்.

உம்மை சுற்றிப் பார்த்திடுவீர் உமக்கருகில் காத்திருப்பர் கயவர்கள்
ஆபத்து ஏற்பட்டால் பெரியோரிடம் சொல்லிவிடு
நீங்கள் விரும்பாத வகையில் உங்களுக்கு ஏதும் செய்து விட்டால்
உடனடியாக வேண்டாம் என்று சொல்லிவிட்டு உரத்து சத்தமிடு

உமைப் படைத்த இறைவன் பாரினிலே சிரிக்கின்றான்
ஏனெனில் நீர் வாழும் பூமியாய் மாற்றிடுவீர் என்று
சிறுவர்களே சிறுமியரே இதழ்களை விரித்து மலர்ந்திடுவீர்
மலரும் மொட்டுக்களே பாரினிலே யுகம் படைப்பீர்

உமையழிக்க காத்திருக்கும் பீசாகட் வேண்டாம்
ஜீஸ் பக்கெற் வேண்டாம் பக்கெற் சிக்கின் வேண்டாம்
இயற்கையின் பசுமைகளை பாங்காய் உணர்ந்திடுவீர்
இயற்கை தந்த உணவுகளை இன்பமாய் நுகர்ந்திடுவீர்

திருமதி . பரமேஸ்வரி பரமசிவம்
ஆசிரியை யா/ நாவாந்துறை
றோ.க.வித்தியாலயம்.

# சிறுவர்களுக்கான விளையாட்டு செயற்றிட்டம்




கொக்குவில் பொது நூலகத்தில் சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தலும் உள ரீதியாக ஆற்றுப்படுத்தி இன்றைய உலகின் சவால்களை எதிர்கொள்ளல் எனும் தொனிப் பொரு ளில் சிறுவர்களுக்கான உள்ளக விளையாட்டு செயற்றிட்டம் அண்மையில் கொக்குவில் பொது நூலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து தரம் 8 இற்குட்பட்ட சிறுவர்களுக்கான உள்ளக விளையாட்டு செயற்பாடுகள் கொக்குவில் பொது நூலகத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 3 மணிக்கு தொடக்கம் 4 மணிவரை இடம்பெறும் என நூலகர் இ.அனிதா தெரிவித்துள்ளார்.(இ-10)

# முதுமை என்பது புதுமை அல்ல

மூத்தோர்கள் ஆசியாவில் மிகுந்த சவாலுக்குரியவர்களாக மாறி வருகின்ற நிலைமை 1963 இன் பின்னர் ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் மூத்தோர்களின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. உலக சனத்தொகையில் அறுபது வயதிற்கும் மேற்பட்ட முதியவர்களின் தொகை 2006 ஆம் ஆண்டில் 700 மில்லியன்களாக காணப்பட்டது.

முதியோர் சனத்தொகை அதிகரிப்பானது பராமரிப்பு, சமூக, பொருளாதார நிலை, தனிக் குடும்ப வாழ்வு சமூகப் பாதுகாப்பு என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவற்றில் இருந்து விடுபடுவதற்கான வழிகளை ஆராய்வதற்கான முயற்சியாக இந்த கட்டுரை அமைகின்றது. முதியோர் வாரம் ஐப்பசி ஒன்று முதல் ஏழு வரை நினைவு கூரப்படும் இவ்வேளையில் எமது சிந்தனைகளிலும் பதிவேற்றுவதற்காக சில விடயங்களை உள்வாங்குதல் என்பதும் காலத்தின் தேவையாக காணப்படுகின்றது.

கூட்டுக் குடும்ப வாழ்வில் வாழ்ந்த எமது சமூகக் கட்டமைப்பில் பாதுகாப்பு, பராமரிப்பு, மகிழ்ச்சி, விட்டுக்கொடுப்புக்கள், பொறுப்புக் கூறும் தன்மை, மரியாதை, புரிந்துணர்வு என்பன தாராளமாக குடியமர்ந்திருந்தன. உயர்விலும் தாழ்விலும் சமநிலை காணப்பட்டது. சமூக அந்தஸ்து குடும்பங்களில் நடக்க வேண்டிய காரியங்கள் என எல்லாமே அந்த அந்த நேரத்தில் நடந்தேறியது. இன்றைய தனிக்குடும்ப வாழ்வில் இவற்றை எல்லாம் ஆச்சரியமாக தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. விளைவாக முதிர்கன்னிகள், விவாகரத்துப் பெற்றவர்கள், சமூகப் பாதுகாப்பின்றி வாழ்பவர்கள் என்ற புதுப்பிரசவங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குடும்பங்களுடன் மூத்தோரின் இருப்பு இல்லாமல் போனமையால் ஏற்பட்ட தன்மையே முன்னிலைக் காரணமாக காணப்படுகின்றது.

மூத்தோர்கள் குடும்பங்களில் இருந்து விலகியமைக்கான காரணமாக இயலாத நிலையில் பராமரிப்பு என்பது காணப்படுகின்றது.

இன்று முதுமைக்கு முன்னரே முதுமையில் யாருடன் ஒரு பிள்ளையை ஏனும் உள்நாட்டில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற சுயநல எண்ணம் இதனால் பெற்றோருக்கு ஏற்பட்டு விடுகின்றது. இன்று அந்த ஒரு பிள்ளையும் கூட எந்த அளவில் தனது பெற்றோரை பராமரிக்கின்றது என்பது பெரிய கேள்விக்குறியாக முன்எழுந்து நிற்கின்றது.

உலகில் மூத்தோர்கள் அதிகமாக காணப்படும் நாடு ஜப்பான். உலகில் மூத்தோர்கள் மகிழ்வாக இருக்கும் நாடு டென்மார்க். இந்நிலையில் 2012 இல் 60 தங்கியிருப்போரில் 40 சிறுவர்களும் 20 முதியோரும் அடங்கியிருந்தனர். இந்நிலை 2050 இல் தலைகீழாக மாற இருக்கின்றது. தனியார் துறையில் வேலை செய்யும் 70 வீதமானோரில் 25 வீதமானோரே சமூகப்பாதுகாப்பை முதுமையில் பெறுகின்றனர். இலங்கையில் தொழில் புரிவோரில் 50 வீதமானவர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

எனவே முதியவர்களுக்கு சமூகப்பாதுகாப்புக்களை வருமானம் அற்றநிலை தங்கி வாழும் நிலையை ஏற்படுத்தப் போகின்றது.

முதுமையில் பாதுகாப்பு என்பது அவசியமான விடயமாக அமைகின்றது. கீழே விழுதலை தவிர்த்துக் கொள்ளும் போது சுகமான முதுமையை பூரணமாக அநுபவிக்க முடியும். முதியவர் எப்போது கீழே விழுகின்றாரோ அன்று முதல் அவரது இயக்கம் தடைப்பட்டு விடுகின்றது. படுத்த படுக்கையான நிலைமையை நோக்கியதான பயணிப்பு ஆரம்பிக்கப்படுகின்றது. உடலை பேணுவதும் மனதை திடகாத்திரமாக வைத்திருத்தலும் விடுதலை தவிர்க்கும் வழிகளாக அமைகின்றன.

மூத்தோருக்கான தேவைகளில் சரியான , சுவையான உணவாக நேரத்திற்கு கிடைக்கும்போது இயல்பான மகிழ்வாக அமைகின்றது. அன் பாக முதலில் கொடுத்தல் என்ற விடயம் முன்னிலைப்படுத்தப்படும் போது எதிர்பார்ப்பு நிறை வேறி குழந்தை மனம் படைத்த மூத்தவர்கள் மகிழ்வுறுகின்றார்கள். உணவுகளைப் போட்டு கோப்பைகளைத் தள்ளி விடுவது, போட்டுச் சாப்பிடுங்கோ எனக் கூறுவது, போட்டு வைச்சிருக்கு சாப்பிடு ங்கோ எனக் கூறுவது மூத்த வர்களை இம்சைப்படுத்துகின்றது. விரக்தியின் எல்லைக்கு அழைத்து செல்கின்றது என்ற விடயங்களும் புரியப்படாமல் காணப்படுகின்றது.

உலகமயமாக்கலில் பலவிதமான தேடல்கள் செய்ய வழியேற்பட்டாலும் நல்லது கெட்டது எவை என்பதை பகுத்தறிந்து உள்வாங்கும் அளவிற்கு குடும்பச் சூழல் ஏற்படுத்தப்படவில்லை. இப்பணியை முதியவர்கள் முன்பு செய்து கொண்டிருந்தார்கள் . வழிப்படுத்தினார்கள். தமது அனுபவங்கள் மூலம் துன்பங்களை கடந்து செல்ல வழி காட்டினார்கள். இன்று துன்பங்களுக்குள் வீழ்ந்தவர்களை மீட்க முடியவில்லை. வாழ்க்கை முடிந்து விட்டதாக முடிவெடுத்து தத்தளிக்கின்றார்கள். தங்கள் துயரங்களை மூத்தவர்களுடன் பகிர்ந்து கொண்டவர்கள் தம்மை சமூகத்தில் மீளவும் நிலை நிறுத்தியமை உய்த்துணரப்பட்டுள்ளது.

இன்று உண்மையான அ[illegible]பின் இருப்பிடம் என்பது மூத்தோர் பராமரிப்பின் பிறப்பிடமாக காணப்படுகின்றது. காத்திரமான சமூகவலுவூட்டலுடன் சமூகப் பாதுகாப்பு என்பது மூத்தோர் மத்தியில் கட்டி எழுப்பப்பட வேண்டிய தேவையாக உள்ளது. இதற்கு சமூகத்தில் வாழ்கின்ற குடும்ப அலகின் ஒவ்வொரு உறுப்பினரும் ஊன்றுகோலாக இருக்க வேண்டும். முதுமை அனைவருக்கும் பொதுவான ஒன்று. அதிலும் இளமை மிளிரும் முதுமை என்பது சிறப்பிற்குரியதாக அமையும். இந்நிலையை சிறப்பாக எதிர்கொள்ளத்தக்க நேரிடையான மனப்பக்குவம் வளர்த்தெடுக்கப்படுதல் என்ற விடயத்தை அனைவரும் உள்வாங[illegible] வேண்டும்.

இந்த நிலைப்பாடே காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. கற்றுணர்தல் என்ற விடயத்தை காலம் உணர்த்திநிற்கையில் மெய்நிலையை ஜீரணித்துக் கொள்வதே தேவையாக அமைந்துள்ளது.

தங்கவடிவேலு கிருபாகரன்
அத்தியட்சகர்,
அரச முதியோர் இல்லம்
கைதடி.

# வேலையில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினை

## கல்வி இராஜாங்க அமைச்சர் கவலை

ஆயுதக் களஞ்சியமாக இருந்த இடத்தில் அறிவுக் களஞ்சியமான கட்டடத்தை திறந்து வைப்பதிலே நான் பெருமகிழ்வடைகிறேன் என கல்விஇராஜாங்கஅமைச்சர்வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழில்நுட்பபீடக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாட்டிலே அரசியல் பிரச்சினை ஒரு புறமிருக்க வேலையில்லாப் பிரச்சினை மிக முக்கியமாக இருக்கிறது. கற்றவர்கள் அதற்கேற்ப வேலை இல்லாததனால் ஏன் கற்க வேண்டும் என எண்ணுகிறார்கள். அதனாலே இந்த அரசாங்கம் தொழில்நுட்ப பீடங்களை திறந்து தொழில் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 182 பேருக்கு விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளது.

ரோஹிஞ்யா அகதிகள் விடயத்தில் மனிதாபிமானத் தன்மையை வடமாகாண சபை முன்மொழிந்து அதை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த விடயத்திலே எந்த நாட்டுப் பிரஜையாக இருந்தாலும் அவர்களிற்கு பாதுகாப்பு வழங்குவதில் இலங்கை அரசாங்கத்திற்கு எந்த வித மாற்றுக்கருத்துக்களும் கிடையாது என்பதை இந்த இடத்திலே கூறி வைக்க விரும்புகின்றேன். தமிழர்கள் மனிதாபிமானம் உள்ளவர்கள் என்பதையும் ஞாபகப்படுத்துகின்றேன்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவிற்கு தமிழ் நீதிபதிகள் தீர்ப்பின் ஊடாக இலங்கையின் நீதித்துறை நிலைநாட்டப்பட்டுள்ளது. தவறு செய்தவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட வேண்டும்.

தண்டனை கொடுக்காது விட்டால் தவறுகள் அநேகம் நடக்கும். அதனைத் தடுப்பதற்கு இது தான் வழி என்பதை அவர்கள் உறுதி செய்துள்ளார்கள். அந்த நீதிபதிகளுக்கு எங்களது பாராட்டுக்கள்.

இத் தீர்ப்பின் ஊடாக நீதி நிலை நாட்டப்படுள்ளதுடன் எந்த இன மாணவிகளும் சுதந்திரமாக செல்லக்கூடிய சூழல் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# ஆசிரியர் தின நிகழ்வு இன்று

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்தின் முதியோர், சிறுவர், ஆசிரியர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காந்திஜி சனசமூக நிலையத் தலைவர் தே.றமணதாசன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழு வின் பணிப்பாளர் தி.விமலன், வலி. கிழக்கு புத்தூர் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.ஜெனீபன், யாழ். மாவட்ட சர்வோதய இணைப்பாளர் சி.யுகேந்திரா, யாழ். மாவட்ட முதியோர் பேரவைத் தலைவர் இ.மயில்வாகனம் (ஜே.பி), கௌரவ விருந்தினர்களாக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத் தந்தை அருட் பணி ம.பத்திநாதர், வலி.கிழக்கு மத்தியஸ்த சபை உறுப்பினர் டாக்டர் வே.கணேசவேல். யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் அ.அருணந்திசிவம். யாழ். உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஞா.கெனத் மேரியன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-134)

# கலை ஆற்றுகை நிகழ்ச்சி இன்று

யாழ். இலக்கியக் குவியம் நடத்தும் கலைவெளி-I படைப்பாளருக்கான கலை ஆற்றுகை நிகழ்ச்சி இன்று முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ILEAD கணனிக் கல்வி நிறுவனத்தில் (பழைய பூங்கா வீதி, ஈச்சமோட்டை, உப தபாலகம் முன்பாக) ஜீவலிங்கம் தலைமையில் இடம்பெறும். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாழை வெட்டு உற்சவத்தின் போது... (படங்கள்:-ஐ.சிவானந்தன்)

# நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தது குறித்து பரிசோதனை செய்ய தொழில்நுட்ப வசதி இல்லை

## மத்திய சுற்றாடல் அதிகார சபை மல்லாகம் மன்றில் அறிக்கை

## மக்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கடும் ஆட்சேபனை

(யாழ்ப்பாணம்)

...னாகம் பகுதியில் அமைந்துள்ள எந்த மின்பிறப்பாக்கியில் இருந்து வெளியேறிய கழிவு ஒயில் நிலத்தடி நீரில் கலந்துள்ளது என பரிசோதனை செய்வதற்கு உரிய தொழில்நுட்ப வசதிகள் எவையும் தம்மிடம் இல்லை என எழுத்து மூல அறிக்கையினை மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மேற்குறித்த அதிகாரிகளின் அறிக்கைக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்...னர்.

சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் மற்றும் கிறிஸ் கலந்துள்ளதாகவும் பொது மக்கள் பயன்படுத்தும் கிணறுகள்பாதிக்கப்பட்டுள்ளதனால் அவை பாவனைக்கு உகந்ததில்லை என தெல்லிப்பழை பொது சுகாதார பரிசோதகரால் கடந்த 2014 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 30 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் கட்டளை பிறப்பித்திருந்தார்.

அதாவது நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை அதிகாரிகளால் 104 கிணறுகளின் மாதிரி பெறப்பட்டு செய்யப்பட்ட பரிசோதனையின் பின்னர் மன்றில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் படி சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலையத்தில் இருந்து 1.3 கிலோமீற்றர் விட்டம் வரையான பகுதிகளில் காணப்படுகின்ற நீர் மக்களின் பாவனைக்கு உகந்ததல்ல. ஒயில், கிறிஸ் என்பன ஒரே இடத்தில் தங்கி நிற்கும் திரவம் இல்லை என்ற காரணத்தினால் மின்பிறப்பாக்கியில் இருந்து சுற்றிவரையுள்ள 2 கிலோ மீற்றர் தூரம் வரையான அனைத்து பகுதிக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூலம் நீர் விநியோகம் சீரான முறையில் வழங்கப்பட வேண்டும்.

சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தை உள்ளடக்கிய வடமாகாணத்துக்கு பொறுப்பான மின்பொறியியலாளர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வடமாகாண உதவிப்பணிப்பாளர் ஆகியோர் குறித்த சுன்னாகம் பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற இரு மின்பிறப்பாக்கி நிலையங்களில் இருந்தும் எந்த மின்பிறப்பாக்கி நிலையத்தில் இருந்து வெளியேறிய கழிவு ஒயில் மற்றும் கிறிஸ் என்பன நிலத்தடி நீரில் கலந்துள்ளது என்ற அறிக்கையை இரு அதிகாரிகளும் அடுத்த வழக்கு தவணைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என கட்டளையிடப்பட்டது.

குறித்த வழக்கு இரண்டு தவணைகள் கடந்த பின்னர் நேற்று முன்தினம் திகதியிடப்பட்டிருந்தது. சுன்னாகம் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் கருணாகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் மன்றில் ஆஜராகி குறித்த ஒயில், கிறிஸ் என்பன எந்த மின் பிறப்பாக்கியில் இருந்து வெளியேறியுள்ளது என பரிசோதிக்கும் தொழில்நுட்ப வசதிகள் எவையும் எம்மிடம் இல்லை என எழுத்து மூல அறிக்கையை மன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

இதற்கு மக்கள் தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகளான சுகாஸ் மற்றும் தேவராஜா ஆகியோர் கடும் ஆட்சேபனையை தெரிவித்திருந்தனர். பரிசோதனை செய்வதற்கு தொழில்நுட்ப வசதிகள் இல்லை என்பதை முன்னரே மன்றுக்கு தெரிவித்திருக்க வேண்டும்.

காலம் தாழ்த்தி தெரிவிப்பதன் நோக்கம் என்ன? பரிசோதிக்கும் தொழில்நுட்ப வசதிகள் இல் லாமல் நிறுவனங்களுக்கு எவ்வாறு அனுமதிப்பத்திரங்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்க முடியும் எனவும் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இரு தரப்பினரின் வாதத்தையும் பரிசீலித்த நீதவான் குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (இ-9)


**வைத்தியம்**

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு/மார்பு/கை), ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: Shan's Health Care.
255, K.K.S.Rd, Kokuvil
T.P:077 035 7307

(289)





வடமராட்சி வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வாணி விழாவும் புதிய சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் த.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.
(படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)


**கல்விப் பணியை நினைவு கூருகின்றோம்**

அமரர். மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன்

முல்லைத்தீவு மகா வித்தியாலய
முன்னாள் அதிபர்,
ஓய்வு பெற்ற
கோட்டக் கல்வி அதிகாரி,
வடக்கு மாகாண சபையின்
முன்னாள் பிரதி அவைத்தலைவர்
ஆகிய அமரர்.

மரியாம்பிள்ளை
அன்ரனி ஜெயநாதன்

அவர்களின்
கல்விப் பணியை
நினைவு கூர்ந்து
அஞ்சலிக்கின்றோம்.



சி-9825

நெய்தல் கல்விச் சமூகம்,
முல்லைத்தீவு.

நெய்தல் கல்வி நிலையம்.
நெய்தல் கரங்கள் மாணவர் அமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிவசக்தி ஆனந்தனின் உருக்கமான வேண்டுகோள்

# உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை மனிதாபிமானத்துடன் பரிசீலியுங்கள்!

(அநுராதபுரம்)

**அநுராதபுரத்தில் உண்ணா விரதம் இருந்துவரும் அரசியல் கைதிகளின் உடல் நிலை மோசமடைந்து வருவதால் அவர்களின் கோரிக்கைகளை மனிதாபிமானத்துடன் பரிசீலியுங்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

வவுனியா நீதிமன்றத்திலேயே தமது வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும் எனக்கோரி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள 3 தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளையும் நீண்டகாலமாக நீதி விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால், அவர்களை பொதுமன்னிப்பின் கீழ் மனிதாபிமான முறையில் விடுதலை செய்ய வேண்டும் எனவும் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளினதும் கோரிக்கைகளை மனிதாபிமானத்துடன் அரசு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிவசக்தி ஆனந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வவுனியாவில் தமது வழக்குகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆறாவது நாளாக 3 தமிழ் அரசியல் கைதிகள் போராடி வருகின்றார்கள். அவர்களையும் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் நாடாளுமன்ற உறுப்பீனர் சிவசக்தி ஆனந்தன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மூன்று அரசியல் கைதிகள் தங்களுடைய வழக்குகளை வவுனியாவிலேயே விசாரிக்க வேண்டும் எனக் கோரியும், தங்களை மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுடன் வைத்திருக்கக் கூடாது எனக் கோரியும் ஆறாவது நாளாக உண்ணா விரதம் இருந்து வருகின்றார்கள்.

அவர்களில் ஒருவருடைய உடல்நிலை மோசமாகியிருக்கின்றது. சிறைச்சாலை வைத்தியசாலையில் அவருக்கு சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அவர்களுடைய வழக்குகளை வவுனியா நீதிமன்றத்திலேயே விசாரிக்க வேண்டும். அவர்களுடைய வழக்குகள் வேறிடத்திற்கு மாற்றப்பட்டால், சிங்களம் தெரியாத அவர்கள் மொழிப் பிரச்சினைக்கும், வேறு பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க நேரிடும். எனவே அவர்களுடைய வழக்குகளை வவுனியாவில் விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியிருந்தோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் அக் கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி கடிதம் அனுப்பியுள்ளார். அதேவேளை, மரண தண்டனை பெற்றுள்ள தண்டனைக் கைதிகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள உண்ணா விரதத்தில் ஈடுபட்டிருக்கும் கைதிகள் தங்களை அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரியிருந்தனர்.

அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அவர்களை வேறிடத்திற்கு மாற்றுமாறு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ள போதிலும், சிறைச்சாலை அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இது குறித்து சிறைச்சாலை அதிகாரிகளுடன் எடுத்துரைத்து, அக் கைதிகள் உண்ணாவிரதம் இருந்து வருவதனால், அவர்களை சிறைச்சாலையின் வைத்திய சாலைக்கு மாற்றுமாறு கோரினேன். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு அவர்கள் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.



அதேவேளை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக புதிய அரசாங்கமோ, தமிழ் அரசியல் தலைவர்களோ, தமிழ் அரசியல்வாதிகளோ அல்லது மனித உரிமைச் செயற்பாட்டாளர்களோ, சட்டத்துறை சார்ந்த நலன் விரும்பிகளோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்காத காரணத்தினால் அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ளவர்களில் 16 தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து தாங்கள் சிறைச்சாலையில் 6,7 வருடங்களுக்கு மேலாக அனுபவித்துள்ள சிறைவாச காலத்தை கழித்துக் கொண்டு தண்டனை வழங்குமாறு தாங்களாகவே முன்வந்துள்ளார்கள்.

சிறைவாசத்தைத் தொடர்ந்தும் அனுபவிக்க முடியாத நிலையில், தண்டனை பெற்றாவது, வெளியில் வந்துவிட வேண்டும் என்பதற்காக இவ்வாறு முன்வந்துள்ளவர்களுடைய வழக்குகள் புதிய வழக்குகளைப் போலவே நடத்தப்பட்டு, முழுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் எக் காரணத்தைக் கொண்டும், அவர்கள் அனுபவிக்கின்ற சிறைவாச காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றும் அறுதியிட்டு அதிகாரிகளினால் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதனால் அவர்கள் தங்களுக்கு என்ன வகையில் தண்டனை வழங்கப்படும் என்று தெரியாமல் மிகுந்த கவலை அடைந்துள்ளார்கள்.

எனவே, இந்த தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமைகள் கணக்கில் எடுக்கப்பட்டு அவர்கள் மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்யப்படுவதற்கு சம்பந்தப்பட்டவர்களும் அரசாங்கமும் முன்வர வேண்டும் என தெரிவித்துள்ளார். (8.250)

# போர்க்காலத்தில் தமிழ் மக்களின் அழிவைத் தடுக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏன் முன்வரவில்லை?

### கடுமையாகச் சாடுகிறார் சங்கரி

(பரந்தன்)

2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் துணையுடன் 22 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது தமிழ் மக்களை காப்பாற்ற ஏன் முன்வரவில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார். மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது சர்வதேசம் வழங்கிய நாமம். இந்தப் பெயரினை வைத்தவர்களே விடுதலைப் புலிகள் தான் என்று திலீபனின் நினைவு நிகழ்வில் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அழிவிற்கு வழிவகுத்தவர்களே இவர்கள் தான். 2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் துணையுடன் 22 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 2009 ஆம் ஆண்டு நடந்த யுத்தத்தில் பொதுமக்களையும் விடுதலைப் புலிகளையும் கைவிட்டு விலகி நின்று வேடிக்கை பார்த்தனர். இளைஞர்கள் அணிதிரண்டு விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்று அறைகூவல் விடுத்த இவர்களின் முக்கிய தலைவர் ஒருவர் தனது மகனை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தார். இவ்வாறானவர்களின் உணர்ச்சிகரமான பேச்சைக் கேட்டு புலிகளின் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட இளைஞர், யுவதிகள் இன்று சிறையிலும் தங்கள் உடல்களில் குண்டுச் சிதறல்களைத் தாங்கியும் அங்கவீனர்களாகவும் சொல்லொணாத் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

யுத்தத்தில் கிளிநொச்சி வீழ்ந்த பின்னர் இந்தியாவில் இருந்து கொழும்பிற்கு வருகை தந்த இதே பிரமுகர் மண்ணை இழந்தாலும் ஈழப் போராட்டம் தொடரும் என்று கூறி உசுப்பேத்திவிட்டு மீண்டும் இந்தியா சென்றுவிட்டார். இறுதிக்கட்டப் போரில் இந்திய வெளியுறவுத் துறை செயலர் சிவ்சங்கர் மேனன் டில்லிக்கு அவசரமாக அழைத்த போதும் அதனைத் தட்டிக் கழித்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக யுத்த நேரத்தில் தமிழகத்தில் எமது தொப்புள் கொடி உறவுகள் 18 பேர் தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொண்டார்கள். தமிழகத்தில் உள்ள தலைவர்கள் அனைவரும் யுத்தத்தை நிறுத்துங்கள் என்று இலங்கை, இந்தியா மற்றும் சர்வதேசத்திடம் வேண்டுகோள் விடுத்தனர். இதையெல்லாம் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் அன்று இந்திய பாராளுமன்றத்தின் முன்னால் ஒரு உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தால் தாய்த் தமிழகமே அணி அணியாகத் திரண்டு வந்து ஆதரவு கொடுத்திருப்பார்கள். யுத்தம் ஒரு முடிவிற்கு வந்திருக்கும். இதை ஏன் மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட எவரும் செய்ய முன்வரவில்லை? இன்று எல்லாவற்றிற்கும் முன்னின்று ஆர்ப்பாட்டங்களை நடத்தும் முன்னாள்,

இந்நாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர்கள் அன்று தமிழ் மக்களின் அழிவைத் தடுப்பதற்கு ஏன் முயற்சிக்கவில்லை? எல்லாம் முடிந்த பின் இது புலிகள் பெயரிட்ட கட்சி என்று மீண்டும் புலிகளின் பெயரைச் சொல்லி வாக்குகள் சேகரித்து பதவிக்கு வருவதற்கு ஆசைப்படுகின்றார்கள். புலிகள் பெயரிட்ட கட்சியைக் காப்பாற்ற முயற்சிக்கும் இவர்கள் அன்று ஏன் புலிகளையும் மக்களையும் காப்பாற்ற முன்வரவில்லை? என அந்த அறிக்கையில் வீ.ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார். (8-312)

# பொருளாதார மத்திய நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது

(பரந்தன்)

கிளிநொச்சி விசேட பொருளாதார மத்திய நிலையம் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் புதிதாக நிர்மானிக்கப்பட்டு ஜனாதிபதியினால் 14.10.2017 அன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்விற்கான முன் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் கரிசனின் பங்குபற்றுதலுடன் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் 29 ஆம் திகதி இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலன், முப்படைகள், திணைக்கள தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து அமைச்சர் விசேட பொருளாதார மத்திய நிலையத்தினை பார்வையிட்டார். (8-312)



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்களை சந்தித்தார். நேற்று முன்தினம் மாலை முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் முல்லைத்தீவு மாவட்ட லங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்களால் வரவேற்பளிக்கப்பட்டு தொடர்ந்து முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளில் கலந்து கொண்ட பசில் ராஜபக்ஷ மக்கள் சந்திப்பிலும் ஈடுபட்டார். (படங்கள்:-நிபோஜன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றியோடு சேர்ந்தால் பசுவும் மலம் தின்னும்.
*– தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.vallampurii.lk

## நாளுக்கு நாள் மாறிக் கொள்ளும் ஜனாதிபதி மைத்திரி

நல்ல குணத்தைப் பலவீனமாகப் பார்க்கின்ற பண்பாடுதான் இந்த உலகத்துக்குரியது.

அதன் காரணமாக நல்லவர்களும் சண்டித்தனம் மிக்கவர்களாக மாறிக் கொள்ள வேண்டிய கட்டாய தேவை உருவாகிறது.

நல்ல ஒரு மனிதர் தன்னை மாற்றிக் கொண்டார் என்பதற்கு உதாரணம் கூறுங்கள் என்று யார் கேட்டாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்றுதான் சொல்வேன்.

அந்தளவுக்கு சந்தர்ப்ப சூழல் அவரை மாற்றிவிட்டன. நீதி, தர்மம், அறம் தெரிந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமிழ் மக்கள் நம்பினர். அவ்வாறு நம்புமளவுக்கு அவரும் நடந்து கொண்டார்.

வட மாகாணத்துக்கு அடிக்கடி வந்து சென்ற ஜனாதிபதி மைத்திரி இப்போது தனது வருகையைக் குறைத்துக் கொண்டார் எனலாம்.

யாழ்ப்பாணத்துக்கு அடிக்கடி வந்து சென்ற அவர் தனக்கான பாதுகாப்புப் பந்தோபஸ்துக்களை அதிகரித்தது கிடையாது. சர்வ சாதாரணமாக அவர் இங்கு வந்து சென்றார்.

வடக்கில் இராணுவத்தை அகற்றினால் அங்கு விடுதலைப் புலிகள் மீண்டும் முளைப்பர் என்று கூறிய பேரினவாதிகளுக்கு தீவிரப்படுத்தாத பாதுகாப்புடன் ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணத்துக்கு சென்று வருவது மிகுந்த வெறுப்பைக் கொடுத்தது.

வடக்கில் இன்னமும் பிரச்சினை உள்ளது. எனவே அவசரப்பட்டு வடக்கில் உள்ள இராணுவத்தை வெளியேற்றக் கூடாது என்று கூறுபவர்களுக்கு ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயம் ஒரு பெரும் இடைஞ்சல்.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண வருகையை ஊக்குவித்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய நிலங்களை மீட்புச் செய்து இராணுவப் பிரசன்னத்தை வலுக்குறைத்து அவர் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய நம் தமிழ் அரசியல் தலைமை,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான உறவை வெட்டி ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பிரதம மந்திரியுடனும் நெருக்கமான உறவைக் கொண்டனர்.

இஃது ஜனாதிபதிக்கு மிகுந்த ஆத்திரத்தைக் கொடுத்தது. தமிழ் மக்களின் வாக்குகள் மூலமே தனது பதவி உறுதிப்படுத்தப்பட்டது என்ற உணர்வு கொண்ட இந்த நாட்டின் தலைவருடன் சேர்ந்து சென்று காரியத்தைச் சாதிப்பதைத் தவிர்த்தமை தமிழ் அரசியல் தலைமையின் மிகப்பெரும் பலவீனம் எனலாம்.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறிவந்த ஜனாதிபதி மைத்திரி இப்போது சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிவிட்டார்.

ஆக, நாட்கள் நகர நகர பௌத்த பீடங்களுடன் சேர்ந்து போவதுதான் ஒரே வழி என்ற முடிவை ஜனாதிபதி மைத்திரி எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## நாகர்கோவில் நாகதம்பிரான் அலங்கார உற்சவம் ஆரம்பம்

சரித்திரப்பிரசித்தி பெற்ற பூர்வீக நாகர்கோவில் நாகதம்பிரான்ஆலய வருடாந்த அலங்கார உற்சவம இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெற்றுள்ளன.

எதிர்வரும் 5 ஆம் திகதி திருவிழாவும் வெள்ளிக் கிழமை கப்பல் திருவிழாவும் சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், திங்கட்கிழமை சமுத்திரத்தீர்த்தமும், செவ்வாய்க்கிழமை கேணித் தீர்த்தமும் இடம் பெறவுள்ளன. (இ-60)

## உடல் உள ஆரோக்கியத்திற்கான யோகாசனமும் தளர்வுப்பயிற்சியும்

யாழ்ப்பாணம் பதஞ்சலி யோக கேந்திரா அமைப்பின் ஏற்பாட்டில் உடல் உள ஆரோக்கியத்திற்கான யோகாசனமும் தளர்வுப் பயிற்சிக்குமான புதியவகுப்புக்கள் இன்று காலை 6 மணிக்கு சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் கோயில் தேவஸ்தான மணி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

வார இறுதி நாட்களான சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணி முதல் 7 மணி வரை நடைபெறும் இவ் வகுப்புக்கள் முற்றிலும் இலவசமானவையாகும்.

மேற்படி பயிற்சி வகுப்பில் வயது வேறுபாடின்றி இருபாலாருக்கும் உடல் உள மேம்பாட்டிற்கான யோகாசனமும் தளர்வுப் பயிற்சியும் நடைபெறவுள்ளதால் ஆர்வமுள்ளவர்களை கலந்து கொள்ளுமாறு பயிற்சி ஆசிரியர் யோகா கலைமாமணி ந.கோணேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டிற்கான பயிற்சிகளும் நோயாளர்களுக்கும் விசேட தேவையுடையவர்களுக்குமான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

## இறுதியாண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா தொழில்நுட்பக்கல்லூரியின் 2017 ஆம் ஆண்டுக்கான டிசம்பர் மாத இறுதியாண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்படிவத்தினை அலுவலக நாட்களில் பெற்று 08.10.2017 ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ் மொழி மூலம் குடிசார் மின் மற்றும் இலத்திரனியல் கணிய அளவையியல் பயின்ற மாணவர்களுக்கு இவ் ஆணடு டிசம்பர் மாதம் நடைபெறும் பரீட்சையே இறுதிச் சந்தர்ப்பம் என்பதனால் இது வரை பரீட்சைக்கு தோற்றி சித்தியடையாத மாணவர்கள் உடன் மீள் பரீட்சைக்கு தோற்றுமாறு கோரப்பட்டுள்ளது. (மு-250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்திலடச் வீதி, அம்பலவாணர் வீதி, அம்மன் கோவில் வீதி, கற்பக்குணை, சங்குவேலி, புலோப்பளை, அல்லிப்பளை, ஆரத்திநகர், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரை யிலிருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2ம், 3ம், 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்ரெட் கந்தர் மடம், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ் புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறிநதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ் ஆகிய பிரதேசங்களிலும் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில மாவடி, மூளாய், பொனனாலை, வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத்திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும்

உடுவில் தூய செபமாலை அன்னை ஆலயப் பெருவிழா கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (இ-3)

## அரசியலமைப்பு மாற்றம் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் " அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான தற்போதைய நிலை" பற்றிய கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் ஊடகவியலாளர் என்.வித்யாதரன் தலைமையில் இடம்பெறும்

இக் கருத்தரங்கில் அரசிய லமைப்புச் சபையில் உப குழுவின் நிபுணத்துவ அங் கததவராகவும், அரசியல் அமைப்பு மாற்றத்திற்கான பொது மக்கள் கருத்தறியும் குழுவின் உறுப்பினராகவும் செயறபட்ட சி.தவராசா உரையாற்றவுள்ளார். (இ-7)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின நவராத்திரி செயறபாடுகளில் இன்று ஞாயிறறுக்கிழமை மாலை 5 மணி முதல் இரவு 7 மணிவரை பிரார்த்தனை மண்டபத்தில் வாணி விழா நடைபெறும். இவ்விழாவில் சின்மய பால விஹார் பிரிவினரின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (இ-7)

SHANTHIHAM
Association for Health & Counselling

**உலக உளநல நாள்- ஒக்டோபர் 10**

**வேலைத்தள மன அழுத்தம் என்றால் என்ன?**

வேலைத்தளத்தில் பணியாளர்கள் மேல் மேலதிகாரிகளால் அல்லது சக பணியாளர்களால் கொடுக்கப்படும் மேலதிக வேலைப்பழு மற்றும் எல்லைமீறிய எதிர்பார்ப்பு என்பவற்றால் அவர்களது உடல் மற்றும் மனதில் ஏற்படக்கூடிய அசௌகரியமான நிலையே வேலைத்தள மன அழுத்தம் எனப்படும்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**காப்பு நாண் கட்டுதல்**

நாண் கட்டுவதன் நோக்கம் பூஜைகளையும் சம்பிரதாயங்களையும் நிறைவேற்றிய மணமக்கள் தீவேட்டல் மூலம் அம்மை அப்பரை வழிபடுவதற்காகவே மட்டும் காப்பு நாண் கட்டப்படுகின்றது.

**தீவேட்டல் நிகழ்ச்சி**

தூய்மை நிலையில் இருக்கும் மணமக்கள் தங்களது திருமண விழாவிற்கு அம்மை அப்பர் சாட்சியாகவும் அக்னி பகவானை சாட்சியாகவும் அழைப்பதே தீவேட்டல் ஆகும். திருமுறை திருமந்திரம் மூலம் குண்டத்துாய்மை, வாகீசுவரன், வாகீசுவரி வழியாக குண்டத்தில் அக்னி இட்டு அம்மை, அப்பரை தீயில் எழுந்தருளச் செய்தல் போன்ற நிகழ்வுகள் நடத்தப்படும். (தொடரும்)




அரசன் ஆகாசராஜன அரண்மனைக் காவலர்களுடன் வந்து கொண்டிருக்கும் செய்தி பத்மாவதியை எட்டியது.

மலர்வனத்தில் நுழைந்துவிட்ட வேடனைச் சிறைப்பிடித்து சிரச்சேதம் செய்யவே தந்தை வந்து கொண்டிருக்கிறார் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது. அநாவசியமாக அவன உயர் பறிக்கப்பட்டு விடுமே எனப் பரிதாபப்பட்டு வேடனை நோக்கி ஓடினாள்.

அடர்ந்து வளர்ந்திருந்த பூம்புதர் ஒன்றைக்காட்டி அதில் அவனை ஒளிந்து கொள்ளச் சொன்னாள்.

தன்வயமிழந்து அவளை நோக்கி வந்துகொண்டிருந்த ஸ்ரீநிவாசன் மந்திரத்தில் கட்டுண்டவன் போல் அவள் சுட்டிக்காட்டிய புதரில் புகுந்து கொண்டான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III

# யாழ்.பல்கலை-சென்றலைட்ஸ்



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரின் மாகாண மட்ட இறுதிப் போட்டிக்கு யாழ்.பல்கலைக்கழகம் சென்றலைட்ஸ் அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக்கழக அணி யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற முதலாவது சுற்று ஆட்டங்களில் றெயின்போ அணியை 107 ஓட்டங்களாலும் பற்றீசியன்ஸ் அணியை 1 ஓட்டத்தாலும் திருநெல்வேலி YM HA அணியை 8 இலக்குகளாலும் சிறிகாமாட்சி அணியை 7 இலக் குகளாலும் திருநெல்வேலி சி.சி.அணியை 4 இலக்குகளாலும் கால் இறுதிப் போட்டியில் கே.சி.சி.சி.அணியை 1 இலக்கினாலும் அரை இறுதியில் யாழ். ஜொனியன்ஸ் அணியை 5 இலக்குகளாலும் மாவட்ட இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியை 5 இலக்குளாலும் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். யாழ். பல்கலைக்கழக அணி 2ஆவது சுற்றில் வவுனியா யுனிலைட் அணி யை 103 ஓட்டங்களால் வெற்றி பெற்று மாகாண மட்ட இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள் ளனர். சென்றலைட்ஸ் அணி யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டங்களில் ஸ்ரான்லி அணியை 107 ஓட்டங்களாலும் ஜொலிஸ்ரார் அணியை 9 இலக்குளாலும் ஷறிபேக் ஸ்ரார் அணியை 8 இலக்கு ளாலும் யூனியன்ஸ் அணியை 49 ஓட்டங்களாலும் கால் இறுதிப்போட்டியில் யாழ். சென்றல் அணியை 6 இலக்குகளாலும் அரை இறுதி யில் ஓல்கோல்ஸ் அணியை 1 இலக்கினாலும் வெற்றி பெற்று மாவட்ட இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியிடம் 5 இலக்குளாலும் தோல்வியடைந்தும் 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். சென்றலைட்ஸ் அணி 2 ஆவது சுற்றில் முதலாவது போட்டியில் முல்லைத்தீவு வித்தியா அணியை 8 இலக்குகளாலும் 2 ஆவது போட்டி யில் வவுனியா பிறெண்ஸ் (FRIENDS) அணியை 98 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று மாகாண மட்ட இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். இவ்விரு அணிகளும் 01.10.17 ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக ம்மைதானத்தில் மாகாண மட்ட இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள். (கு)


## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் இயங்கும் கணனி நிலையம் ஒன்றுக்கு கீழ்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**கணனி ஆய்வு கூட உதவியாளர்**

Ms Office பாடத்திட்டத்தில் தகைமை

நேர்முகத்தேர்வு : **04.10.2017 புதன்** காலை 11 மணி

லிட்டில் ஏய்ட் கணனிப் பயிற்சி மையம்
கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி

மேலதிக விபரங்களுக்கு:
**0772999699**


## எங்கள் அன்புத் தெய்வத்திற்கு நாட்கள் 31

தோற்றம்
01
-
01
-
1928



மறைவு
29
-
08
-
2017

### அமரர் பராசத்தி நாகரட்ணம்

நாட்கள் 31 ஆனதுவோ !
இன்று போல் உள்ளது உங்கள் மொழி முகம்
எங்களை வரவேற்றது.....
இளமையில் அழகு உங்கள் முதுமையறிவு
முதுமையில் அழகு உங்கள் புதுமையறிவு
கார்மேகம் சொரிந்து உங்களை விடை கொடுத்தது.
வான் உயர உங்கள் புகழ் பூத்தது.....
வழங்கிடுவீர் உங்கள் ஆசிகள் என்றும் எமக்கு

"பராசத்தி இல்லம்"
அப்பையா ஒழுங்கை, கேணியடி,
கொக்குவில் மேற்கு.

(857)

இங்ஙனம்:-
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்தி ஆசி கூறுகிறோம்

### திரு.அமிர்தலிங்கம் பௌநந்தி



கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் விரிவுரையாளராக 09.09.2017 அன்று பதவியேற்றிருக்கும் துன்னாலை மத்தி கோவிற்கடவையைச் சேர்ந்த திரு.அமிர்தலிங்கம் பௌநந்தி அவர்களை பாராட்டி வாழ்த்தி கோவிற்கடவை சித்திவிநாயகர், ஹரிஹரபுத்திர தர்மசாஸ்தா ஐயப்ப சுவாமியின் அருள் கிடைக்க வேண்டும் என்று ஆசிகூறுகின்றோம்.

வாழ்த்துவோர்:-
சிவஸ்ரீ நா.கலாதரக்குருக்கள், மைதிலி அம்மா தம்பதியினர்
கோவிற் கடவை ஹரிஹரபுத்திர தர்மசாஸ்தா

(சி-9834)

## துயர் பகிர்கின்றோம்...

### திரு.விஸ்வலிங்கம் கந்தவேள்



பிறப்பு:-03.02.1942
இறப்பு:-29.09.2017

(சி-9830)

இல-18, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை முகவரியாகக் கொண்ட திரு.**விஸ்வலிங்கம் கந்தவேள்** அவர்கள் 29.09.2017 (வெள்ளிக்கிழமை) அன்று சிவபதமடைந்த செய்திகேட்டு ஆறாத் துயரடைகின்றோம்.

இவர் ஓய்வு பெற்ற கிராமசேவையாளரும் சமாதான நீதவானும் சித்த மருத்துவத் துறை ஆலோசகராகவும் உளவளத்துணையில் பயிற்சி பெற்று அளப்பரிய சமூகத் தொண்டாற்றிய பெருமகனும் ஆவார். இவர் எமது குழந்தைகளுக்கு தன்து உளவளத்துணை ஆற்றல் மூலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஆற்றுப்படுத்த உதவினார். அத்துடன் அனுபவம் வாய்ந்த பல விசேட நிபுணர்களை அழைத்து வந்து சங்கீதம் மூலமும் வேறு பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட எமது இல்லக் குழந்தைகளை ஆற்றுப்படுத்தி கல்வி மற்றும் வேறு துறைகளில் மேம்பட உதவிய பெருமைக்குரியவர். அத்துடன் தனது குடும்பத்தார் உறவினர்களை அழைத்து வந்து குழந்தைகளுக்கு உதவச் செய்தவர். இவரது சேவையை யாமும் குழந்தைகளும் மறக்க முடியாது. இவரது இழப்பு எமக்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் பேரிழப்பேயாகும். இதேநேரம் இவரை இழந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் துணைவியார், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்துடன் இவரது ஆன்மா எல்லாம் வல்ல உருத்திரபுரிசுவரர் திருவடியுடன் இரண்டறக் கலந்து நித்தியவாழ்வு பெற உருத்திரபுரிசு-வரனை என்றும் இறைஞ்சுகின்றேன்.

தலைவர்-தி.இராசநாயகம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **ஆறுமுகம் மேலும்மயிலும்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
திதி:-01.10.2017

ஆண்டுகள் ஐந்தானதோ
ஆதாரமே உமை நாம் இழந்து
ஆறுதல் பெற இன்னும் முடியவில்லை
ஆறுமுகம் பெற்ற வேலவரே-உம்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்தித்தபடி

(சி-9832)

தாயின்மடியில்:-09.03.1943
நோயின் பிடியில்:-26.09.2012

என்றும் மறவாத் துயருடன் குடும்பத்தினர்
திருநாவலூர்-புலோலி மேற்கு, பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்பில் கட்டை...

அந்த இடத்திலேயே மயங்கி விழுந்துள்ளார்.

உடனடியாக அவரை கோப்பாய் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு சென்று சேர்த்த போது அவரை பரிசோதித்த வைத்தியர் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9)

## ஏனைய கைதிகள்...

யல் கைதிகள் மூவர் இன்றைய தினம் ட்டாவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

இவர்களில் இருவர் உடல்நிலை சோர்வடைந்த காரணத்தினால் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவாகவே ஏனைய கைதிகள் உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆண்டு கைது செய்யப்பட்டு கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வருடம் குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் தற்போது அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியுள்ளனர்.

இது அரசியல் கைதிகளை பழிவாங்கும் நடவடிக்கை என தெரிவித்து மொழிப்பிரச்சினை உள்ள காரணத்தினால் தமது வழக்கு வவுனியா அல்லது யாழ்ப்பாண நீதிமன்றங்களில நடைபெற வேண்டும் என கோரி உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர். (மு-9)

## தமிழ் இனத்தின்...

முகத்தில் கோடு போட்டாலும் அந்த காலத்தில் கோடுகளை கலைஞர்கள் நிலத்தில் போட்டுள்ளனர். இந்த மண்ணில் எத்தனையோ கலைஞர்கள் கலைகள் அதன் அத்தனை அறுவடைகளும் இந்த மண்ணுக்கேயுரியது.

கலைஞர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல, கலைஞர்களை காலங்கள் பேசும் இந்த கலைஞர்களின் படைப்புகள் பேசும். 76 வயதினை கடந்துள்ள நிலையிலும் கலையொன்றே மனிதனை தளர்ச்சியில்லாமல் வாழ வைக்கும் என்பதை உணர்ந்துள்ளேன்.

கலைஞர்கள் மட்டுமே சாதாரண மனிதர்களில் இருந்து மாறுபட்டவர்களாகவுள்ளனர். எல்லாவற்றையும் பார்த்து ரசிக்க கூடியவர்கள் தான் கலைஞர்கள். கலைஞர்களுக்கு வயதே கிடையாது. கலைகள் அவர்களை காப்பாற்றுகின்றது. அவர்களுடைய எண்ணங்களை கலைகள் என்றும் இளமையாகவே வைத்திருக்கின்றது.

ஈழத்தமிழர்கள் மட்டும் தான் தமிழ் மொழியை இன்னும் அழுத்தமாக காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இங்கிருந்து புலம் பெயர்ந்தவர்கள் தமிழ் மொழியை கட்டி காப்பது போல் தமிழ் நாட்டில் கூட யாரும் தமிழ்மொழியை கட்டிக் காக்கவில்லை.

அகநானூறு, புறநானூறு என்று எவ்வளவோ படைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் உங்கள் படைப்புகளிலே தமிழ் இன்னும் சோர்ந்து போகாமல் இருக்கிறது. அது உங்களுக்கு பெருமை தரும் விடயமாகும்.

மொழியின் மீதும் இனத்தின் மீதும் அழுத்தமான பக்தியை உங்களை விட யாரும் வைத்ததில்லை. நான் இந்த பூமியில் கால் வைக்கும் போதெல்லாம் பெருமையாக உணர்ந்தேன்.

தமிழ் நாட்டில் தமிழர்களதும், தமிழச்சிகளதும், வீர வரலாற்றை புத்தகங்களிலும், ஏடுகளிலும் வாசித்துப் பார்த்திருக்கின்றோமே ஒழிய வாழ்க்கையில் வாழ்ந்து பார்த்ததில்லை. வீர வரலாற்றை வாழ்ந்த தமிழர்களும், தமிழச்சிகளும் ஈழத்தில் தான் இருக்கின்றார்கள்.

சுத்தமான தமிழ் உரையாடல் இங்கிருக்கின்றது. இன்னும் நீங்கள் சோரம் போகவில்லை. இங்கு ஏற்பட்ட நெருக்கடி கூட நல்ல தற்கோ என நான் நினைத்ததுண்டு. காரணம் அந்த நெருக்கடிகளினால் இங்கிருந்து புலம் பெயர்ந்தவர்கள் எங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் சரி அங்கும் முளைத்து விருட்சமாய் இருப்போம் என வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழனை அடையாளப்படுத்துவது ஈழ மண் மட்டும் தான், கறுப்பாக ஒரு தமிழன் இருந்தான் அவன் வீர வரலாறு கொண்டவன் என அடையாளப்படுத்தியது பிரபாகரன் மட்டும் தான், அவர் இல்லாவிட்டால் தமிழ் என்ற ஒன்று இருப்பது எவருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை, தமிழினத்தை உலகுக்கு அடையாளம் காட்டியவர் பிரபாகரன் மட்டுமே.

மூத்த கலைஞர்களுக்கு நான் விருதுகள் வழங்குவதை விட அவர்களது கரங்களால் நான் ஆசீர்வாதம் வாங்கிச் செல்ல வேண்டும் என தெரிவித்தார். (மு-11)

## பெற்றோல், டீசல்...

ஐ.ஓ.சி நிறுவனத்தின் உப தலைவர் சித்தார்த் ஆக்ரவால் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களில் எரிபொருளின் விலை குறைவடைந்திருந்த நிலையில், தற்போது தீர்வை வரி அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் பெற்றோல் மற்றும் டீசலை நட்டத்திலேயே விநியோகிப்பதாகவும், லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால் பெற்றோல் மற்றும் டீசலின் விலையை அதிகரிப்பதை தவிர வேறு மாற்று வழிகள் இல்லையென லங்கா ஐ ஓ சி நிறுவனத்தின் உப தலைவர் சித்தார்த் ஆக்ரவால் தெரிவித்துள்ளார். (மு-11)

## மன்னார் ஆயர்...

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்று மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

ஆயர் இல்லத்திற்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையை சந்தித்து ஆசி பெற்றதோடு, நாட்டின் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் உரையாடினார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

அதனைத்தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவர் மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலைய ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையினையும் சந்தித்து உரையாடினார்.

அதனைத்தொடர்ந்து வடமாகாணத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கும், எதிர்க்கட்சி தலைவருக்கும் இடையில் மன்னார் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்.மாவட்டங்களில் காணாமல் போனவர்களின் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது காணாமல் போனவர்களின நிலைப்பாடு தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாக அறியமுடிகின்றது. (மு-11)

## ஆவா குழுவின்...

படங்களை ஆவா குழுவினர் தமது முகநூல்களில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

இதேவேளை, ஆவா குழுவினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள போதிலும் ஆவா குழுவினர் ஆயுத பூஜை செய்துள்ளனர். (மு-11)

## கோழிக்கறிக்குள்...

உத்தியோகத்தர்களினால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

விளக்கமறியலில் இருக்கும் கைதியொருவரைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் போத்தல் ஒன்றினுள் கோழிக்கறி கொண்டு சென்றுள்ளார். அந்த கோழிக் கறி மீது சந்தேகம் கொண்ட சிறைக்காவலர்கள் அதனை பரிசோதித்துள்ளனர்.

அப்போது கோழிக்கறியின் குழம்பினுள்ளே சிறு சிறு பொலித்தீன் உறைகளுக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் அடங்கிய சிறிய பொதிகள் பல கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடமிருந்து 02 கிராம் 500 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை யாழ்ப்பாணப் பொலிஸார் யாழ்ப்பாண நீதவான் மன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த மாதமும் சிறைக் கைதியொருவரை பார்ப்பதற்காக சென்ற பெண்ணொருவர் கொண்டு சென்ற பிட்டுக்குள்ளிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (மு-11)

## ஆட்சியை அமை...

யும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்டு வடக்குக்கு சென்றுள்ள பஷில் ராஜபக்ஷ அங்கு தமது புதிய கட்சியான பொதுஜன முன்னணியின் செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இதன் ஒரு கட்டமாக நேற்று மாலை யாழில் இலங்கைவேந்தன் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார்.



இந்நிலையில் இங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தற்போதுள்ள அரசாங்கம் 33 மாதங்களாக செயற்பட்டு வருகின்றது. மகிந்த ராஜபக்ஷ 2006ஆம் ஆண்டு காலப்பகுதியிலே ஆட்சி ஏறும்போது வடக்கின் நிலை எப்படி காணப்பட்டது•என்பது உங்களுக்கு தெரியும். அவ்வாறான நிலையில் இருந்து வடக்கு மக்களை மீட்டெடுத்து அவர்களுக்கு சமாதானத்தையும் அபிவிருத்தியையும், சக்தியையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற இலக்குடனேயே அவர் ஆட்சிப் பீடம் ஏறியிருந்தார்.

அவ்வாறு அவருடைய இலக்கின் காரணமாகவே தான் கடந்த காலங்களில் ஆயுதங்களைஏந்திய சிறுவர்கள் இன்று பேனைகளை பிடித்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு சமாதான சூழலை கட்டியெழுப்பிய பின்னர் அவர் வடக்கின் அபிவிருத்தி தொடர்பாக கவனிக்க தொடங்கியிருந்தார். அந்தவகையில் வடக்கிற்கு யாழ்தேவியை கொண்டு வந்தார், ஏ9 பாதையை திறந்து அதனை காப்பெற் வீதியாக்கினார், பாடசாலைகள், வைத்தியசாலைகளை உருவாக்கி கல்வி சுகாதாரத்தை முன்னேற்றமடைய செய்தார்.

இவற்றைவிட மின்சார வசதியை வவுனியாவில் இருந்து சுன்னாகம் வரை 365 நாட்களும் 24 மணிநேரமும் கிடைக்கும்படியாக செய்தார், துரையப்பா விளையாட்டரங்கை புனரமைத்து கொடுத்தார், யாழ்.பல்கலைகழகத்தை அபிவிருத்தி செய்தார், பாடசாலைகளில் தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தார், மீன்பிடித்துறை, விவசாயத்துறையை மேம்படுத்தி கொடுத்தார். இவ்வாறாக வடக்கு மக்கள் சுதந்திரமாகவும், வசதியாகவும் வாழ்வதற்கான சகல நடவடிக்கைகளையும் ஏற்படுத்தி கொடுத்தது மகிந்த ராஜபக்ஷவே. ஆனால் இன்றுள்ள புதிய அரசாங்கம் எதனை செய்துகொடுத்துள்ளது. குறிப்பாக இவ் ஆட்சி அமைவதில் பாரியபங்காற்றிய வடக்கு மக்களுக்கு இந்த அரசாங் கம் என்ன அதிகாரத்தை அவர்களது கையிலே கொடுத்திருக்கின்றது?.

இந்த அரசாங்கம் எதனையுமே கொடுக்க வில்லை.

நாம் எல்லாவற்றிலுமே தற்போது தோல்வி கண்டு செல்கின்றோமே தவிர வேறெதனையும் இந்த அரசாங்கம் உங்களுக்கு வழங்கவில்லை. நாம் வடக்கிற்கு வழங்கிய அபிவிருத்திகளில் புதிதாக எதனையாவது இந்த அரசாங்கம் ஏற்படுத்தி கொடுத்துள்ளதா?.

எனவேதான் நாம் கூறுகின்றோம் எதிர்காலத்தில் நீங்கள் எம்மோடு இணைந்து பயணிக்கவேண்டும். அதனூடாக நாம் எதிர்காலத்தில் இடம்பெறப் போகும் அனைத்து தேர்தல்களிலும் வெற்றியடைவோம் என தெரிவித்தார். (மு-4)

## கிழக்கின் ஆட்சி...

மாகாண ஆளுநர் றோகித்த போகொல்லாகமவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படும்.

2012ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி இறுதியாக மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்ற நிலையில் அதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பெரும்பான்மை வாக்குகளை பெற்று வெற்றிபெற்றது.

இதன்போது, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு [illegible] ஆசனங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## நல்லாட்சி அரசின்...

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த திஸ்ஸ விதாரண, அரசாங்கம் செய்து வருகின்ற துரோகச் செயல்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன துணை போகின்றன.

எங்களது பொருளாதாரத்தை வெளிநாடுகள் கையில் எடுப்பதற்கும், சுதந்திரத்தை சீர்குலைப்பதற்கும் அவர்கள் துணை போகிறார்கள்.

எதிர்க்கட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கும் சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள் இதற்குத் துணை போகிறார்கள். இவ்வாறானதொரு எதிர்க்கட்சி வேறொரு நாட்டிலும் இல்லை. நாட்டு மக்களுக்கு இந்த அரசு இன்று வேண்டாம் என்று ஆகிவிட்டது.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்த போது சிங்களம், தமிழ் இரண்டும் அரச மொழிகளாக இருக்க வேண்டும் என்று குரல் கொடுத்தது லங்கா சமசமாஜக் கட்சி.

இலங்கையில் யுத்த மீறல்கள் இடம்பெற்றிருந்தால் எமது நாட்டுக்குள் எமது நீதிமன்றமே நேரடியாகப் பார்த்து குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும். அதுவே சர்வதேச நீதியாகும். அதனைச் செய்யாமல் ஐ.நாவில் சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுவிட்டு வந்திருக்கிறார்கள்.

எம்மை நோக்கி குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியன கை நீட்ட இடமளித்திருக்கிறது.

இந்த அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் துணை போகிறது என்று அவர் தெரிவித்தார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மகேந்திரா வாகனம் (CPLC xxxx) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 0776701678

(C-9828)

## ஆவா குழுவின் ஆயுத பூஜை...

யாழ்ப்பாணத்தில் ஆவா குழுவை சேர்ந்தவர்கள் நேற்றையதினம் ஆயுத பூஜை செய்துள்ளனர். நவராத்திரி விரத ஆயுத பூஜை வழிபாட்டின்போதே ஆவா குழுவினர்தமது வாள்கள், கைக் கோடரிகள் போன்றவற்றுக்கு பூஜை செய்துள்ளனர். இது தொடர்பான புகைப 15☛

## VS Engineers & Contractors

எமது நிறுவனத்தால் தரமான முறையில் பின்வரும் வேலைகள் செய்து தரப்படும்.

1. கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்படும்.
2. எல்லாவிதமான Electrical Wiring.
3. CCTV Camera மற்றும் இதர வீட்டு பாதுகாப்பு அமைப்பு.

0776120859, 0769037423

(810)

## விற்பனைக்கு உண்டு

A/C (LG), TV (View Sonic) குளிர்சாதனப் பெட்டி, அலுமாரி, கட்டில், மேட்டார்சைக்கிள் (Pluser - VM XXXX, TVS - Shooty, Stick - VW XXXX), மின்விசிறி, போட்டோகொப்பி இயந்திரம், கடையில் பாவித்த அலுமாரிகள், மேசை, கதிரை, வைட்போட்டுகள், 2 அயன் சேவ் பெட்டிகள் என்பன உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு : 0768514296

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(C-9785)

## நடமாடும் மிருகவைத்திய சேவை

சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். Dr.K.கிருபாகரன்

0779738802

முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.

(843)

## JCB

விற்பனைக்குண்டு

(698)

## Wijitha Trading Kilinochchi

எமது நிறுவனத்திற்கு முகாமையாளர் மற்றும் வட்டா வாகனங்கள், சேகரிப்பு அதிகாரி, சந்தைப்படுத்தல் அதிகாரிகளுக்கு வேலை வாய்ப்பு உண்டு.

தொடர்புகளுக்கு :

0114384120, 0114062830, 0114320232, 0767074609

(C-9822)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

## யாழ் மதர் கெயர் வைத்தியசாலை

Yarl Mothercare — Towards Healthy Family

பதிவு இல : 85754

Eye Care Centre

We Care Your Eyes

05.10.2017

முதல் எமது புதிய சேவையாக

கண் பராமரிப்பு நிலையம்

ஆரம்பிக்கப்பட்டவுள்ளது.

DR.M.மலரவன்

கண் சத்திரசிகிச்சை நிபுணர்

தினசரி மாலை 4.00 மணிக்கு பார்வையிடுவார்.

Medical Specialist Consultation Hospital

No: 514/18, Hospital Road, Jaffna.

T.P: 021 221 9595 / 021 221 9797

021 222 9521 / 021 222 6363

Email - yarlmothercare17@gmail.com Web - yarlmothercare.com

(831)

## உடனடி வேலை வாய்ப்பு V2 TRAVELS

(C-9818)

UK - 550/=Kg

விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?

எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்

5,000/= (பயிற்சியின் போது) // 15,000/= (பயிற்சியின் பின்னர்)

நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்

இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்கின்றோம்.

தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்)

0768226241

## ஆங்கிலம் / சிங்களம்

மானிப்பாய் சந்தைக்கு முன் உள்ள மூத்த தம்பி ஒழுங்கையில் சாத்தாவத்தை வயிரவர் கோவிலுக்கு அருகாமையில் மேற்படி வகுப்புகள் நடைபெறுகின்றன.

- அடிப்படையிலிருந்து O/L வரை
- இருமாதங்களுக்குள் இரு மொழிகளிலும் பேசுவதற்கு பயிற்சி
- O/L மார்கழி மாதத்திற்கான பரீட்சை வினாக்கள் விடையளித்தல்

தொடர்புகளுக்கு : K.சோமசுந்தரம் (JP)

T.P : 0774041904

(854)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9818)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப

CANADA - 400/= மட்டுமே

(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS - 0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

அண்ணா

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

| யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை |

(C-9767)

## ஒரு எண்ணெய் ! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!

- முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
- கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
- முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
- முகப்பருவா?
- தோல் சுருக்கமா?
- உதடு, குதிக்கால் வெடிப்பா?
- உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம் — Royal

இன்றே பாவியுங்கள்!!!

"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"

- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching

Re- Packed By : Royal Industry R Colombo - 12

சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா R இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி - 021 222 2567

(C-9820)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

### Diploma/Advanced Diploma in English

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கை நெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என விரிவாக கற்பிக்கப்படும்.

### IELTS Life Skills A1 Exam-Sponsor/ Settlement Visa

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commission னால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

### Young Learners English (YLE)

வயதெல்லை 7-15 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேசப் பரீட்சை உடன் University of Cambridge இனால் சான்றிதழ் வழங்கப்படும்.

### Spoken English With Grammer – Quick Learning Course

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புவர்களுக்கு இது பொருத்தமானதாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

### IELTS (Academic /General) Student Migration Visa

மூலம் செல்பவர்களது Approved Centre for Registering Online (CRS) Candidates

### Spoken Sinhala

சிங்களத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்கு உகந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்கள், தொழில் புரிவோர், சிங்களம் கற்க விரும்புவோர் அனைவருக்கும்.

### Diploma in Sinhala

ஓரளவு சிங்கள அறிவு உள்ளவர்கள் மேலும் சிங்கள அறிவை விருத்தி செய்ய சிங்களத்தினை மேலும் விரிவாகக் கற்றுக் கொள்ள விரும்புவோர்களின் தெரிவு.

வகுப்புக்கள் ஆரம்பம் :

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்

Jaffna Branch :

No.15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.

Tel: 021 222 4550 | 076 3166 060

(C-9820)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நாவாந்துறை
கிளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378


வாரமலர்

# வலம்புரி


சங்குநாதம்

நாதம் 136

வள்ளுவர் ஆண்டு 2048 01.10.2017 தொலைபேசி : 021 222 3378



# தீர்ப்புத்தந்த பாடம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு ஆரம்பமாகியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் சொல்ல அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** வித்தியாவின்ர வழக்கும் முடிஞ்சு போயிற்று. ஏழு பேருக்கு மரண தண்டனை.

**கங்காணி:** வித்தியாவின்ர வழக்கு ஒரு நல்ல படிப்பினை.

**மூப்பர்:** பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பார்கள். ஆனால் வித்தியாவின்ர விடயத்தில அது சாத்தியமற்றுப் போயிற்று.

**சாத்திரியார்:** அந்தப் பிள்ளையின்ர ஆத்மா பலம் மிக்கது எண்டுதான் சொல்லவேணும்.

**வாத்தியார்:** வித்தியாவின்ர கொலையும் அதற்கான தண்டனையும் போதும். ஒரு மக்கள் சமூகம் திருந்துவதற்கு.

என்ன செய்யிறது. எங்கட நிலைமை இப்படியாப் போய்ச்சுது. எதிலும் ஒரு பயபக்தி இருக்கவேணும். அப்பதான் நெறிமுறையாக வாழ முடியும்.

**கங்காணி:** யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் கர்ப்பிணித்தாயொருவர் பிரசவத்தின்போது உயிரிழந்திருக்கிறார்.

**வாத்தியார்:** கடவுளே! திருமணம் செய்து 11 மாதங்கள். அதற்குள்ள இப்படியொரு அவலம்

**விதானையார்:** மருத்துவப் பிரிவினரின் அசமந்தப்போக்குத்தான் அந்தத் தாயின் மரணத்திற்குக் காரணம் எண்டு உறவினர்கள் குற்றம் சாட்டியிருக்கினம்.

**மூப்பர்:** பிரசவத்தில் தாய் மரணம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஒவ்வொரு மாதமும் மகப்பேற்று வைத்தியரிட்ட அந்தக் கர்ப்பிணித்தாய் ஆலோசனை பெற்றிருக்கிறார். சுகப்பிரசவம் என்று டாக்டர் தன்ர மருத்துவக் குறிப்பில எழுதியிருக்கிறார். அப்படியிருக்கும்போது அந்த இளம்தாய் உயிரிழந்தார் எண்டால் அவரின்ர உறவினர்கள் சொல்லுற குற்றச்சாட்டில நியாயம் இருக்குது எண்டு தானே சொல்லவேணும்.



## வித்தியா வழக்குத் தீர்ப்பு எல்லாருக்கும் நல்ல பாடம்

**சாத்திரியார்:** அது மட்டுமல்ல பாருங்கோ. கடந்த புதன்கிழமை (27.09.2017) பிற்பகல் 3.15 மணியளவில் குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தை பிறந்து ஒரு மணித்தியாலம் வரை அந்தத்தாய் கதைத்துக் கொண்டிருந்திருக்கிறார். அதன் பின்னர் மயக்கமுற்றபோது அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு போயிருக்கினம்.

அந்தத்தாயின் உடல் நிலை மோசமடைய ஏனைய துணை மருத்துவர்களும் அவரைச் சென்று பார்த்திருக்கினம். எனினும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தாய் இறந்து விட்டதாகச் சொல்லப்பட்டிருக்குது.

**கங்காணி:** நான் அறிந்த மட்டில புதன்கிழமையே அந்தத் தாய் இறந்து விட்டதாகவும் ஆனால் தங்களுக்கு வியாழக்கிழமைதான் இறந்ததாக அறிவித்ததாகவும் அந்தப் பெண்ணின் உறவினர்கள் கூறுகினம்.

**சாத்திரியார்:** அட நாசமறுப்பு. உண்மையா இறந்த நாளும் நேரமும் மறைக்கப்பட்டிருக்குதோ! இந்து சமயத்தில ஒரு இறந்த நாளும் நேரமும் முக்கியமல்லோ. இறந்தவரின்ர ஆன்ம ஈடேற்ற வழிபாடுகளுக்கு நாள் நேரம் கட்டாயம்.

**வாத்தியார்:** என்னவாக இருந்தாலும் உயிரிழந்த திருமதி அமுதகௌரி கரன் அவர்களின்ர மரணம் தொடர்பில உண்மை நிலையை விளக்கி உண்மையான அறிக்கையை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வெளியிடவேணும். ஏனெண்டால் அண்மையில ஒருதாய் கர்ப்பப்பையில இருக்கிற கட்டியை அகற்றுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில சத்திரசிகிச்சை செய்திருக்கிறார். சத்திர சிகிச்சையின்போது சிறுநீரகக் குழாய் வெட்டப்பட்டதால அந்தத்தாய் உயிரிழந்து போயுள்ளார். எனவே இது தொடர்பில யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உரிய விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேணும் என ஆலடியில தீர்மானம் நிறைவேற்றுவம்.

இப்படி வாத்தியார் கூற, அதனை அனைவரும் ஏகமனதாக ஆமோதித்தனர்.

**பண்டிதர்:** எங்கும் பிரச்சினை எண்டால் என்ன செய்யிறது.

வடக்கு மாகாண சபையில போக்குவரத்து அமைச்சராக இருந்த டெனிஸ்வரனை முதலமைச்சர் பதவி நீக்கம் செய்தவரல்லோ. தன்ர அமைச்சுப் பதவியை நீக்கிற உரிமை முதலமைச்சருக்கு இல்லை என்று டெனிஸ்வரன் வழக்குத்தாக்கல் செய்திருக்கிறார்.

**கங்காணி:** அப்ப முதலமைச்சருக்கு அமைச்சரை நீக்கிற பதவி இல்லையெண்டால் அது பற்றி வாதிடத்தானே வேணும்.

**விதானையார்:** முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவுக்காக கனகீஸ்வரன் வாதிடுகிறாராம்.

**சாத்திரியார்:** அப்ப டெனிஸ்வரனுக்காக.

**விதானையார்:** டெனிஸ்வரனுக்காக சுமந்திரன் எம்.பியின்ர யூனியர் வாதிடவுள்ளார்.

**வாத்தியார்:** அப்ப வாதம் நல்லாத்தான் இருக்கும்.

**விதானையார்:** ஏன் வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்.

**வாத்தியார்:** முதலமைச்சருக்காக வாதிடும் கனகீஸ்வரனின்ர யூனியராக இருந்தவர்தான் எம்.ஏ.சுமந்திரன். சுமந்திரன்ர யூனியராக இருப்பவர்தான் டெனிஸ்வரனுக்காக வாதிடுகிறார் எண்டால் வழக்குச் சூடு பிடிக்கும்தானே!

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் வழக்கில அமைச்சுப் பதவியை நீக்கிற அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை எண்டுதான் டெனிஸ்வரன் தரப்பு வாதிடும். இவ்வளவு காலப் போராட்டம் முதலமைச்சருக்கு அதிகாரம் வேணும் என்பதுதான்.

ஆனால் இப்ப முதலமைச்சருக்கே அதிகாரம் இல்லை. ஆளுநருக்குத்தான் அதிகாரம் எண்டு நாங்களே சொல்லப் போறம் எண்டால் எப்படி நிலை என்பதை நாம் சொல்லி யாரும் தெரிந்து கொள்ளத் தேவையில்லை.

இப்படிப் பண்டிதர் கூற அதேநேரம் ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**அன்பு வாசகர்களே! ஆலடியில் அலசக் கூடிய சம்பவங்கள், விடயங்களை அனுப்பி வையுங்கள். கனதி உணர்ந்து இவ் விடத்தில் வெளியிடப்படும். (ஆ-ர்)**

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த சிங்கள நாட்டில் தமிழர்களும் வாழலாம்

## இதுவே இடைக்கால வரைபு தரும் விளக்கம்





இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினூடாகவே சாத்தியமாகும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் மிகவும் உறுதியாகவுள்ளார்.

வெளிவந்துள்ள இடைக்கால வரைபை பார்க்கும்போது அதில் தமிழ்மக்களுக்கு எதுவும் இல்லை என்று அறுதியிட்டுக் கூறமுடியும்.

எதுவுமில்லையா என்று விளிக்கக்கூடிய நேரத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெறுவதில் எந்தக் கடினமும் இல்லை என்பது ஜயம்பதி விக்கிரமரட்னவின் கருத்தாக உள்ளது.

தரப்பட்ட அதி காரத்தை மீளப்பெற முடியுமென்றால், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இந்த ஜென்மத்தில் சாத்தியப்படாது என்று துணிந்து கூறமுடியும்.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கானது என்பதுடன் அந்த ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றுவதற்கு தமிழ் அரசியல் தரப்பை பயன்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் மிகப்பெரும் இராஜதந்திரம் எனலாம்.

அதாவது இடைக்கால வரைபை வெளியிட்ட பின்னர் அந்த வரைபு இனப்பிரச்சினைக்கான மிகச் சிறந்த தீர்வு என்பதைக் காட்டுவதற்காக வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கும் ஏற்பாடுகள் நடக்கின்றன. இதில் ஜயம்பதி விக்கிரமரட்னவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு தொடர்பில் சிங்கள, தமிழ் அரசியல் பிரதிநிதிகள் இணைந்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கும்போது அதனை வெளிநாட்டு இராஜதந்திரிகள் வரவேற்பர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் இதில் இடம்பெற்றிருப்பதால் தமிழ்மக்கள் இடைக்கால வரைபில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களை அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர் என்ற தோற்றப்பாடு வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

ஆக, இடைக்கால வரைபு தொடர்பில் தமிழ்மக்களின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவதிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

தமிழ்மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் இடைக்கால வரைபின் முக்கிய இடங்களில் சீர் திருத்தங்கள், செம்மையாக்கல்கள் இடம்பெறவேண்டுமென தமிழ்மக்கள் வலியுறுத்துகின்றனர் என வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் எடுத்துரைக்கும்போது அதில் இருக்கக்கூடிய நியாயப்பாட்டை வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஏற்றுக் கொள்வர்.

இதைச்செய்யாமல் எடுத்த எடுப்பில் ஜயம்பதி விக்கிரமரட்னவுடன் சேர்ந்து சென்று வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் இடைக்கால வரைபை நியாயப்படுத்தும்போது எதிர்காலத்தில் எந்தத் திருத்தங்களையும் தமிழ்த் தரப்பு செய்யமுடியாமல் போகும்.

சமஷ்டி, பொலிஸ் அதிகாரம் என்பன பற்றி எதுவும் எடுத்துரைக்கப்படாத இடைக்கால வரைபை தமிழ்மக்கள் ஏற்பதென்பது அர்த்தமற்றது.

இது தவிர இடைக்கால வரைபு என்பது தமிழ்மக்களுக்கு- சிறுபான்மை இனத்திற்கு வழங்கப்படக்கூடிய அதிகாரங்களை, உரிமைகளை எடுத்துரைப்பதாகவே இருக்கவேண்டும். ஆனால் இங்கு ஒற்றையாட்சி என்பதில் தான் தீர்வின் தொடக்கப் புள்ளியே ஆரம்பமாகின்றது.

ஒருமித்த நாடு என்று தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டாலும் சிங்கள மொழியில் எந்த மாற்றமும் இல்லாமல் எக்க இராச்சிய என்ற சொற்பதமே நிலைத்திருப்பதாக கூறப்படுகிறது.

தமிழ்மக்களுக்கு தீர்வு தருவதாகக் கூறிக்கொண்டு இலங்கை, சிங்கள பௌத்தர்களுக்குரியது. இங்கு பௌத்தமே முதன்மையானது என்றவாறான விடயங்கள் மீள வலியுறுத்தப்படுவதைக் காணமுடிகின்றது.

ஆக, இனப்பிரச்சினைக்கெனக் கொண்டு வரப்படும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் இலங்கையை சிங்களவர்களுக்கானதாகவும் இங்கு பௌத்தமே ஆட்சி மதம் என்பதாகவும் மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம் என்பதையும் கூறுவதாக இருப்பதால் அரசியலமைப்புச் சீர்திருத்தம் அரங்கேறினாலும் அது தமிழ்மக்களுக்கு எந்தப் பிரயோசனத்தையும் தரமாட்டாது என்பதே உண்மை.

எனவே, இங்குதான் தமிழ் அரசியல் தலைமை மிகவும் நிதானமாகச் செயலாற்றவேண்டும். அரசியலமைப்புச் சீர்திருத்தம் நமக்குப் பயனற்றது என்றால்- அதில் நமக்கு உடன்பாடில்லை என்றால் அதை முன்கூட்டியே தெரியப்படுத்தி விடவேண்டும். அதிலும் குறிப்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் தெரியப்படுத்துவது மிகவும் அவசியமானது.

இதைச் செய்யத் தவறும்போது எமக்கான தீர்வையும் இழந்து சர்வதேச போர்க்குற்ற விசாரணையையும் இழக்கும் கட்டத்திற்கு தமிழ் மக்கள் தள்ளப்படுவர்.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# குழந்தையின் குறும்பு



(சென்றவாரத் தொடர்ச்சி)

சேவகர்கள் பீர்பாலிடம் சென்று அரசர் உத்தரவை தெரிவித்தனர்.

பீர்பால் உடனே அரண்மனையை நோக்கிப் புறப்பட்டு வந்தார். அக்பரை வணங்கிவிட்டு தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

அக்பருக்குக் கோபம் தணியவில்லை. ' இரண்டு முறை சேவகர்களை அனுப்பியும்கூட ஏன் உடனே வரவில்லை?' எனக் கேட்டார்.

'சக்கரவர்த்தியே, என் குழந்தை அழுது தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தது.அதனால் உடனே வர இயலவில்லை. இப்பொழுதும்கூட அழுது கொண்டிருக்கும் குழந்தையை அப்படியே விட்டு விட்டுத்தான் இங்கே விரைவாக வந்தேன்' எனப் பதில் கூறினார்.

'இவ்வளவு நேரம் எங்கேயாவது குழந்தை அழுது கொண்டிருக்குமா? இப்படி நான் கேள்விப்பட்டதுகூட இல்லையே?' என்றார் அக்பர்.

'என் வார்த்தையைச் சிறிது பொறுமையோடு அரசர் கேட்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மை விளங்கும். சபைக்கு நான் புறப்படும் சமயம் குழந்தை அழத் தொடங்கியது.' என்ன வேண்டும்? ஏன் அழுகிறாய்?' என்றேன் பதில் கூறாமல் அழுது கொண்டே இருந்தது. என்ன கேட்டும் பதில் கூறவில்லை.

நானும் சமாதானம் கூறிக்கூறி அலுத்துப் போனேன். ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. பிறகு, 'கரும்பு வேண்டும்' என்று கேட்டது 'வாங்கி வரச் சொல்லிக் கொடுத்தேன். மறுபடியும் அழுகை 'கரும்பை நறுக்கித் துண்டுகளாக்கித் தருமாறு' கேட்டது. அப்படியே செய்து கொடுத்தேன். தின்று கொண்டே இருந்த குழந்தை மறுபடியும் அழத் தொடங்கியது. **(தொடரும்)**

# கல்விச் செல்வம்


எல்லாச் செல்வங்களிலும் சிறந்த செல்வம் கல்வியே! கல்வியானது திருடர்களால் திருட முடியாது. நெருப்பினால் எரிக்க முடியாது. ஏனையோருக்குக் கொடுக்கக் கொடுக்க குறைவுபடாது. கல்வியானது கற்பிக்க பெருகிக் கொண்டே செல்லுமன்றி ஒரு போதும் குறையாது.

அரசனுக்கோ தன் நாட்டில் மட்டும் தான் சிறப்பு. ஆனால் கல்வி கற்றவனுக்கோ செல்லும் இடமெல்லாம் சிறப்புக் கிட்டும். இதனால் தான் சகோதரர்களே மூதுரையைத் தந்த ஔவைப் பாட்டி "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன் மன்னனுக்குத் தன்தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு" என்று அழகாகப் பாடி கல்வியின் சிறப்பை நமக்கெல்லாம் சொல்லிப் போயுள்ளார்.இப்பூவுலகில் உள்ள செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வமான கல்விச் செல்வத்தை நாம் கருத்துடன் கற்றல் அவசியம். கல்வியைத் தெளிவுடன் கற்கும் போது அறிவு வளர்ச்சி பெருகுகின்றது. இளமையில் கற்கும் கல்வியானது நன்கு மனதில் பதியும்.இதனாலன்றே நம் ஆன்றோரும்,'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்று கூறிச் சென்றுள்ளனர்.

கல்லில் செதுக்கிய சிற்பம் எவ்வாறு மறையாது இருக்கின்றதோ அது போன்றுதான் இளமையில் கற்கும் கல்வி நன்கு நினைவில் நிற்கும். கல்வி எனும் அப்பெருஞ் செல்வம் இல்லாவிடின் பிற செல்வங்கள் என்ன? ஆய்வுகள் என்ன கண்டுபிடிப்புகள் என்ன? சாதனைகள் என்ன? இவை எல்லாம் எட்டாக் கனிதான்.

எனவே, நாம் கடல் போன்ற கல்வியைக் கருத்தோடு கற்று நலம் பல பெற்று நல் வாழ்வு வாழ்வோமாக.

# சிங்கராஜவனம்



இலங்கையின் இயற்கைச்செல்வம் சிங்கராஜவனம். சுற்றாடல் இயற்கை வள அமைச்சின் கீழுள்ள இலங்கை வனத்திணைக் களத்தினால் நிர்வகிக்கப்படும் சிங்கராஜவனம் மனிதத்தலையீடுகள் மிகக் குறைந்த வனமாகவும் தாழ்நில மழைக்காடாகவும் விளங்குகின்றது.1988 ஆம் ஆண்டில் இவ்வனம் உலக மரபுரிமை தளமாக ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

27,643 ஏக்கர் பரப்பளவு கொண்ட இவ்வனம் கிழக்கு மேற்காக சுமார் 21 கிலோமீற்றர் நீளமும் வடக்கு தெற்காக 3.7 கிலோமீற்றர் அகலமும் கொண்டது. இவ்வனப்பிரதேசத்தின் வருடாந்த சராசரி வெப்பநிலை 23.6 பாகை செல்சியஸ் ஆகும். அதனால், வருடம்முழுவதும் வறட்சிக்காலமில்லாமல் இருப்பதே இப்பிரதேசத்தின் சிறப்பம்சமாகும். இவ்வனத்தின் தரைப்பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 200 மீற்றர் முதல் 1300 மீற்றர் வரையிலான உயரத்தில் அமைந்துள்ளது. இவ்வனத்தில் இனங்காணப்பட்டுள்ள 211 வகையான மர இனங்களில் 66% மரங்கள் இலங்கைக்கே உரிய மரங்களாகும்.சுதேச பறவையினங்களில் 95% சிங்கராஜ வனத்தில் காணப்படுகின்றன. இவ்வனத்தில் 'சாம்பூ' இன மான்கள் அதிகமாக வாழ்கின்றன. சுண்டெலி மான்களும் குரைக்கும் மான்களும் காணப்படுகின்றன. ஊதாமுக இலைக்குரங்குகள், விரியன் பாம்புகளும் இவ்வனத்தில் ஆங்காங்கே நடமாடுகின்றன. இவ்வனத்தில் தாவர அடர்த்தி மிகக் குறைவாகவே காணப்படுவதால் இங்கு மிருகங்களும் பறவைகளும் மிக இலகுவாகவும் சுதந்திரமாகவும் நடமாட முடிகின்றது.

# விடுகதைகள்

1. அறிவின் மறுபெயர், இரவில் வருவது. அது என்ன?

2. பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன?

3. ஆயிரம் தச்சர் கூடி அழகான மண்டபங் கட்டி, ஒருவர் கண்பட்டு உடைந்ததாம் மண்டபம். அது என்ன?

4. எட்டாத ராணியாம் இரவில் வருவாள், பகலில் மறைவாள். அது யார்?

5. ஒளி கொடுக்கும், விளக்கு அல்ல. சூடு கொடுக்கும், தீ அல்ல பளபளக்கும், தங்கம் அல்ல. அது என்ன?

6. அள்ளவும் முடியாது, கிள்ளவும் முடியாது. அது என்ன?

7. ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?

8. ஊருக்கெல்லாம் ஓய்வு, உழைப்பவர்க்கும் ஓய்வு இவனுக்கு மட்டும் ஓய்வில்லை. இரவும் பகலும் ஓட்டந்தான். அது என்ன?

9. ஊசி போல் இருப்பான், ஊரையே எரிப்பான். அது என்ன?

10. ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன?

**விடைகள்:**
1. மதி 2.பெற்றோல் 3.தேன்கூடு 4.நிலா 5. சூரியன் 6. காற்று 7.குடை 8. மூச்சு 9. தீக்குச்சி 10. கொடி

# மரம் வளர்ப்போம்



பள்ளி செல்லும் தம்பியே !
பசுமை எங்கும் நிறைந்திட
வீட்டில் வீதியில் பள்ளியில்
விரும்பி மரம் நடுவாய் !

சுற்றுச் சூழல் சிறந்திடுமே !
சோம்பல் எல்லாம் பறந்திடுமே !
மண்ணின் மைந்தன் மரங்களினால்
விண்ணின் மழைத்துளி கிடைத்திடுமே

புவியின் வெப்பம் குறைந்திடுமே !
குளங்கள் எல்லாம் நிறைந்திடுமே
தூய காற்று கிடைத்திடுமே !
இயற்கை இன்பம் பெற்றிடுமே !

பிறந்த நாளில் நட்டிடலாம்
அரசு விழாக்களில் வைத்திடலாம்
நினைவுப் பரிசாய்த் தந்திடலாம்
நீங்கா இன்பம் பெற்றிடலாம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








வித்தியாவின் தீர்ப்பு பற்றி?

சம்பந்தன் ஐயா தீர்வு பெற்றுத் தருவாரா?

ஐ.நா. தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுத் தருமா?

**சயன் — யாழ்ப்பாணம்**

**இடைக்கால அறிக்கை. அப்படி என்றால் என்ன?**

எதுவுமே இல்லாத ஒன்றில் எல்லாம் இருக்கிறது என்று எதைச் சொல்லுகிறார்களோ அவை எல்லாம் இடைக்கால அறிக்கை எனப் பொருள்படும்.

**மனோ — இணுவில்**

**தங்களுக்கு நடித்த அனுபவம் ஏதாவது?**

ஈழத்தின் தலைசிறந்த நாடகநெறியாளர் குழந்தை ம.சண்முகலிங்கத்திடம் நாடகம் படித்தவன் நான். நடிப்பின் நுணுக்கங்களை அக்குவேறு ஆணிவேறாக எனது ஆசான் எனக்குக் கற்பித்திருந்தார்.

என்னை விட நல்ல நடிகன் எங்கும் இல்லை என்ற கர்வம் இருந்தது.தேர்தல கால நாடகங்களைப் பார்க்கும் போது தான் அப்பாடா நடிப்பில் இன்னும் இவ்வளவு இருக்குமோ என்ற எண்ணம் எனக்குள் தோன்ற ஆரம்பித்தது.

**தனுஷ் — உடுவில்**

**எனது மனைவியின் தங்கைக்கு புத்தி சொல்லலாமா?**

தாராளமாகச் சொல்லலாம். புத்தி சொல்லும் போது உங்கள் மனைவி அருகில் இருப்பது மிக முக்கியமானது தனுஷ்.

**நந்தகுமார் — மானிப்பாய்**

**சம்பந்தன் ஐயா தீர்வு பெற்றுத் தருவாரா?**

என் அப்பப்பாவிடம் கேட்ட கேள்வி. அதன் பின் என் அப்பாவிடம் கேட்டு இப்போது என்னிடம் கேட்கிறீர்கள்.

இன்னும் பத்து வருடங்களின் பின் இதே கேள்வியை என் மகனிடம் கேட்பீர்கள். பாவம் அவனும் அப்பப்பா, அப்பா இப்போது என்னைப் போல் பதில் எழுதத் தெரியாமல் முழிப்பதை விட வேறொன்றும் நடக்க போவதில்லை.

**சுதன் — குப்பிளான்**

**ஐ.நா. தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுத் தருமா?**

ஐ.நா.ரெடி. ஆனால் அதை கேட்டுப் பெறுவதற்கு எம் தமிழ் தலைமை தயாரில்லையே. இவர்கள் தான் இங்கே அரசைப்பாதுகாப்போம் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டார்களே! கொடுத்த வாக்குறுதியை எப்படி மீற முடியும். அது அரசுக்குச் செய்யும் துரோகம் அல்லவா. இதைச் சொல்லும்போது அப்படியென்றால் தமிழருக்கு செய்வது துரோகம் இல்லையா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. தமிழராகிய நாம் எமது வாக்கைத்தானே கொடுத்தோம் ஆனால் அவர்கள்... சிந்தியுங்கள். அடுத்த தேர்தலில் செயற்படுங்கள்.

**சிந்து — முள்ளியவளை**

**வித்தியாவின் தீர்ப்பு பற்றி?**

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் இறுதியில் தர்மமமே வெல்லும் என்பது ஒரு போதும் பொய்த்துவிடாது. ஒரு ஏழை மாணவிக்கு நடந்த கொடுமைக்காய் இந்த நாடே கொந்தளித்தது. இறுதியில் தவறுக்கு காரணமானவர்களை நீதி தண்டித்து விட்டது.

சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று இவ்விடத்தில் பல தடவை நாம் கூறியிருக்கிறோம்.




**கபில் — திக்கம்**

**குட்டிக்கதை ஒன்று?**

பக்கத்துவீட்டுச் சிறுவன் சொன்னான் உலகத்திலேயே கஷ்டமானது எதுவென்றால் யாராவது அறிவுரை சொல்லும் போது சிரிப்பை அடக்கிவிட்டு முகத்தை சீரியசா வைச்சிருக்கிறது என்றான்.

மூதேவிக்கு மூன்று நாளைக்கு முன்னர் தான் அறிவுரை சொன்னேன்.

**தயா — மாதகல்**

**நீங்கள் எதைப்பார்த்து கவலைப்பட்டிருக்கிறீர்கள்?**

குப்பை கொட்ட வேண்டாம் என்று கும்பிட்டுக் கேட்ட போதெல்லாம் நிறுத்தாதவர்கள் C.C.T.V கமரா கண்காணிக்கின்றது என்று போட் வைத்ததும் நிறுத்திவிட்டார்களே.

**தேவா — திருநெல்வேலி**

**ஜோக் பிளீஸ்?**

மாமியாருக்கும் மருமகளுக்கும் நடக்கும் சண்டையில் மனைவி பக்கமும் இல்லாமல் அம்மா பக்கமும் இல்லாமல் [illegible] நிற்பவனே நல்ல குடும்பஸ்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுகி — மருதனார்மடம்**

**தங்களுக்கு சினிமா பார்க்கும் அனுபவம் உண்டோ?**

அவ்வளவாக இல்லை. இருந்தாலும் அண்மையில் வெளியாகிய கூட்டத்தில் ஒருவன் படம் பார்த்தேன். உணவகங்களில் வீணாகும் உணவுகளை சேகரித்து உணவின்றி கஷ்டப்படுபவர்களுக்கு, மனநலம் பாதிக்கப்பட்டு வீதியில் திரிபவர்களுக்கு, பிச்சைக்காரர்களுக்கு கொடுக்கும் ஒரு சமூக சிந்தனை கூறப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்து கடைகளிலும் நிறைய உணவுகள் வீணடிக்கப்படுகின்றன. அவற்றை சேகரித்து உணவில்லாதவர்களுக்கு உணவளித்தால் என்ன என்ற சிந்தனை தோன்றியிருக்கிறது.

**கோபு — திடலூர்**

**நடிகை ஸ்ரீதிவ்வியாவின் போன் நம்பர் தருவீர்களா?**

நாசமறுக்க. முதலில் படித்து குடும்பத்தை பார்க்கிற வேலையைப்பாருங்கடா.

**நிக்சன் — விசுவமடு**

**இலஞ்சம் வாங்குபவர்கள் பற்றி?**

அதற்கு முன் இலஞ்சம கொடுப்பவர்கள் பற்றி சிந்திக்க வேண்டும். வாங்குவதை விட கொடுப்பதற்கு தண்டனை அதிகம் வழங்க வேண்டும். வாங்குவதற்கு தயாராக இல்லாத நேரங்களிலும் கொடுப்பதற்கு தயாரானவர்கள் வாங்கிக் கொள்ள திணிக்கப்படுகிறார்கள். உங்களுக்கு நடந்த விடயம் தான் சிந்தித்துப்பாருங்கள் புரியும்.

**ரவின்சன் — விசுவமடு**

**எதிர்க்கட்சித்தலைவராக நீங்கள் இருந்தால்?**

பெயரளவிற்கு மட்டும் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க நான் விரும்பமாட்டேன். ஆதலால் அந்தப் பதவியை தூக்கி எறிந்து விட்டு என்னை நம்பி வாக்களித்த மக்களுக்காய் அவர்களின் வாழ்வு சிறக்க போராடுவேன். மக்களுக்கு ஏதும் செய்ய வேண்டும் என்று சிந்திக்கும் ஒரு இளைஞனை (வியாசர்) எதிர்க்கட்சி தலைமை என்ற கூண்டில் அடைத்து மட்டுப்படுத்தி விடாதீர்கள்.

**கருணானந்தன் — ரெட்பானா**

**சிம்ரன் மீண்டும் சினிமாவுக்கு வந்தால் ?**

ஸ்ரீதிவ்வியா, சிம்ரன் அடப்பாவிங்களா நீங்கள் இன்னும் திருந்தவே இல்லையா?

சிம்ரனுக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகள் இருக்கிறது. இன்னும் மூன்று வருடங்களில் சிம்ரனின் பிள்ளைகள் நடிக்க வரப்போகிறார்கள். இப்ப போய்...

### நீ வருவாயா?

உன்னை நேசிக்கின்றேன்
நீ வருவாயா
உன் மென் துளிகளால்
என்மென் மேனியை
உன் முத்துத் துளிகள்
முத்தமிட்டு விளையாட
என்மேனி நடுநடுங்க
நனைத்து குதூகலித்தாய்
நினைவில்லையா?
வானத்தில் உன் வர்ண ஜாலம்
கான முழக்க இசை வரவேற்க
மின்னல் ஒளி மின்னித் தறிக்க
நீ தூரப்போகும் விந்தையென்ன
வற்றிய குளக்கரையில் பசுக்கள்
நாவரண்டு பரிதவிக்கின்றன
காற்றோடு தூது அனுப்பி
கரையோரம் காத்திருக்கின்றேன்
விரைவாக வந்துவிடு என்னவளே
நீ வந்தால் வரம்பு உயரும்
வரம்புவர நீ உயர்வாய்
நீ உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர
பொழிந்திடு மழையானவளே

**ஆ.இந்திரா, கரவெட்டி**

### என் தோழி

கல்லூரிக் காலங்களில்
கச்சிதமாய் பரிமாறிய
கருத்துக்கள் என்றும்
என் நினைவலையில்
நிலைக்கின்றது என்தோழி!
உன் நட்பிற்காய்
உன் அன்பிற்காய்
நிதம் ஏங்குகின்றேன்
தொலைதூரத்தில்
நீ எங்கோ? நான் எங்கோ?
என பிரிந்துவிட்டது எம் உயர்கல்வி
உன் கலகலத்த சிரிப்பும்
அடிக்கடி என்னோடு போடும்
செல்லக்குறும்பும் எங்கோ?
சென்றுவிட்டதென
துடித்திடும் உன் தோழிக்கு
பதில்கூற பரிவுடன் வா
என்னருமைத்தோழி
உன் வரவிற்காய் நான்...

**ற.பியூலா, மிருசுவில்**



## கவிதைக் கலசம்

### கரையுது மனம்

வாய்ப்புக்கள் எல்லாம்
கண் முன்னே
கை நழுவிப் போகும் போதெல்லாம்
கடந்த கால எச்சங்களை
நினைத்து... நினைத்து
கண்ணீரை மட்டுமே
விட முடிகின்றது

ஏன் பிறந்தோம்
என்பதை விட– இறுதி
யுத்தத்தில்– ஏன்
தப்பினோம் என்றே!
இரைகின்றது மனம்

இரையைத் தேடவா?
இறையைத் தேடவா?
பாதியிலே பறிபோன
வாழ்வைத் தேடவா?

எஞ்சியது ஒன்றுமில்லை
என்பதா– மிஞ்சியதைக்
கஞ்சி கொடுத்தாவது
காப்பாற்று என்பதா?

வட்டியோடு கடன் வந்து
வாசல் தட்டி நிற்கையிலே
உண்ட தட்டும் காய்கிறது– கையோடு
கடன் பட்ட நெஞ்சம் கனக்குது

கோழியோடு முட்டை விற்று
முன்னுக்கு வந்திடலாம் என்றால்

ஆனிமாத தூக்கத்திலே–அவை
ஒரேயடியாய் தூங்கிவிட்டது

பால் விற்றுப் பிள்ளைகளைப்
படிப்பித்துவிடலாம் என்றால்

என் கதையும்
உப்பு விற்கப் போனேன்
மழை கொட்டோ
கொட்டென்று கொட்டுது
மாவு விற்கப் போனேன்...
கதையாய் ஆச்சுது

என்ன செய்ய என்னுள்ளே
ஆயிரம் கேள்விகள்
விடையில்லாமல் கேள்விகளாகவே
இருக்க

காலம் மட்டும்
ஏக்கத்துடனே... தன்பாட்டில்
கரைகிறது மனது போலவே

**தங்கவேலு சுபாஜினி**

### வித்தியா

என் தங்கை வித்தியாவே
கலங்காமல் கண்மூடு

மனிதர்க்கு
மனிதத்தைப் புரிய வைத்து விட்டு
மௌனமாய் உறங்கும் தங்கையே!

மாற்றத்திற்காய்
மக்கள் சக்தி உருவெடுத்தது
உன்னால்...

ஈனப் பிறவிகள்
இனியும் இந்த உலகிற்கு
தேவையில்லை என
திடம்பூண்டது உன்னால்

நாசம் செய்தவரின்
கழுத்தில் கயிறுவிழ
தாகம் கொண்ட எம் நா
தணிகிறது என் தங்கையே!

உனக்காய்
உன் மீது காட்டப்பட்ட
அநீதிக்காய்
வெகுண்டெழுந்த ஒவ்வொருவரும்
உன் தமயன்களே!

இதயத்தில் கனவு சுமந்து
சிறகடித்த செல்லமே
நிம்மதியாய் தூங்கிவிடு
அடுத்த பிறவியிலும்– உன்
அன்னையின் வயிற்றில் பிறந்து
அவள் கனவை நினைவாக்கு

உன் அன்னையின் கதறல் கண்டு
மனம் உருகி அழுத
அண்ணனின் ஆசை இது

**மாவை. நா.கஜேந்திரன்**

## மௌனத்தின் தேடல்– 370



### என் நிலாவா இது

எதிரிகள் புடை சூழ
இனிய கிராமம் எரிந்தது
எண்ணிலா உயிர்கள் பிரிந்தன
ஏராளம் உடைமைகள் அழிந்தன
என் மனக்கோட்டைக்குள்
உயிராய் இருந்த
என் நிலாவும்
எதிரி குண்டுவீச்சுக்குள் பலி
இப்போது...
பொம்மையாய் என் கையில்
பொக்கிஷம் கிடைத்தது போல்
பார்த்து மகிழ்கிறேன்
என்றுமில்லா முகமலர்ச்சி
ஏனோ தெரியவில்லை
என் நிலாவா இது?
எங்கே சிரி...



**மானந்தன்**
**அல்வாய்**

### வலிய பிணைப்பு

பட்சியாய் நீ சுதந்திரம் பெற்றிட
பந்தம் கொண்டேன்
பார் போற்றிட நீ வாழ– என்
கரத்தை நானளிப்பேன்
பிணமாய் போன உன் உறவை
பிஞ்சில் அறியா நெஞ்சுடன்
பிம்பமாய் உன் உருவை
பீசமம் உளத்தில் தழுவி– நீ
பிறப்பை சுவைக்கும் வரை
பந்தமாய் உனை தொடர்வேன்

**சு.சுருத்திகா**
**யா/ வ.ம.க.**

### அழகிய பரிசு

அரவணைத்து அன்பு
செய்த அன்னைக்கு
அளித்திடா முடியா
அன்பை அளிக்க
ஆண்டவர் தந்த அழகிய பரிசாய்
மகளின் உருவம்
தன் தாயின் மறு தோற்றமாய்
மகிழ்ந்து கொண்டாடும்
தந்தையின் மனது
அள்ளி எடுத்து தன் மகளை
ஆகாயத்திற்கு உயர்த்தி
அகமலர்ந்து நன்றி கூறும்
ஆண்டவனுக்கு

**சி.அபிராமி**
**கந்தரோடை**

### பிரியாத அன்பு

அப்பா அப்பா என்னை நீங்கள்
உயர உயர தூக்கி
நானும் உயர வாழ்த்தும்
உங்கள் அன்பு போதும்
சின்னப் பிள்ளை நானும்
உங்கள் எண்ணம் போல
உலகில் நானும் சிறக்க
உங்கள் கரமே வேண்டும்

**புன்னைநீராவி நகர்**
**ம.அருள்யோன்சன்**

### மறுபிறவி

அன்னையின் மறுபிறவி நீயென்று
உன்னை ஆரத்தழுவி
மகிழும் தந்தையை
என்றைக்கும் புன்னகைக்கு
சொந்தமாக்க எண்ணி
இன்புறுகிறாய் போலும்...

**சி.புஷ்பராணி**
**மறவன்புலோ**

### தங்கை கிடைத்தாள்

யுத்த பூகம்பம் எத்தனை
உயிர்களை காவு கொண்டது
கணக்கு போட்டு காட்டவா
காலனுக்கு சொல்லவா
என்ன செய்ய நான்
தாய்மையும் தொலைந்து போச்சு
தந்தையின் உயிரும் போக
எந்தனின் வாழ்க்கை போச்சு
கஷ்டத்தை சுமந்த எனக்கு
என் வலி வேதனை மறக்க
சந்தோசமாய் தங்கை கிடைத்தாள்

**வா.சாரங்கன்**
**முத்தையன்கட்டு**

### ஒரு தந்தையின் தஞ்சம்

தன் பூதலத்தாரை மீட்க
பல மோதல்களை துணிந்து ஏற்க
அன்று ஆயுதம் தொட்டாள் உன் அம்மை
ஆனால் உன் ஒரு பெரும் பொறுப்பு
உளதை மறந்து மாண்டாள் விட்டு எம்மை
அணையாத் தீப்போல் தந்தை
என் மனம் தகர்கிறது
எனின் உன்னை வளர்த்து கரைசேர்க்க
உன் கண் ஒருதுளி கீழ் சிதறாது
என் மனையாள் வளர்ப்பது போல்
வளர்ப்பேன் எனத் துணிந்து
ஏறு போய் உன் பணி காப்பேன்
எனவாறு தஞ்சமொழி உரைத்துன்
அன்னை காதிற்கேட்க

**இ.தனா**

### தங்கத் திரவியமே!

ஆசையக்கா பெற்றெடுத்த
தங்கத் திரவியமே– உன்
மாமன் அழைக்கின்றேன்
அருகில் வருவாயோ...
அன்பாய் ஒரு முத்தம் தருவாயோ?
கைநீட்டி உனைத் தூக்க
நான் நடந்து வருகையிலே
துள்ளி நீ ஓடுமழகை
தள்ளி நின்று வேடிக்கை
பார்க்கிறேனடி கிளியே
உறக்கத்தில் உன்
பிஞ்சுப்பாதங்களால்– என்
நெஞ்சில் உதைக்கும் போது
அஞ்சுகமே அத்தனையும்
மறந்து காற்றில் பறக்கும்
பஞ்சுபோல் ஆகிறேனடி நான்

**யோ.காண்டீபன்**
**மானிப்பாய்**

## மௌனத்தின் தேடல் –371



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 04.10.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா இல்லாத வீடு

கோயில் கொடியேறி விட்டால் போதும். ஊர்மக்கள் பாடு ஒரே கோலாகலம் தான். முதியவர்கள் ஆசாரசீலர்களாய் எம் பெருமான் சந்நிதானமே கதியெனக் கிடந்து நெஞ்சத்தால் நெக்குருகி, இம்மைக்கு மட்டுமல்ல... மறுமைக்கும் வரம் வேண்டிக் கிடப்பர். நடுத்தர வயதினரோ... தம்மை மறந்தவராய், தம் பிள்ளைகளின் எதிர்காலம் மேன்மையுற இறைநாமத்தை உச்சரித்து, விரதமிருந்து, வேண்டுதலை முன்வைத்து வணங்குவர். இளம் வயதினருக்கு... விதம் விதமாகத் தன்மை அலங்கரித்து எம்பெருமானது வீதிகளில் உலா வருவதும் அரட்டை அடிப்பதுமென பொழுதுகள் இதமாகக் கழியும். சிறிசுகளுக்கோ இவையெதுவும் சரிப்பட்டு வராது. ஐஸ்கிறீமிலும் அங்கு வியாபாரிகளால் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விளையாட்டுப் பொருட்களிலும்தான் நாட்டம் இருக்கும். சிறுவர்களை அழைத்து வருபவர்கள் பாடு அதோகதிதான். இறைவழிபாடும் இல்லாமல் அவர்கள் இழுத்த இழுப்பிற்கு அல்லாட வேண்டியதுதான்.

ஆனால்... மனோன்மணியின் நிலை வித்தியாசமானது. திருவிழாக் காலங்களில் அதிகாலையிலேயே ஆசாரமாய் வந்து எம்பிரானுக்கு நேர்த்தி செலுத்தி வணங்கிவிட்டு வந்துதான் வீட்டில் அடுப்பு பற்ற வைப்பாள்.

அன்று தேர்த்திருவிழா. மகள் தமிழ் வாணியும் அம்மாவுடன் இணைந்து தேர்த்திருவிழாவுக்குப் போவதாக ஏற்பாடு. மனோன்மணியும் தேருக்குப் பின்னால் தனது நேர்த்தியைச் செய்ய வேண்டியிருந்தது. அதிகாலை ஆறு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்படுவதாக ஏற்பாடு. வாணி அம்மாவிடம் கெஞ்சினாள்.

" அம்மா! எனக்கென்று நீங்கள் போன மாதம் செய்த முத்துச் சங்கிலியைத் தாறீங்களே. என்னுடைய பிரன்ட்ஸ்ஸ"க்குச் சொல்லிப்போட்டு வந்தனான். தேருக்கு வரேக்க போட்டுக் கொண்டந்து காட்டுறன் எண்டு"

" எடி வாணி! உனக்கென்ன விசரா. இண்டைக்கு சன நெருக்கடியில ஆரும் அறுத்துப்போடுவினம். நான் பாடுபட்டு சீட்டுப்போட்டுச் சேமிச்ச காசில வேண்டினது. நீ என்னெண்டா... அதையும் தொலைச்சுப்போட்டு வாறன் எண்டு நிற்கிறாய்"

வாணியின் முகம் வாடிப்போனது. அம்மா அப்படிச் சொல்லுவாள் என அவள் எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை. எதுவும் பேசாமல் முகத்தை உம் என்று வைத்துக் கொண்டவளாய் "கவரிங்" சங்கிலியை எடுத்துப் போட்டுக் கொண்டாள். இருந்த போதிலும் அம்மா வாங்கித்தந்த அரைத்தாவணியுடன் கூடிய பாவாடை சட்டை அவளுக்கு மிகவும் அழகாக இருந்தது. அந்த மகிழ்ச்சியில் முத்துச் சங்கிலி போடாத குறையை மறந்தே விட்டாள்.

நடை தூரத்தில் இருந்த கோயிலுக்கு வந்ததும் வாணியுடன் அங்கு காத்து நின்ற சிநேகிதிகள் இணைந்து கொண்டனர். அம்மா கோயிலுக்குள் சென்று இறை வணக்கத்தில் ஈடுபட, வாணியும் சிநேகிதிகளும் சுவாமி தேருக்கு வரும் காட்சியைக் காண்பதற்காக ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று கொண்டனர்.

நேரம் போகப் போக சனக்கூட்டம் அதிகரித்தது. சன நெரிசலிடையே வாணி தன் சிநேகிதியின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள். உள்வீதியிலிருந்து சுவாமிவாசலினூடாக வெளியே வரவும் சனக்கூட்டம் ஒருவரையொருவர் இடித்து முண்டியடித்துக்கொண்டு முன்னேறினர். அந்தச் சமயத்தில் யாரோ ஒரு பெண்ணின் அபயக் குரல் கேட்டது.

"ஐயோ என்ரை தாலிக்கொடி"

மக்கள் கூட்டத்தில் சிறு சலசலப்பு தோன்றி சற்று நேரத்தில் ஓய்ந்து போனது. வாணிக்கு இப்போதுதான் அம்மாவின் அறிவுரை மனதில் உறைத்தது. அலங்கார நாயகனாய் ஆறுமுகங்களுடன் தேரில் எழுந்தருளிய முருகப் பெருமானை மனமுருகி வேண்டிய பக்தர்களின் கூட்டத்தில் ஒருத்தியாய் வாணியும் நின்று கொண்டிருந்தாள். அந்தக் கண்கொள்ளாக் காட்சியினால் ஈர்க்கப்பட்ட பக்தர்களின்



"அரோகரா" கோஷமும் மங்கல வாத்தியங்களின் இன்னிசை ஒலியும் முழங்க மக்கள் வெள்ளமென புடைசூழ தேர்ச சில்லுகள் உருள ஆரம்பித்தன.

வாணியும் கூட்டத்தினருடன் நகரத் தொடங்கினாள். ஆனால் தோழியின் கைப்பிடியை விடவில்லை. மெதுமெதுவாக தேர் வீதி வலம்வர, தேரின் பின்னால் நேர்த்தி செய்யும் அடியவர்களும் தொடர, இடையிடையே காவடி, கர்ப்பூரச் சட்டி, பாற்செம்பு எனப் பக்திப் பரவசத்தில் அந்தச் சந்நிதானம் மூழ்கிக் கிடந்தது. தெய்வீகக் களை பொருந்திய அந்தச் சூழல் எந்த கொடியவரையும் ஒரு கணம் ஈர்த்து, பக்தியில் மூழ்க வைக்கும் தன்மையுடையது. வாணி மட்டும் அதற்கு விதிவிலக்கானவளா... என்ன அருள்பாலிக்கவென தேரிலே எழுந்தருளியிருந்த இறையவனாம் இளவல் முருகப்பெருமானிடம் மனமார இறைஞ்சினாள்.

" என்னப்பனே! முருகப்பெருமானே! நான் நன்றாகப் படித்து வரப்போகும் ஏ.எல். பரீட்சையில் நல்ல பெறுபேறு எடுக்கவேணும். ஒரு சின்ன வேலையொன்று எனக்குக் கிடைத்து விட்டால் காணும். கஷ்டத்தில உழலும் என் அம்மாவுக்கு நான் ஆறுதலாய் இருக்க வழி பிறந்துவிடும். எம்பெரு மானே! தகப்பனில்லாத இந்த அபலை க்கு நீயே வழிகாட்டவேண்டும்"

கண்களிலிருந்து நீர் பொழிவதையும் பொருட்படுத்தாது அவள் மனதளவில் முருகனிடம் ஒன்றி வரம் கேட்டாள். நிவேதா அவளை உலுப்பினாள்.

" என்ன வாணி! பக்திப் பரவசத்தில் மூழ்கிப் போய் விட்டீரோ. கண்களிலிருந்து கண்ணீர் வழிவதுகூடத் தெரியாமல் பிரார்த்தனை பலமாயிருக்குது"

வாணி தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். தேர் இருப்புக்கு வந்து விட்டது.வாணியும் நிவேதாவும் முன் மண்டபத்தின் ஓர் ஓரத்தில் இடம்பிடித்து அமர்ந்து கொண்டனர். மக்கள் கூட்டம் கோயிலுக்குள் நுழைவதும் வெளியே வருவதுமாக அலை மோதிக்கொண்டிருந்தது. அம்மாவும் அவர்களில் ஒருவராய் வியர்த்து, விறுவிறுத்து களைத்த முகத்துடன் உள்வீதி நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

"அம்மா யாருக்காக மெய் வருந்தி நேர்த்தி செய்கிறாள்? அப்பா வருவார் என்ற நம்பிக்கை இன்னும் அவளுள்ளத்தில் இருக்கிறதா?"

வாணியின் எண்ணங்கள் பின்னோக்கிப் பாயத் தொடங்கின. இறுதிக் கட்டப் போரில் அண்ணாவைக் காவு கொடுத்துவிட்டு அப்பா, அம்மா அவளென மூவருமாக படாத துன்பமெல்லாம் பட்டு ஒருவாறு செட்டிகுள முகாம் வரை வந்து வாழத் தொடங்கியபோது தான் அந்த நிகழ்வு நடந்தது.

ஒருநாள் அப்பாவை விசாரணை ஒன்றுக்காக அழைத்துப் போவதாகச் சொல்லி கூட்டிப் போனார்கள். அப்போது வாணிக்கு பத்து வயது இருக்கும். அம்மா அழுது புலம்பினாலும் அப்பா வந்துவிடுவார் என சிறுபிள்ளையான அவள் நம்பினாள். ஆனால்... அப்பா வரவில்லை. அம்மா அலைந்து உலைந்து போய் நம்பிக்கையை இழந்தவளாய் இன்று வாணிக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாள். வெளிநாட்டில் வசிக்கும் உறவினர் ஒருவர் தனது பெரிய வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு அதேவளவில் இருக்கும் சிறிய வீட்டை அவர்களுக்கு கொடுத்திருக்கிறார். அம்மாவின் தையல் வேலைதான் அவர்களுக்கான வருமானம். அதைவிட அம்மா சிறு கைத்தொழில்களையும் செய்வாள். மோர் மிளகாய், வடகம், ஊறுகாய் என பலவற்றைத் தயாரித்து கடைகளுக்குக் கொடுப்பாள். வருமானத்திற்கேற்றவாறு வாழ்க்கையையும் அமைத்துக்கொண்டதால் வாழ்க்கையெனும் [illegible] ஓடிக் கொண்டிருந்தது. வாணி படித்து முன்னேறினால் தான் அவர்களுக்கு விமோசனம்.

அம்மா அர்ச்சனை செய்துகொண்டு வந்ததும் நேரமும் ஒரு மணியாகிவிட்டது. மூவரும் போய் அன்னதான மடத்தில் உணவருந்திவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டனர். நிவேதா பாதி வழியிலேயே விடைபெற்றுப் போய் விட்டாள். வாணியும் அம்மாவும் களைத்து விழுந்து வீடு போய்ச் சேர்ந்தனர்.

"பாத்தியே கோயிலில எவ்வளவு பேரிட்டை நகைகளை அறுத்துப் போட்டாங்கள். நீ பவுண் சங்கிலி போடவேணும் எண்டு அடம்பிடிச்சாய். இப்ப தெரியுதே"

அம்மா மகளிடம் சகஜமாகச் சொல்லிக்கொண்டிருக்க வீடும் வந்துவிட்டது. வீட்டுக்குள் நுழையப் போன வாணி அலறினாள்.

"அம்மா! வீட்டுக்கதவு திறந்திருக்குது"

மனோன்மணி அதிர்ச்சியுற்றவளாய் ஓடிவந்து பார்த்தாள். வீட்டுக்குள் பொருட்கள் யாவும் அள்ளி இறைக்கப்பட்டிருந்தன. அவசர அவசரமாக அவள் தான் ஒரு துணியில் முடிந்து வைத்திருந்த புத்தம் புது முத்துச் சங்கிலியையும் தனது தாலிச் சரட்டையும் தேடினாள். கிடைக்கவில்லை. அத்துடன் தையல் மெசினின் இழுப்பறைக்குள் வைத்திருந்த சொற்ப பணத்தையும் காணவில்லை.

" அம்மா! இஞ்சை பாருங்கோ. யன்னல் கம்பியை வளைச்சிருக்கினம்"

வாணி கத்தினாள். அத்துடன் யன்னலினூடாக வெளியே எட்டிப் பார்த்தவள் மீண்டும் குரல் கொடுத்தாள்.

"அம்மா! ஆட்டுக்கிடாயையும் காணயில்ல"

மனோன்மணி செய்வதறியாது தலையில கைவைத்தவாறு அப்படியே வீட்டுப் படியில் அமர்ந்து கொண்டாள்.

"நகையைப் போட்டுக் கொண்டு போனாலும் கள்ளர் பயம். வீட்டிலை வைச்சாலும் கள்ளர் விடுகினமில்லை. நாங்கள் என்னதான் செய்யிறது. யாரிட்டை போய்ச் சொல்லுறது? ஒரு வீட்டிலை அப்பா இருந்தால்.... பிள்ளையள் எல்லாம் அவருடைய கட்டுக்கோப்புக்கை கட்டுப்பாடாய் நடந்து கொள்ளுவினம். அப்பா இல்லையெண்டால் எல்லாரும் தங்கடை போக்கிலை தாறுமாறாய் நடந்து கொள்ளுவினம். தண்டிக்கிறதுக்கு அப்பா இருக்கிறார் என்ற மனப்பயமே அவர்களைக் குற்றம்செய்யவிடாமல் தடுக்கும். ஆனால்... இன்றைக்கு... இந்த மண்ணில... எங்கட நிலைமை... அப்பா இல்லாத வீடு மாதிரித்தான் கிடக்கு"

சிறுகச் சிறுகச் சேமித்து தான் தேடிய தேட்டமெல்லாம் சூறையாடப்பட்டுவிட்டதை எண்ணி அவளது இதயம் வெடித்து விடும் போலிருந்தது. சிறிது நேரம் கண்களை மூடியவாறு அப்படியே இருந்தாள். அம்மாவின் நிலை கண்டு மகளும் தவித்துப் போனாள்.

திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவளாய் மனோன்மணி தனது கைகளில் ஒட்டிக் கிடந்த மண்ணைத் தட்டியவாறு எழுந்தவள், உள்ளே போனாள். நாளைய பொழுது நமக்காக விடியும் என்ற நம்பிக்கை அவளது உள்ளத்தில் உத்வேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

- மலரன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கறுப்புச் சட்டை போட்டவன் யார் காலிலும் விழக்கூடாது"

## ராஜீவ் கொலைக் குற்றவாளி நானில்லை-பேரறிவாளன்

"வேலூர் சிறையில் இருக்கும் கைதிகள் அனைவருமே நண்பர்கள். அவர்களைப் பார்க்க வரும் உறவினர்களும் பெரும்பாலும் எனக்குத் தெரிந்தவர்க ளாகத் தான் இருப்பார்கள். ஒரு நாளா... ரெண்டு நாளா... 26 வருஷம் இருந்தா... யாருக்குத்தான் என்னைத் தெரியாது. எத்தனையோ பேர் வந்து போய்விட்டார்கள். புதிதாக தினமும் வருகிறார்கள்.

அதில் ஒருவர் கொஞ்சம் மனநிலை பாதிக்கப்பட்டவர் போல் செயற்படுவார். அவரின் அம்மா அவரைப் பார்க்க வந்திருந்தார். என்னை அந்த அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார் அந்தக் கைதி. 'இவர்தான்மா பேரறிவாளன்... செய்யாத தப்புக்காக 25 வருஷத்துக்கு மேல சிறையில இருக்கார்' என்று சொன்னதும், அந்த அம்மா சொன்னார்...

'நீ தானாப்பா அது. எப்ப ரி.வியைத் திறந்தாலும் ஒரு அம்மா அழுதுட்டே இருக்குமே... அவரோட மகனா நீ?' என்றார். அதைக் கேட்டதும் எனக்கு சிரிப்பு வந்துவிட்டது..."

- முகம் முழுக்க பூரிப்பும் பொங்கிய கன்னமுமாக பேரறிவாளன் சொல்லிச் சிரிக்கும் போது பின்னாலிருந்து ஒரு குரல்...

'ஆமாம்பா! என் அழுகை உனக்கு சிரிப்பா இருக்கா?" என்று குரலெடுத்துச் சொல்கிறார் அற்புதம் அம்மாள். 'நீ பின்னாலதான் நிக்கிறியாம்மா?" என மீண்டும் சிரிக்கிறார் அறிவு.

வேலூருக்கும் ஜோலார்பேட்டைக்கும் இடையில் இருப்பது 70 கிலோ மீற்றர் தூரம்தான். அங்கிருந்து பிணையில் வருவதற்குக்கூட 26 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன பேரறிவாளனுக்கு.

"ஒரு பெண்ணின் கண்ணீருக்கு சிறைக்கம்பியை வளைக்கும் வல்லமை இருக்கிறது என்பதைக் காட்டியது உங்கள் அம்மாதான்" என்கிறார் அருகில் இருந்த தோழர். "ஆமா...அம்மா இல்லைன்னா நான் நிச்சயம் பரோலில் வந்திருக்க முடியாது" என்று சொல்லும்போது பேரறிவாளனின் கண்கள் அற்புதத்தைத் தேடுகின்றன. ஓர் ஓரமாய் உட்கார்ந்து எல்லோரும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதைக் கவனித்தவராக இருந்தார்



அற்புதம். 26 ஆண்டுகளாய் தமிழ்நாட்டின் எல்லா ஊர்களிலும் எல்லாப் பத்திரிகைகளிலும் எல்லா ரி.விக்கள் முன்பாகவும் பேசிப்பேசிக் களைத்துப் போன அவருக்கு பேச என்ன இருக்கிறது?

"முதலமைச்சரைப் பார்க்க அற்புதம் அம்மாள் கோட்டைக்குப் போனபோது முதலில் பொலிஸார் உள்ளே விடாமல் தடுத்தார்கள். அப்போது ஒரு பொலிஸ்காரர், "உள்ள விட்டுருய்யா... இல்லேன்னா அந்த அம்மா ரோட்டுல உட்கார்ந்துடும்' என்று சொல்ல... அதன்பிறகுதான் அம்மாவை உள்ளே விட்டார்கள். அந்தளவுக்கு அவர்மீது எல்லோருக்கும் பயம் இருந்தது" என்கிறார் சட்டத்தரணி சிவகுமார்.

உடல்நலம் பாதிக்கப்பட்ட குயில்தாசனால் அலைய முடியாது. தாயும் தகப்பனுமாகி தமிழ்நாட்டை அற்புதம் அம்மாள் முற்றுகையிட்டார். அதனால்தான் பேரறிவாளன் சிறை வைக்கப்பட்ட விவகாரம் ஒரு குடும்பத்தின் சோகமாக இல்லாமல் பொதுப்பிரச்சினையாக மாறியது.

'இதை, பேரறிவாளன் என்ற தனிமனிதனுக்கு ஏற்பட்ட கொடுமையாகப் பார்க்கவில்லை. இன்னொரு நிரபராதி இப்படி அடைபட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தோடு தான் என்னுடைய சட்டப்போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறேன். தடா சட்டத்தின்படி கைது செய்யப்பட்டேன். தண்டிக்கப்பட்டேன். தடா சட்டமே செல்லாது என்று வந்துவிட்டது. நான் சொன்ன வாக்குமூலத்தை சரியாகப் பதிவு செய்யவில்லை என்று விசாரணை அதிகாரியே சொல்லிவிட்டார். "வெடிகுண்டு செய்தது யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை" என்று இன்னொரு அதிகாரி பேட்டி தருகிறார். ராஜீவ் கொலைச் சதி பற்றிய பின்னணியை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணையங்கள் தனது விசாரணையை முழுமையாக நடத்தி 27 ஆண்டுகள் கழித்தும் அறிக்கை தரவே இல்லை. இந்த நிலையில் ஆயுள் தண்டனை பெற்றவர்களையும் விடுதலை செய்யாமல் இருக்கிறார்கள். இந்த வழக்கு என்றாலே எந்த முடிவும் எடுக்காமல் தள்ளிப்போடுகிறார்கள். எனவேதான் இந்த வழக்கின் சதி குறித்து விசாரிக்க உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் இம்முறை தப்ப முடியாது" என்று தேர்ந்த சட்டத்தரணிபோல சட்டப் பிரிவுகளைச் சொல்லி நண்பர்களிடம் விளக்கிக் கொண்டிருந்தார் பேரறிவாளன். நீதி மறுக்கப்பட்ட ஒருவனை சட்டத்தரணியாக மாற்றக்கூடிய திறன் படைத்தவை இந்தியச் சிறைகள் என்பது அப்போதுதான் தெரிந்தது.

பேரறிவாளனைப் பார்க்க இரண்டு இளைஞர்கள் வருகிறார்கள். அவர்கள் தங்களை அறிமுகம் செய்து கொள்கிறார்கள். "எந்த ஆண்டு நீங்கள் பிறந்தீர்கள்?" என்று அறிவு கேட்கிறார்.

"1991" என்று அவர்கள் சொல்கிறார்கள்.

"அப்படியானால் நாம வாழ்க்கையிலேயே முதல் தடவையா இப்போதுதான் சந்திக்கிறோம்" என்று அறிவு சொல்லிச் சிரிக்கும்போதே முகத்தில் லேசாக சோகம் படர்கிறது.

"எனக்கும் பக்கத்து ஊர்தான். சின்ன வயசில் இங்கு வந்திருக்கிறேன். உங்கள் வீடு இதுதான் என்று சொல்வார்கள். யாரிடமும் அடையாளம் கேட்காமல் நானே வந்துவிட்டேன்" என்று அந்த இளைஞர் சொல்ல...

"ஓ! உங்களுக்கு வழி தெரிஞ்சுதா? எனக்கு என் வீடே எதுன்னு தெரியலை. அந்தளவுக்கு மனசுக்குள் இருந்து மறைஞ்சுபோச்சு" என்று அறிவு சொல்லும் போதே, "எல்லாருக்கும் பிரியாணி சொல்லியிருந்தேன். இன்னும் வரலையே?" என்று அற்புதம் அம்மாள் வந்தார். "வந்திருச்சும்மா" என்றார் அறிவு. "உனக்கு எப்படிப்பா தெரியும்?" என்று அவர் கேட்க, "சாப்பாடு வந்திருச்சுன்னா எங்களுக்கு கரெக்டா தெரியும். கீழே வந்திருச்சு. மேலே வந்துட்டிருக்கு" என்று மூக்கால் உணர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார் அறிவு.

"எங்களுக்கு மரண தண்டனை உறுதிப் படுத்தப்பட்டது. சிறை மாற்றம் செய்கிறார்கள். எங்கள் நான்கு பேரை சேலத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். ஆம்பூர் தாண்டிச் செல்லும்முன் பிரியாணி சாப்பிட வேண்டும் போல இருந்தது. நைசாக பொலிஸ் அதிகாரியிடம் கேட்டோம். அவரும் சம்மதித்தார். ஆம்பூர் பொலிஸ் ஸ்டேஷனுக்குச் சொல்லி நான்கு பிரியாணிப் பொட்டலங்கள் எங்களுக்கு வந்தன. எங்கள் காவலுக்கு வந்த பொலிஸ்காரர்கள் அனைவருக்கும் இட்லிதான் வந்தது. பாவம், பரிதாபமாக சாப்பிட்டார்கள். ஏதோ உயர் அதிகாரிகள் வரப்போகிறார்கள் போல என்று நினைத்து ஏராளமான பீஸ் கள் போட்டு அந்த பிரியாணியைத் தயாரித்திருந்தார்கள். சாப்பிட முடியாமல் சாப்பிட்டோம். அன்றுதான் எங்களது மரணதண்டனை உறுதியானது என்பதையே மறந்து போய் சாப்பிட்டோம்" என்று சொல்லும் போதே... அறிவுக்கு ஒரு தட்டில் பிரியாணி வைத்துத் தரப்பட்டது.

"நான் மீன் பிரியன். ஆனால், 26 வருஷமா மீன் சாப்பிட்டதே இல்லை. சிறையில் சிக்கன்தான். ஓகஸ்ட் 24 ஆம் திகதி வீட்டுக்கு வந்தபிறகுதான் திருப்தியா மீன் சாப்பிட்டேன்"நாளைக்கு சௌரி அண்ணன் வருவார். மீன் வாங்கி வரு வார்" என்று சொல்லும் போதே அறிவு முகத்தில் மகிழ்ச்சி துள்ளியது. கிளம்பிய இளைஞர் ஒருவர் அறிவின் காலில் விழுகிறார். "கறுப்புச் சட்டை போட்டவன் யார் காலிலும் விழக்கூடாது" என்று சொல்லி, கட்டி அணைக்கிறார் அறிவு. "வாங்க... வேலூர் வந்தா வாங்க... அங்க பேசுவோம்" என்று ஜோலார் பேட்டையிலிருந்து பணி மாறுதல் வாங்கிச் செல்லும் பள்ளி ஆசிரியரைப் போல அவர்களை அழைக்கிறார் அறிவு.

வேலூரில்தான் இருப்பது சிறை. தானொரு கைதி என்பதே மறந்துபோகுமளவுக்கு மனமும் குணமும் மாறியிருந்தன. புறப்படும்போது ஓடி வந்து கடலைமிட்டாய் கொடுக்கிறார்கள் பேரறிவாளனின் சகோதரிகள் அன்புமணியும் அருள் மணியும். அறிவும் அதில் ஒன்றை எடுத்துக்கொள்கிறார். அவரது வீட்டின் வரவேற்பு அறை முழுக்கவே புகைப் படங்கள். ஒரு படத்தில் ஐந்து வயது பையனாக கருணா நிதியின் மடியில் பேரறிவாளன் உட்கார்ந்திருக்கிறார். தி.மு.க ஆட்சி கலைக்கப் பட்டபோது, அது அவசர நிலைப் பிரகடன காலம் என்பதால் அவரைச் சந்திக்க பலரும் பயந்தபோது அவரின் சொந்தங்களும், வட்டாரத்தைச் சேர்ந்தவர்களும் கருணாநிதியை வந்து சந்தித்துள் ளார்கள். சிறுவனான பேரறிவாளனும் அப்போது 'தடையை மீறி' வந்துள்ளார்.

"பேரறிஞர் அண்ணாவுடன் எங்க அப்பாவும் சிறையில் இருந்தாங்க. அண்ணாவுக்கு ஊறுகாய் போத்தலை உள்ளே கொண்டு போய்க் கொடுக்க அவரின் மனைவி ராணி அண்ணா முயற்சி செய்தாங்க. ஆனால், கொடுக்க முடியலை. எங்க அம்மாதான் உள்ளே போய்க் கொடுத்தாங்க" என்று அற்புதம் அம்மாள் சொல்லும்போது, "சிறைக்கும் எங்கள் குடும்பத்துக்கும் மூன்று தலை முறைகளாக பந்தம் இருக்கிறது" என்கிறார் அறிவு. போராளிகள் படங்களுடன் செங்கொடியின் படமும் இருக்கிறது. வீட்டின் பெயரும் செங்கொடி இல்லம். அறிவை மீட்பதற்காக உயிரைத் தந்தவர் அவர். அந்த வீடு, பேறு பெற்றுவிட்டது.

விடை பெறும்போது பேரறிவாளனின் கையில் ரூமியின் 'தாகங்கொண்ட மீனொன்று' புத்தகத்தைத் தந்தோம். அவர், விடுதலை தாகங்கொண்ட பெரும் பறவை அல்லவா?

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.நா.வில் ஒலித்த தமிழ்க் குரல்கள்!

சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவாவில் நடந்துவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 36ஆவது கூட்டத்தில் தமிழர்களின் குரல் சற்று ஓங்கியே ஒலித்தது.

ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கு நீதிகேட்டு நடந்துவரும் தொடர் போராட்டங்களையடுத்து, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. மகிந்த ராஜபக்ஷ அரசும் அடுத்துவந்த மைத்திரிபால சிறிசேன அரசும் மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நாவுக்கு அளித்த உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்டன.

2015 ஒக்டோபரில் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசும் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தது. அதன்படி, இறுதிப்போரில் மனித உரிமை மீறல்கள் குறித்து, கொமன்வெல்த் மற்றும் வெளிநாட்டு நீதிபதி களை உள் ளடக்கிய விசாரணை நடத்த் வேண்டும். பேரவையின் உறுப்பு நாடுகள் இதைக் கண்காணிக்க வேண்டும். ஆனால், அப்படியொரு விசாரணைக்கான நடவடிக்கையை இலங்கை அரசு தொடங் குவதற்கான எந்த அறிகுறியும் இல்லை.



கடந்த மார்ச் கூட்டத் தொடரில், தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான அவகாசத்தை, 2019 வரை நீட்டித்து வாங்கிக்கொண்டது, இலங்கை அரசு.

இரண்டு மாதங்களுக்கு முன்பு இலங்கை நிலவரத்தை நேரடியாக ஆய்வு செய்த ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரான பென் எமர்சன், "மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் இலங்கை அரசாங்கம் கூடுதலாக அவகாசம் பெற்று நான்கு மாதங்களாகியும், நடவடிக்கை எடுப்பதில் இம்மியளவு கூட நகரவில்லை" எனக் குற்றம்சாட்டினார். இந்த நிலையில், செப்டெம்பர் 11 ஆம் திகதி நடப்புக் கூட்டத்தொடரைத் தொடங்கி வைத்த மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் செயிட்ராட் அல் ஹுசைன், 'காணாமல் போனவர்கள் தொடர்பான பணியகம் அமைப்பதை விரைவுபடுத்த வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

> "மகிந்த ராஜபக்ஷ அரசும் அடுத்து வந்த மைத்திரி பால சிறிசேன அரசும் மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நாவுக்கு அளித்த உறுதி மொழிகளைக் காற்றில் பறக்க விட்டன"

அத்துடன், "பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை தரும் நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் குறிப்பாக, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் நிலங்களைத் திருப்பி ஒப்படைக்க வேண் டும்,பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பதியப்பட்டு நீண்டகாலமாக இழுத்தடிக்கப்படும் வழக்குகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும், அந்தச் சட்டத்தையே கூட மாற்றி, உலக அளவி லான மனித உரிமைத் தரம் கொண் டதாக அமைக்க வேண்டும். உலக அளவிலான நீதித்துறையின் தலையீடு இன்னும் தேவைப்படுவதையே நடப்பு நிலவரம் காட்டுகிறது" எனச் சொன்னார் அல் ஹுசைன்.



இறுதிப்போர் முடிந்து எட்டு ஆண்டுகளாகியும், காணாமல் போன உறவினர்கள் தொடர்பாக எந்தத் தகவலும் தெரியாமல் பல்லாயிரக்கணக் கான ஈழத்தமிழர்கள் துயரத்தில் உள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டுத்தரக் கோரி ஏழு மாதங்களாக கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பு முதியவர்களும் பெண்களும் போரா ட்டம் நடத்தி வருகின்றனர். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதுபற்றியும் அல்ஹுசைன் தன் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர்வைகோ, ஜெனீவா மனித உரிமைப் பேரவையின் கூட்டங்களில் பேசினார். "ஈழத் தமிழர்களின் தாயகத்திலும் உலகெங்குமுள்ள புலம்பெ யர் வாழ் ஈழத்தமிழர்களிடத்திலும், சுதந்திரமான இறையாண்மையுள்ள ஈழ தேசத்துக்குப் பொது வாக்கெடுப்பு நடத்த முன்வாருங்கள். அதற்கு முன்பு, இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் சிங்கள இராணுவம் முற்றாக வெளியேற்ற ப்பட வேண்டும். சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும். தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். இந்தப் பொது வாக்கெடுப்பை ஐ.நா. மன்றமே நடத்த வேண்டும்" என்று செப்டெம்பர் 18ஆம் திகதியன்று வைகோ பேசினார்.

'ஆக்கிரமிப்புக்குள்ளான தேசங்கள்' எனும் கருத்தரங்கில் குர்திஸ்தான், மேற்கு சகாரா, பாலஸ்தீனம், தெற்கு ஏமன், பலுசிஸ்தான் ஆகியவற்றைச் சேர்ந்த சுதந்திரக் கோரிக்கை அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து தமிழீழம் குறித்து வைகோ உரையாற்றினார். தமிழக சட்டமன்றத்திலும் அமெரிக்க நாட்டின் மசாசுசெட்ஸ் மாகாண சட்டமன்றத்திலும் தமிழீழம் தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானங்களையும் விபரித்த வைகோ, "ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியா குட்ட ரெஸ், இலங்கைக்குச் சென்று நேரில் பார்வையிட வேண்டும்" என்றார்.

திரைப்பட இயக்குநர் வ.கௌதமனும் பல அமர்வுகளில் பேசினார். 'ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையும் - பொதுவாக்கெடுப்பும்' எனும் தலைப்பிலான அவருடைய உரை முக்கியமானது.

சர்வதேச மட்டத்தில் செய்யப்பட வேண்டிய இந்தச் செயற்பாடுகள் பற்றி நோர்வே ஈழத்தமிழர் அவையின் முன்னாள் உறுப்பினரும், சீனப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளருமான விஜய் அசோகனிடம் பேசினோம்.



"தமிழ்த் தேசிய முன்னணி தலைவர் கஜேந்திரகு மார் பொன்னம்பலம் 2014 இல் மனித உரிமைப் பேரவை யில் பேசிய போது, 'ஈழத்தில் நடந்து வரும் இனஅழிப்பு தடுக்கப்பட ஐ.நா. மேற்பார்வையில் இடைக்கால நிர்வாகம் தமிழர்கள் நிலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்' என்றார். இந்த முறை, பொதுவாக்கெடு ப்பின் தேவை குறித்து வைகோ பேசியு ள்ளார். இவை, 2012ஆம் ஆண்டி லிருந்து நடக்கும் விவாதங்களில் முற்றிலும் மாறுபட்டவை மற்றும் முக்கியத்துவம் வாய்ந்தவை. தீர்மானம் எதையும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை என்பதை அனைத்துத் தரப்பும் முறையாகப் பதிவு செய்துள்ளன. ஆனால், தமிழர்கள் தரப்பில் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்திற்கு முன்னும் பின்னும் செய்ய வேண்டிய அரசியல் வேலைகள் நிறைய இருக்கின்றன என்பதைக் கவனத் தில்கொண்டு ஐரோப்பிய வாழ் தமிழர்கள் தொடர்ச்சி யாக இயங்கவேண்டும்" என்கிறார் விஜய் அசோகன்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினங்களின் சொர்க்காபுரி

## அமேசான் மழைக்காடுகள்

அண்டெஸ் மலைத் தொடரின் கிழக்கில் இருந்து அமேசான் மழைக் காடு தொடங்குகிறது. இதுவே உலகின் மிகப்பெரிய மழைக் காடும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும்.

இது உலகில் வெளியிடப்படும் காபனீரொட்சைட்டு வளியை பெருமளவில் உட்கொள்ளும் திறன் வாய்ந்தது. இந்த மழைக் காடுகளைக் காப்பது இந்நாட்களில் முக்கிய விடயமாக இருக்கிறது.

இந்த காடுகள் ஆபத்தானவை. இந்த காடுகளுக்குள் சென்று விட்டு இலகுவில் மீண்டு வர முடியாது. இதற்கு காரணம், அங்கு வாழும் விலங்குகளும், இயற்கை அமைப்புகளும், தண்ணீரின் ஓட்டமும், இருட்டான சூழ்நிலையும் தான்.

அமேசான் காடுகளை உருவாக்கிய பெருமை அமேசான் நதிக்கே போய்ச் சேரும். அமேசான் காடுகளின் ஜீவாதாரமாய் விளங்கும் அமேசான் நதி உலகின் மிகப் பெரிய நதியாகும்.

உலகின் மூன்றில் ஒரு பங்கு விலங்கினங்கள் இக்காடுகளில் தான் வசிக்கின்றன. எண்ணற்ற செடி கொடிகளையும், மூலிகைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள அதிசய உலகம், அமேசான் மழைக் காடுகள்.

இன்றும், அமேசான் காடுகளிலும் நதிகளிலும் மனிதர்களால் கண்டுபிடிக்கப்படாத மர்மங்கள் நிறையவே உண்டு.

இறுக்கமும் நெருக்கமுமாய் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மரங்கள் பின்னிப் பிணைந்த அடர்ந்த காடு. சூரிய வெளிச்சமே பார்க்காத தரை, வருடமெல்லாம் கொட்டும் மழை.

அதில் வசிக்கும் எண்ணற்ற அபூர்வமான விலங்குகள், பறவைகள், இவற்றோடு இதுவரை வெளி உலகத்தையே பார்த்திராத சில ஆயிரம் பழங்குடியினர்.

ஆச்சரியமும், அமானுஷ்யமும் சூழ்ந்த இந்த வாழ்க்கைச் சூழலை கற்பனை செய்தாலே நமக்கு நடுக்கம் கொள்ளும்.

அமேசான் நதி மேற்கில் இருந்து கிழக்கு திசையில் பாயும் ஆறாகும். இதற்கு 17 பெரிய ஆறுகளும், ஆயிரத் துக்கும் மேற்பட்ட சிறிய கிளை ஆறுகளும் உள்ளன.

எனவே, அமேசான் ஆற்றினை "மிகப்பெரிய வல்லரசு ஆறு" என்று கூட வர்ணிக்கலாம். வரலாற்று படி, அமேசான் காடு, மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவானது.

அமேசான் மழைக்காடு,



மீன், பறவைகள், ஊர்வன மற்றும் நிலநீர் வாழும் உயிரினங்களை, உள்ளடக்கிய பல்வேறு மர்மமான மற்றும் சக்தி வாய்ந்த இடமாக கருதப்படுகிறது.

பலவகையான மருத்துவ குணங்கள் கொண்ட தாவரங்கள் இங்கு வளர்வதால் இங்கு பற்பல மருத்துவ ஆராய்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி, மக்கள் தொகைப் பெருக்கம், நெடுஞ்சாலைத் திட்டம் போன்றவற்றால் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

உயிரியல் வளம் மிக்க இம்மழைக்காடுகளில், 25 இலட்சம் வகையான பூச்சியினங்களுக்கும், ஆயிரக்கணக்கான தாவர வகைகளுக்கும், ஏறத்தாழ இரண்டாயிரம் பறவைகள், பாலூட்டிகள் ஆகியவற்றிற்கும் இருப்பிடமாக விளங்குகிறது.

அமேசான் காடுகள் பெரும்பாலும் பிரேசில் நாட்டில் அமைந்துள்ளதால், அந்நாடு உலகிலே ரஷ்யாவிற்கு அடுத்த இரண்டாவது பெரிய காடு வளத்தை (பரப்பளவில் 4,776, 980 ச.கி.மீ.) கொண்ட தாக உள்ளது.

உலகின் உயிரினங்களில் மூன்றில் ஒரு பங்கு அமேசான் காடுகளில் வசிக்கின்றன. அமேசான் ஆற்றுப் படுக்கையும் மழைக்காடுகளும் 5.4 மில்லியன் சதுர கி.மீற்றருக்கும்மேலானதாகும்.

அமேசான் மழைக் காடுகள், உலகின் மிகப்பெரிய உயிரியல்ஆய்வு பிரதேசங்களாகவும் விளங்குகிறன. இங்கு ஓடும் அமேசான் பிரதான ஆறு 4,080 மைல் நீண்டு உள்ளது. அதன் வடிகால் 27,22,000 சதுர மைல்களை உள்ளடக்குகிறது.

உலகின் நதி நீரின் பதினாறு சதவீதம், அமேசான் டெல்டா வழியாக பாய்கிறது. 28 பில்லியன் கலன்கள் நீர் ஒவ்வொரு நிமிடத்துக்கும் அட்லாண்டிக் சமுத்திரத்துக்குள் பாய்கிறது.

இந்த ஆற்று தண்ணீர், கடலுக்குள் 100இற்கும் மேற்பட்ட மைல்வரைக்கும்கலந்து, கடலின் உப்புத்தன்மை செறிவை குறைக்கின்றது.

15 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, அமேசான் நதி பசுபிக் பெருங்கடலில் மேற்கு நோக்கி பாய்ந்துள்ளது.

தென் அமெரிக்க தகடு மற்றொரு டெக்டானிக் தகட்டின் மீது நகர்த்தப்பட்ட இயற்கை மாற்றத்தால், ஆண்டிஸ் மலைகள் மெதுவாக உயர்ந்தன.

அமேசான் சூழல் கடுமையாக மாற்றப்பட்டது. பிறகு, அமேசான் நதிக்கு, அட்லாண்டிக் நோக்கி கிழக்கு வழி திறக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

இந்த மழைக்காடுகளில், 500 பாலூட்டிகளும், 175 பல்லி இனங்களும் மற்றும் 300இற்கும் மேற்பட்ட ஊர்வன இனங்கள் மற்றும் உலகின் பறவைகளின் மூன்றில் ஒரு பங்கு வாழ்கின்றன.

அமேசான் காடுகளில், நூறு சதவீத ஒட்சிசன் கிடைக்கிறது. இங்கு வாழும் உயிரினங்களின் வரலாற்று காலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர்.

தொன்மைக்காலம், இடைக் காலம், தற்காலம். சுமார் ஐம்பது கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி வடக்கே "லாரேசியா" தெற்கே "கோண்டுவானா" என இரண்டு நிலப் பரப்புகளாக இருந்தது.

அதன் பின் 20-25 கோடி ஆண்டுகள் கடந்து, "பஞ்சியா" என்ற ஒற்றைத் திட்டாக பூமி மாறிவிட்டது. புவித்தட்டு நகர்வால் "பஞ்சியா"வும் உடைந்து, இப்போதுள்ள கண்டங்கள் உருவாகின என்பதும் புவியியல் ஆய்வாளர்களின் வெளிப்பாடாக உள்ளது.

"பஞ்சியா" கண்டமாக இருந்த காலத்தில், கொங்கோவின் ஆரம்ப கால ஆற்றுப் பகுதியில், அமேசான் ஆறு மேற்கு நோக்கி திசை திரும்பியது.

இதே கால கட்டத்தில் தென் அமெரிக்காவிலிருந்து ஆபிரிக்கா துண்டிக்கப்பட்டு எதிர்த்திசையில் நகர்ந்தது.

இந்த இடைவெளியின் நடுவே உருவானதுதான் அட்லாண்டிக் பெருங்கடல். அதுவரை அமேசான் ஆறு மேற்கு நோக்கி பசுபிக் பெருங்கடலில் கலந்து கொண்டிருந்தது.

அந்த காலத்தில்தான் உலகில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. தென் அமெரிக்க பூமித்தட்டும் நாஸ்கா தட்டும் ஒன்றுடன் ஒன்று நெருங்கியதன்விளைவாக உருவானது தான் ஆண்டிஸ் மலைத் தொடர்.

ஆண்டிஸ் மலையின் எழுச்சியும், உலகில் நிகழ்ந்த நிலவியல் மாற்றங்களும் அமேசான் ஆற்றையும், போக்கையும் மாற்றின. அமேசான் 6 ஆயிரத்திற்கும்மிகுதியான துணையாறுகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் 17 ஆறுகள் ஆயிரம் கிலோ மீற்றருக்கும் அதிகமான நீளம் கொண்டன.

ஆண்டிஸ் மலை உயர்ந்ததால் பிரேசில் கயானாவில் இருந்த பாறை திட்டுகள் அமேசானின் ஓட்டத்தை தடுத்தன. இதே கால கட்டத்தில்தான் அமேசான் ஆற்றின் கரையின் இருபுறமும் நீரோட்டம் அதிகரித்து, அமேசான் மழைக் காடுகள் உருவாகின.

பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவாகிய அமேசான் நதி இன்றும் தனி சிறப்புடன் தனது ஓட்டத்தை தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

# ஈழத்தில் நடந்த இனவெறி யுத்தத்தில் இந்தியாவுக்கும் பங்கு

## சிறைவாசம் மீண்ட திருமுருகன்காந்தி

நான்கு மாதங்களாக குண்டர் சட்டத்தின்கீழ் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 'மே பதினேழு' இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் ஈழத்தமிழர் ஆதரவாளருமான திருமுருகன் காந்தி உட்பட நான்கு பேர், உயர் நீதிமன்றத்தின் உத்தரவால் செப்டெம்பர் 20 ஆம் திகதி விடுதலைசெய்யப்பட்டனர். தமிழர் விடியல் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் டைசன், இளமாறன், அருண்குமார் ஆகியோருடன் வெளியே வந்தவருக்கு, சிறை வாசலில் நூற்றுக் கணக்கானவர்கள் திரண்டு வரவேற்பு அளித்தனர். பெரியார் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, அரங்கம் ஒன்றில் ஆதரவாளர்களிடம் உரையாற்றிக்கொண்டிருந்தார் திருமுருகன்.

**"சிறைவாசம் எப்படி இருந்தது?"**

"ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. அதிக நேரம் படிப்பதற்கான வாய்ப்பாக அமைந்தது. அரசியல்ரீதியாகச் சிந்திக்கவும் நேரம் கிடைத்தது. சரியான நேரத்தில் கிடைத்த ஓய்வாகவும் இந்தச் சிறைவாசம் இருந்தது. எங்களை நாங்களே உறுதிப்படுத்திக்கொள்ளவும் உதவியாக இருந்தது. குண்டர் சட்டத்தை எதிர்பார்க்கவில்லை என்று சொல்லமுடியாவிட்டாலும், தேசியப் பாதுகாப்புச் சட்டம், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ஆகிய சட்டங்களை எங்கள்மீது ஏவுவார்கள் என எதிர்பார்த்தோம். ஈழத்தில் தமிழர்களுக்கு எதிராக நடந்த இனவெறி யுத்தத்தில் இந்திய அரசின் பங்கும் இருக்கிறது. தமிழீழத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் இனப்படுகொலை நடத்துவதற்கான சதி அரங்கேறிக் கொண்டிருக்கிறது என்பதைத் தொடர்ந்து கூறி வருகிறோம். இதுதான் அவர்களுக்குப் பிரச்சினையாக இருக்கிறது."

**"மெரினாவில் மெழுகுவர்த்தி அஞ்சலி செலுத்த, கடந்த ஏழு ஆண்டுகளில் இந்த ஆண்டு மட்டும்தானே தடை, பிரச்சினைகள்?"**

"இல்லை. அப்படி ஒரு தகவல் பரவியிருக்கிறது. முந்தைய ஆண்டுகளிலும் மெரினா அஞ்சலிக்குத் தமிழக அரசு அனுமதி தந்ததே இல்லை. ஒருவேளை ஈழத்தமிழர்களுக்கு அஞ்சலி செய்வதைத் தடுத்தால் தங்களின் அரசியல் வெற்றிக்குப் பாதகமாக இருக்குமென அ.தி.மு.க அரசு நினைத்திருக்கலாம். ஒவ்வோர் ஆண்டும் மே 17-19 வாக்கில் அஞ்சலிக்கான வேலைகளில் இருக்கும்போது, எங்களின் தொலைபேசி இணைப்பைத் துண்டிப்பது போன்ற அத்துமீறல்கள் மூலமாக மறைமுக அழுத்தம் தந்துகொண்டுதான் இருந்தார்கள். அதையும் தாண்டித் தொடர்ந்து நாங்கள் தமிழர் கடலில்- மெரினா கடற்கரையில் ஈழத்தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தினோம். அடுத்த ஆண்டும் அஞ்சலி செலுத்துவோம்."

**"குறிப்பாக, குண்டர் சட்டம் உங்கள் மீது ஏன் ஏவப்பட்டது என நினைக்கிறீர்கள்?"**

"தமிழர்களுக்கும் தமிழுக்கும் எதிராக இந்திய அரசால் தொடர் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. காவிரி நீர் உரிமைப் போராட்டத்தில் பெங்களூரில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட கலவரத் தாக்குதல், ஆந்திராவில் 20 தமிழகத் தொழிலாளர்கள் படுகொலை, தமிழக மீனவர்களின் பிரச்சினை, ஆவணப்படுகொலை போன்றவற்றை ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு எடுத்துச்சென்றோம். தொடர்ச்சியாக இதற்கான போராட்டங்களை நடத்திவருகிறோம். இதற்குப் பதில்சொல்வதற்கோ, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கோ, மத்திய - மாநில அரசுகளுக்குத் திராணி இல்லை. இரண்டு அரசுகளும் அரசியல்ரீதியாக கேள்விகளை எதிர்கொள்ளாமல், எங்களின் போராட்டத்தைச் சமூகவிரோதச் செயலாகச் சித்திரிக்கப் பார்க்கின்றன. ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின்போதும் இதே முறையைத்தான் கையாண்டார்கள். அதன் ஒரு பகுதிதான் குண்டர் சட்ட வழக்கு. இப்படிச் செய்தால், அரசியல் கருத்துகளை மக்களிடம் எடுத்துச் செல்லவிடாமல் தடுக்கலாம் என நினைக்கிறார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயமறியான், பதற்றமடையான்... எவர்கிரீன் என்டெர்டெய்னர் மக்கல்லம்!




"பேர கேட்டாலே... சும்மா அதிருதுல!" - ரஜினியின் இந்த பன்ச், யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, நியூஸிலாந்தின் முன்னாள் கப்டனுக்கு நச்செனப் பொருந்தும். ஏன்?

பெப்ரவரி 28, 2010. இடம் கிறிஸ்ட்சர்ச். ஷான் டெய்ட் 155 கி.மீ வேகத்தில் ஸ்டம்ப்பைப் பதம் பார்த்து வீசியதை, படுத்துக்கொண்டு விக்கெட்டின் பின்புறம் பறக்க விட்டார். அது ரொக்கெட் மாதிரி 90 டிகிரியில் பயணித்து சிக்ஸராக மாறியது. எவ்வளவு வேகத்தில் பந்து தன்னிடம் வந்ததோ, அதே வேகத்தில் பௌண்டரியைவிட்டு வெளியே அனுப்பினார். ஒருமுறை அல்ல, இருமுறை. இதெல்லாம் அவர் ஏற்கனவே செய்ததுதான். ஆனால், இவ்வளவு வேகமாகப் போட்ட பந்தை அதற்கு முன்னரும் பின்னரும் வேறு எவரும் அடிக்கவில்லை. வேகப்பந்து வீச்சாளர்களின் பந்தை, சிறுத்தைப்போல இரண்டு எட்டு எடுத்துவைத்து சுழற்றி எக்ஸ்ட்ரா கவர் திசையில் இவர் அடித்த அடி ஒவ்வொன்றும் சரவெடி.

கிரிக்கெட்டை தீவிரமாக நேசிக்கும் அனைத்து நாட்டு ரசிகர்களுக்கும், தங்களது அணியைவிடுத்து வேறோர் அணி வெற்றிபெற்றால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய அணியாக இருப்பது நியூஸிலாந்து மட்டுமே. அது, ஏன்?

மற்ற அணிகளைப்போல வருடம் முழுவதும் விளையாடிக்கொண்டிருக்க, அந்த நாட்டின் சீதோஷ்ண நிலை ஒத்துழைப்பதில்லை. டிசெம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை மட்டுமே சம்மர். அதுவும் பேருக்குத்தான் வெயில் காலம். ஏறிப்போனால், 20 டிகிரி வெப்பம் இருக்கும். ரக்பி, பேஸ்பால், ஹொக்கிவிளையாட்டுகள் விளையாடப்படும் மைதானத்தில்தான் கிரிக்கெட்டும் ஆடுவார்கள்.

அதனால்தான் மற்ற தேசங்களில் இருக்கும் கிரிக்கெட் மைதானங்கள்போல் அல்லாமல், முக்கோணம், செவ்வகம் என கிரவுண்ட் டிசைனாகவும், சிறிய பௌண்டரிகள் எனப் பார்க்கவே வித்தியாசமாகவும் இருக்கும். ஆனாலும், அங்குள்ள ஒவ்வொரு மைதானமும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் அழகாகவும் தோற்றமளிக்கும். பெரிய கட்டமைப்பு வசதிகள் இல்லாதபோதும், உலகத் தரமான வீரர்களை விதைத்தபடியே, கிரிக்கெட்டைக் கொண்டாடிவரும் தேசம், நியூஸிலாந்து.

ஜான் ரைட், ஜெஃப் க்ரோ, மார்ட்டின் க்ரோ, லீ ஜெர்மான், ஸ்டீபன் பிளெமிங், டேனியல் வெட்டோரி வரிசையில், நியூஸிலாந்தின் எழுதப்படாத அகராதியின்படி, கண்ணியம், மரியாதை, ஒழுக்கம், நேர்மை என "கிரிக்கெட் ஒரு ஜென்டில்மேன்களின் ஆட்டம்" என்றால் அதில் நாங்கள்தான் தலைசிறந்த அணி' என காலம் காலமாக நிரூபித்து வரும் வீரர்களை வழிநடத்திய மாபெரும் வீரன், மெக்கல்லம்.

50 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகைகொண்ட நாட்டிலிருந்து (அதாவது, உலக மக்கள் தொகையில் வெறும் 0.06 சதவிகிதம் மட்டுமே) உலகத்தரமான கிரிக்கெட் வீரர்கள் உருவாகிக்கொண்டே இருக்கிறார்கள். எப்படி இது சாத்தியம் எனில், நீண்ட தூரம் பயணிக்கத்தேவையில்லை. இந்தியாவின் முதல் அயல்நாட்டுப் பயிற்சியாளராக ஜான் ரைட் செயற்பட்ட தருணம், இந்திய அணியின் பொற்காலம். சச்சின், டிராவிட், கும்ப்ளே, லட்சுமணன், கங்குலி, ஸ்ரீநாத் எனத் தனித்தனி கில்லிகளாக வலம்வந்தாலும், அவர்களின் ஆற்றலை ஒன்றிணைத்து இளைஞர்களான ஜாகீர் கான், முகமது கைஃப், யுவராஜ், நெஹ்ரா என வியூகம் அமைத்து அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா சுற்றுப் பயணங்களில் சவால்விடும் அணியாக இந்தியாவை உயர்த்தி, 2003ஆம் ஆண்டு உலகக்கோப்பையில் இறுதிவரை வழிநடத்திச் சென்ற வித்தைக்காரர்.

அவர்களது வழியில் கற்ற பாடங்களைக்கொண்டு, மிகவும் அமைதியாக அதே சமயத்தில் காரியத்தில் மிகவும் அழுத்தமாகச் செயற்படக்கூடிய உலகின் தலை சிறந்த கப்டன்களில் ஒருவரான ஸ்டீபன் பிளெமிங், ஐ.பி.எல் போட்டிகளில் பத்து வருடங்களாக டோனியுடன் பயணித்துவருகிறார். பிளெமிங் தலைமையில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக விக்கெட் கீப்பராக களம்கண்ட மெக்கல்லம், படிப்படியாகத் தன்னை மெருகேற்றிக்கொண்டே வந்தார்.

வேகப்பந்து, ஸ்விங் ஆகியவற்றுக்கு மட்டுமே துணைபோகும் வகையில் இருக்கும் ஆடுகளத்தில் பயிற்சி பெற்றாலும், மற்ற அணிகளைவிட மிகச் சொற்பமான ஆட்டங்களை ஆடினாலும், சுற்றுப் பயணங்களில் நியூஸிலாந்து சோடை போவதில்லை. வெயில் கொளுத்தக்கூடிய இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மைதானங்களில் பன்முகத்தன்மை கொண்ட அணியைக்கொண்டு வெற்றிகளைக் குவித்தே வருகிறார்கள்.

டெஸ்ட் போட்டிகளில் ஏழாவது வீரராகக் களம் காண்பது மிகவும் கடினமான விடயம். 80 ஓவர்கள் கழித்து புதிய பந்துகளைக்கொண்டு வீசும் வேளையில், ஏழாவது வீரராக வருவது என்பது கிட்டத்தட்ட முதல்நிலை வீரராக ஆடுவதைப் போலத்தான். தடுப்பாட்ட முறைகளில் பெரிதும் நம்பிக்கையில்லாமல் அதிரடியாக கிரீஸிலிருந்து வெளியே வந்து பந்து ஸ்விங் ஆகும் முன்னரே நொறுக்க ஆரம்பித்தார். பௌன்ஸர் பந்துகளை அவர் சுழற்றி அடிக்க முற்பட்டபோதெல்லாம் பாதி நேரங்களில் கமராவுக்கே தலை சுற்றிவிடும்.

ஒருநாள் போட்டிகள் மற்றும் இருபது ஓவர் ஆட்டங்களில் தொடக்க ஆட்டக்காரராக தன்னை மெருகேற்றிக்கொள்ள இந்த 'பயமறியா டிசைன்' பெரிதும் உதவியதாகத் தெரிவித்தார்.

டெஸ்ட் ஆட்டங்களில் இந்தியாவுக்கு எதிராக நான்கு சதங்களைக் குவித்திருக்கிறார். அதில் இரண்டு இரட்டைச்சதம் ஒரு முச்சதம் என்று, எல்லாமே சரித்திரப் புகழ்பெற்றவை. பொதுவாக அடுத்தடுத்த ஆட்டங்களில் பெரிய இன்னிங்ஸ் ஆடுவது என்பது டெஸ்ட் ஆட்டங்களில் கைகூடாத கலை.

2014ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக ஆக்லாந்தில் 224 ரன்கள் அடித்த கையோடு, அடுத்த போட்டியில் 246 ரன்கள் பின்தங்கிய நிலையில் தொடரை இழந்துவிடக் கூடாது என்ற முனைப்போடு, தன்னுடைய இயல்பான ஆட்டத்தை மூட்டைகட்டி வைத்துவிட்டு, 775 நிமிடம் ஆடி (360 நிமிடம் ஒரு நாள் டெஸ்ட் போட்டியின் நேரம்) 559 பந்துகளை எதிர்கொண்டு 302 ரன்களைக் குவித்து அணியைத் தோல்வியிலிருந்து மீட்டெடுத்தார்.

"சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடி விட்டு சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுகிறேன்" என்று அறிவித்துவிட்டு, உலகக் கோப்பை தோல்விக்குத் திருப்பி அடித்துவிட வேண்டும் என்கிற நோக்கத்தில் காத்துக்கொண்டிருந்தார். கடைசிப் போட்டியில் அணியின் முன்கள வீரர்கள் சீக்கிரம் நடையைக்கட்ட, வெள்ளை உடை அணிந்து டெஸ்ட் தான் ஆடுகிறோம் என்பதை மறந்து, தன்னுடைய இருபது ஓவர் போட்டிகளின் வெறித் தனத்தை உடுத்திக்கொண்டு, 79 பந்துகளில் 145 ரன்கள் விளாசினார். ஆறு சிக்ஸர், 21 பௌண்டரிகள் என ஒரு பௌலரைகூட விட்டுவைக்காமல் அடித்து துவம்சம் செய்தார்.

விவியன் ரிச்சர்ட்ஸ் மற்றும் மிஸ்பா உல் ஹக்கின் வாழ்நாள் சாதனையை தன்னுடைய கடைசி டெஸ்ட் போட்டியில், அதுவும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தன் அணி 32 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தவித்துக்கொண்டிருந்தபோது, 54 பந்துகளில் சதம் அடித்து [illegible] இருந்தாலும் அடித்து நொறுக்குவதில் சிங்கம் என கர்ஜித்துவிட்டே, சர்வதேசப் போட்டிகளிலிருந்து விடைபெற்றார்.

2015ஆம் ஆண்டின் உலகக் கோப்பையை வெல்லக்கூடிய அணிகளில் ஒன்றாகக் கருதப்பட்ட நியூஸிலாந்து அணியை, தன் அதிரடியின் மூலம் ஃபைனல் வரை அழைத்துச்சென்றார். லீக் ஆட்டங்களில் மெக்கல்லம் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுக்கு எதிராக ஆடிய ருத்ரதாண்டவம் எல்லாம் காலத்துக்கும் நிலைத்திருக்கும்.

அரை இறுதியில் பலம் வாய்ந்த தென்னாபிரிக்காவை வென்று, இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் முன்னர், உங்களைவிட வேறு யாருக்கும் ஓர் உலகக்கோப்பையை வெல்வது எவ்வளவு சந்தோஷம் கொடுக்கும் எனத் தெரியாது. முதல்முறையாக இறுதிக்குள் செல்லும் எங்கள் அணிக்கு உங்களின் ஆதரவைத் தாருங்கள் என்று இந்திய ரசிகர்களின் ஆதரவைக் கோரினார்.

தன்னுடைய ஹீரோவான மார்ட்டின் க்ரோ, புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்த முன்னாள் வீரனுக்காக, மிட்சல் ஸ்டார்க் வீசிய முதல் ஓவர் முதல் பந்தையே ஏறி வந்து அடிக்க முற்பட்டான்.




தீயோடு விளையாடி கடைசித் தருணத்தில் அணிக்கு ஏதும் செய்ய முடியாமல் அரங்கு திரும்பியபோது உலகமே சோகமுற்றது.

லீக் ஆட்டத்தில், ஒரு விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வென்றதால் கோப்பையைக் கைப்பற்றுவதில் அதீத முனைப்போடு இருந்தனர் நியூஸிலாந்து அணியினர்.



மேலும், அதுவரையில் இந்தியா மட்டுமே சொந்த மண்ணில் உலகக்கோப்பையை வென்ற ஒரே அணி என்பதாலும், ரசிகர்களும் நிபுணர்களும் நியூஸிலாந்து எப்படியும் வென்றுவிடும் என்றே கணித்திருந்தனர். இறுதி ஆட்டத்துக்கு முன்பாக 44 பௌண்டரிகள், 17 சிக்ஸர்கள் எனத் தெறிக்க விட்ட ஆட்டத்தை மாற்றுவதற்கு மெக்கல்லமுக்கு ஐடியா இல்லை.

அதே சமயத்தில், எதிராளியின் பலம் வாய்ந்த வீரனை ஆரம்பத்திலேயே மழுங்கடித்துவிட்டால், வெற்றி வசமாவது உறுதி எனத் தைரியமாக ஸ்டார்க்கை ஒரு கைபார்க்க நினைத்ததில் சற்றே பிசகிவிட்டார்.

மெக்கல்லம் அவுட் ஆனதும், நியூஸிலாந்து நிலைகுலையத் தொடங்கியது. ஒட்டுமொத்த அணிக்குமே முதல் உலகக்கோப்பை இறுதி ஆட்டம்.

அதுவும் ஒரு இலட்சம் ரசிகர்களின் முன்பு, பதற்றமான ஒரு நிலையில் அடுத்தடுத்து விக்கெட்டுகள் விழ, சுவாரஸ்யமில்லாமல் 1999ஆம் ஆண்டு உலகக்கோப்பை இறுதி ஆட்டத்தைப்போல, அசால்ட்டாக வியர்வை சிந்தாமல் அவுஸ்திரேலியா ஐந்தாவது முறையாக கோப்பையைக் கைப்பற்றியது.

மெக்கல்லம் கொஞ்சம் பொறுமையாக விளையாடியிருக்கலாம் என்றெல்லாம் விமர்சனங்கள் எழத்தான் செய்தன. ஆனால், அவருக்குத் தெரிந்த அதே அதிரடியைக் கொண்டுதான் அணியை இறுதி வரை அழைத்துவந்தார் என்பதை, விமர்சனம் செய்பவர்கள் ஏனோ மறந்துபோனார்கள்.

உலகத்தின் அனைத்து வீரர்களும் ஊர்கூடி தேர் இழுக்கத் தயாரான முதல் ஐ.பி.எல்-லின் முதல் போட்டியிலேயே சதம் அடித்தார். அஜித், விஜய் படங்களுக்கு நிகரான ஓப்பனிங்கை ஐ.பி.எல் பெற, அந்த இன்னிங்ஸ் மிகவும் உதவியது.

அங்கு சூடுபிடித்த அவரின் ஆட்டம், கொச்சி, கொல்கத்தா என மாறி மாறிச் சென்றாலும், 2014ஆம் வருடம் முதல் சென்னைக்காக மேற்கிந்திய தீவுகளின் ஆட்டக்காரர் ஸ்மித்தோடு அவர் போட்ட ஆட்டம் அதகளத்தின் உச்சம்.

முதுகு, கை வலிகளால் விக்கெட் கீப்பிங்கைத் துறந்தாலும், பீல்டிங் செய்வதில் அவருக்கு நிகர் அவரே. ஜடேஜா, ரெய்னா, டு பிளேஸிஸ் உடன் சேர்ந்து மெக்கல்லம் அமைத்த கோட்டைச்சுவரைத் தாண்டி அடிப்பதெல்லாம் ஆகாத காரியமாகிப்போனது.

சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றாலும், இன்றும் இருபது ஓவர் லீக் ஆட்டங்களில் உலகை வலம் வந்துகொண்டிருக்கும், சூப்பர் மேன் மெக்கல்லம். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : நீதிக்கு தலைவணங்கு
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடல் வரிகள் : புலமை பித்தன்
பாடியவர் : கே.ஜே.ஜேசுதாஸ்



இந்த பச்சைக்கிளிக்கொரு செவ்வந்திப்பூவைத்
தொட்டிலில் கட்டிவைத்தேன்
அதில் பட்டுத் துகிலுடன் அன்னச்சிறகினை
மெல்லென இட்டு வைத்தேன்
நான் ஆராரோ என்று தாலாட்ட
இன்னும் யாராரோ வந்து பாராட்ட
(இந்த பச்சைக்கிளிக்கொரு....)

எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
பின் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பதிலே
நான் ஆராரோ என்று தாலாட்ட
இன்னும் யாராரோ வந்து பாராட்ட
(இந்த பச்சைக்கிளிக்கொரு....)

தூக்க மருந்தினை போன்றவரை பெற்றவர்
போற்றும் புகழுறைகள்
நோய் தீர்க்கும் மருந்தினைப் போன்றவை கற்றவர்
கூறும் அறிவுரைகள்
(இந்த பச்சைக்கிளிக்கொரு....)

ஆறு கரை அடங்கி நடந்திடில்
காடு வளம் பெறலாம்
தினம் நல்ல நெறிக்கண்டு பிள்ளை வளர்ந்திடில்
நாடும் நலம் பெறலாம்
நான் ஆராரோ என்று தாலாட்ட
இன்னும் யாராரோ வந்து பாராட்ட
(இந்த பச்சைக்கிளிக்கொரு....)
பாதை தவறிய கால்கள் விரும்பிய
ஊர் சென்று சேர்வதில்லை
நல்ல பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவள்
பேர் சொல்லி வாழ்வதில்லை
(இந்த பச்சைக்கிளிக்கொரு....)

நான் ஆராரோ என்று தாலாட்ட
இன்னும் யாராரோ வந்து பாராட்ட

# உங்கள் மாதப்பலன் எப்படி?

(கடந்த வார தொடர்ச்சி)

எப்போதும் எதையாவது செய்தபடியே இருப்பார்கள். ஆனால் அமைதியுடன் இருக்க மாட்டார்கள். இவர்கள் கிடைக்காத ஒன்றை நினைத்து ஏங்கித் தவிப்பார்கள்.

எதிரிகளிடம் இருக்கும் குறைகளை மிக எளிதில் இவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள். அவர்களைக் காணும்போது கேலியாகவும் வேடிக்கையாகவுமே பேசி அவர்களை ஒரேயடியாக மட்டம் தட்டி விடுவார்கள்.

இவர்கள் சிறந்த நடிகர்களாகவோ சட்டத்தரணிகளாகவோ பேச்சாளர்களாகவோ ஆசிரியர்களாகவோ வரவாய்ப்புண்டு. எந்தத் தொழிலை ஏற்றுக் கொண்டாலும் வாழ்க்கையின் செயல்களில் இவர்களுக்குத் தலையாய பணி உண்டு.

பணத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் முழு வெற்றியைப் பெறுவார்கள். பங்குச் சந்தைகளிலும் பெரிய கம்பனிகளை உருவாக்குவதிலும் இவர்கள் சிறப்புடன் விளங்குவார்கள். பணத்தைச் சேகரிக்கப் புதிய புதிய தொழில்களைக் கண்டு பிடிப்பார்கள்.

குறைகள்-முரண்பாடுகள் இருந்தும் இவர்களுடைய பேச்சுத் திறனும் மதி கூர்மையும்தான் இவர்களுடைய வாழ்க்கையை எளிதாகச் செய்கிறது. அவர்களுடைய குணங்களைப் பற்றி மற்றவர்கள் எடுத்துச் சொன்னால் "ஊகும்! நான் அப்படியில்லை" என்பார்கள்.

பிறருக்கு உதவும் தன்மை

பொது நிலையங்களுக்கு உதவி செய்வதை விட தனிப்பட்ட மனிதர்களுக்கு உதவி செய்வதுதான் இவர்களுக்கு மிகவும் பிடிக்கும். மற்றவர்கள் விரும்புவதை அவை மதிப்பு மிகுந்தவையாக இருப்பினும் கொடுத்து விடுவார்கள். ஆனால் எதையும் ஒரு வேகத்தில் செய்வார்கள்.

தோற்றத்தில் இவர்களுக்குக் குறுகிய நீண்ட முகம் உண்டு. ஒளிவீசும் கூர்மையான சக்தி வாய்ந்த நெஞ் சங்களை உடையவர்கள் இவர்கள். கண்ணாடிபோல் இவர்கள் பார்வையிலேயே இவர்களது எண்ணங்களை நம்மால் புரிந்து கொண்டுவிட முடியும். உணர்வுகளை மறைக்கத் தெரியாதவர்கள் இவர்கள். கைநீண்டு மெல்லியதாக இருக்கும். அவை எப்போதும் எதையாவது செய்து கொண்டேயிருக்கும். எப்போதும் தலைக்குமேல் வேலைகளை ஏற்றுக்கொண்டு தவிப்பார்கள். எண்ணிப்பார்க்க நேரம் இருந்தாலும் எந்த சிக்கலாலும் எளிதில் முடிவு காண மாட்டார்கள். ஆகையால் இவர்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவது கடினம். சில நாட்கள் ஆனதும் இவர்களுடைய மனம் மாறிவிடுவதுதான் அடிப்படைக் காரணம்.

சீரிய கருத்துடன் ஏதாவது ஒரு செயலில் இறங்கினால் தமது அரிய மூளையின் சக்தியால் வெளிப்படுத்துவார்கள். துன்பம், சலிப்பு, தேவையில்லாத மன நோய்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு நரம்புத் தளர்ச்சியை விலைக்கு வாங்குவார்கள். மூளை அயற்சியும் சிலருக்கு ஏற்படுவது உண்டு.

பெரிய குடும்பங்களில் பிறந்தவர்கள் சிலர் பணத்திற்காக எதையும் செய்வார்கள். சூதாட்டங்களிலும் முறையற்ற தொழில்களிலும் பெரும்பணம் தேட குறுக்கு வழியில் இறங்கி விடுவதுண்டு.

பொதுவாக அனைவருமே நிறைந்த அளவில் நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். அந்த நேரத்தில் தமது மனத்தில் நினைத்திருப்பவர்களிடம் அன்புடனும் பரந்த நோக்கத்துடனும் நடந்து கொள்வார்கள். ஆனால் அவர்கள் மறைந்ததுமே அவர்கள் மனத்திலிருந்தும் தமது நண்பர்கள் மறைந்து விடுவார்கள். தாம் சொன்னவைகளையும் மனதில் நிற்பவர்களையும் அடியோடு மறந்தே விடுவார்கள்.

எப்போதும் அளவுக்கு மிஞ்சி விழிப்பதும் அமைதியின்றியும் இருப்பார்கள். பணமுள்ளவர்களாகவும் பயணம் செய்ய வாய்ப்புள்ளவர்களாகவும் இருந்தால் அடிக்கடி பயணம் செய்து கொண்டிருப்பார்கள். விரைந்து சொல்வதும் விரைந்து செயல்களைச் செய்வதும் இவர்களுக்கு மிகப் பிடிக்கும். விமானங்கள், விரை ந்து செல்லும் புகைவண்டிகள், கார்கள், தொலைவைக் குறைக்கும் சாதனங்கள் அனைத்தும் இவர்களுக்கு மிகப் பிடிக்கும்.

## மே 21 - ஜூன் 20 ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

வாழ்க்கையில் இவர்களுக்குப் பெரிய ஏற்றங்களும் தாழ்வுகளும் உண்டு. ஆனால் அவற்றினால் இவர்கள் மாறியவர்களாகவே தோற்றமளிக்க மாட்டார்கள்.

உடல் நிலை

எந்த நோய் வந்தாலும் இவர்களுடைய நரம்புகளைத் தான் முதலில் பாதிக்கும். இளம் வயதில் நாக்கு சம்பந்தப்பட்ட நோய்கள் வரும். ஆனால் வளர்ந்த பிறகு இந்த நோய்கள் போய் விடும். நிமோனியா, நரம்பு நோய்கள் வர வாய்ப்புண்டு.

வண்ணங்கள்

இவர்களுக்குப் பிடித்த வண்ணங்கள் பளபளக்கும் தூய வெள்ளைநிறம், வெள்ளி நிறம் மற்றும் பளபளக்கும் வண்ணங்கள் எதுவும் இவர்களுக்குப் பிடிக்கும்.

இந்த மாதத்தில் பிறந்த சிலர்

தாமஸ் ஹார் டி (பிரபல எழுத்தாளர்), ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி, சர் அந்தோணி இடன், லார்ட் மவுண்ட் பேட்டன், கலைஞர் கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன். (தொடரும்)

# கலைப்பணி செய்யும் கலைமுகம் இதழ்

ஒரு சமூகத்தின் பிரதிபலிப்பாக திகழ்வது ஊடகங்கள் என்பதை யாரும் மறுத்து விட முடியாது.

ஊடகங்கள் எப் போதும் தனித்துவமாகவும் நடுநிலையாகவும் செயற்பட வேண்டும். அப்போதுதான் சமூகப் பிரதிபலிப்பை சமதளத்தில் நின்று கொண்டு உலகிற்கு எடுத்தியம்ப முடியும்.

யாழ். மாவட்டத்தை மையப்படுத்தி பல தினசரிப்பத்திரிகைகள், வாராந்த இதழ்கள், சஞ்சிகைகள் என வந்து சென்றாலும் அது சமூக ஓட்டத்தை எதிர்த்து நின்று நிலைப்பதில்லை.

அதற்கு மக்களின் வாசிப்புத்திறன் குறைவடைதல் ஒரு காரணமாக இருந்தாலும் மக்கள் விரும்பியது கிடைக்காததும் ஒரு காரணமாய் கொள்ளலாம். அவ்வாறு மக்கள் விரும்பியதை தன்னகத்தே கொண்டு இன்று 63ஆவது இதழாக வெளி வந்திருக்கிறது. கலைமுகம் கலை இலக்கிய சஞ்சிகையில் சமூகத்தை வெளிக்கொணரும் பல ஆக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

"கறுப்பு எருமையில் கடமை பவனி வரும் கனம் ராஜ ராஜ கூற்றுவன் அவர்களுக்கு, ஈழ மண்ணிலிருந்து எழுதப்படும் ஒரு மடல்.




ஐயனே ! நீர் உமது கடமையைக் கண்ணியம் கூடிய கட்டுப்பாட்டுடன் செய்ய வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆயின் ஈழமக்களைப் பொறுத்த மட்டில் நீர் ஓர் ஓரக்காரனாக மாறி விட்டீரோ என்ற வலுவான ஐயம் எம்முள் எழுந்துள்ளது. எமது வரலாற்றுப் பக்கங்களில் ஐம்பதுகள் தொடக்கம் எழுபதுகள் வரை பெரும்பாலும் உமது கறுப்பு எருமையின் உதைகள் தான் எம்மைப்பாதித்தன. பின்கறுப்பு ஜூலையில் கறுப்பு எருமையின் கண்களிலிருந்து எழுந்த தீ எம்மவர் பலரின் உயிர்களைப் பறித்தது மட்டுமல்லாது அவர்களுடைய சொத்துக்கள் அனைத்தையும் சுட்டுச் சாம்பலாக்கியது. ஒருசில ஆண்டுகள் கழித்து நெருப்பின் கொடுமையைப் போல. நீரின் பேரலைகளின் கொடிய தாண்டவம் எமது உறவுகளையும் நண்பர்களையும் எம்மிடமிருந்து அள்ளிச் சென்றதால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தோம். அவ்வளவு காலமும் உமது செயற்பாடுகளால் எழுந்த மரண ஓலங்கள் அனைத்தையும் முள்ளிவாய்க்காலின் பேரழிவு விஞ்சி நின்றது என்பது மிகையன்று...'' என்கின்ற சிந்தனைக்குரிய ஆசிரியர் குறிப்புடன் வெளிவந்துள்ள இதழில் மீப்புனைவியல் நோக்கில் ஈழத்துச் சிறுகதைகள், பாடுபொருள்களை மையப்படுத்திய தள வேறுபாடுகள் பற்றிய தேடல், அழிவுகளி லிருந்து மேலெழும் இருத்த லுக்கான குரல், தனிநாயகம் அடிகளாரும் தமிழர் அபிலாசைகளும் சிந்தாந்தன் கவிதைகள், சிலைகளின் எழுகை கொலையும் கலையும் இஸ்ரேல்-பாலஸ்தீன ஒரு வரலாற்றுப் பார்வை, அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள், மீளெழும் திறன்விருத்தி போன்ற ஆக்கங்களைத் தாங்கி வந்திருக்கின்றது.

ஒரு சமூகத்தின் பண்பாடு, பாரம்பரியம், கலை, இலக்கியம் என்பன நவீன தொழில்நுட்பம் என்பவற்றில் சிக்கி சுக்கு நூறாக சிதறிப் போகின்றது என்பதை அட்டைப் படத்தினூடே அருமையாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

கலைமுகம் பிரதம ஆசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் மற்றும் பொறுப்பாசிரியர் கி.செல்மர் எமில் ஆகியோரின் முயற்சி பாராட்டுதற்குரியது.

நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

# திரைவிமர்சனம்

# ஸ்பைடர்

தெலுங்கு சினிமா நடிகர்கள் எல்லோரும் தற்போது தமிழ் சினிமா மார்க்கெட்டை தான் குறி வைத்துள்ளனர். ஏற்கனவே பிரபாஸ் பாகுபலியாக தமிழ் சினிமா ரசிகர்களை கவர, தற்போது மகேஷ் பாபு முருகதாஸ் உதவியுடன் ஸ்பைடரில் களம் இறங்கியுள்ளார். ஸ்பைடர் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களை மகேஷ் பாபு கவர்ந்தாரா? பார்ப்போம்.

மகேஷ் பாபு பொலிஸிற்கு தெரியாமல் ஊரில் நடக்கும் அசம்பாவிதங்களை தன் மக்களின் போனை ட்ராக் செய்து கண்டுபிடிக்கின்றார். அப்படி எந்த ஒரு விடயமாக இருந்தாலும் அதை தெரிந்துகொண்டு பொலிஸ் வருவதற்குள் காப்பாற்றுகின்றார்.

அந்த சமயத்தில் ஒரு பெண் இரவில் தனியாக பயந்து இருக்கிறாள் என்பதை மகேஷ்பாபு தெரிந்துகொண்டு ஒரு பெண் பொலிஸை அந்த வீட்டிற்கு அனுப்பி வைக்கின்றார்.

அடுத்த நாள் அந்த இரண்டு பேரும் உடல் வெட்டப்பட்டு கொடூரமான நிலையில் இறந்துகிடக்கின்றனர். அதை தொடர்ந்து அந்த கேஸை மகேஷ் பாபு தேடிச் செல்ல மனிதர்களை கொன்று அதில் சந்தோஷம் அடையும் எஸ்.ஜே. சூர்யாவை அவர் கண்டுபிடிக்க, அதன் பின் இருவருக்குமிடையே நடக்கும் ஆடுபுலி ஆட்டம் தான் மீதிக்கதை.

மகேஷ் பாபு தமிழில் அதிகாரபூர்வமாக எண்ட்ரீ கொடுத்துள்ளார். நடை, உடை, பாவனை என செம்ம ஸ்டைலாகவே தோன்றுகின்றார். என்ன தான் நன்றாக தமிழ் பேசினாலும் அவர் வரும் போது மட்டும் கொஞ்சம் டப்பிங் படம் போல் வருவதை தவிர்க்க முடியவில்லை.

படத்தின் ஒட்டுமொத்த பலமே எஸ். ஜே.சூர்யா தான், நெகட்டிவ் கதாபாத்திரம் இனி குவியும். அதிலும் எஸ். ஜே.சூர்யாவிற்கு ப்ளாஷ்பேக்கில் வரும் சிறுவன் மிரட்டியுள்ளான்.

இன்னும் எஸ்.ஜே.சூர்யாவிற்கான காட்சிகளை அதிகப்படுத்தியிருக்கலாம். படம் ஆரம்பித்து அரை மணி நேரம் ஏன் இப்படி, எதற்கு இந்த காட்சிகள் என்று தான் நகர்கின்றது. அதிலும் ராகுல் ப்ரீத் சிங் எல்லாம் எதற்கு வருகின்றார் என்றே தெரியவில்லை, அவரின் கதாபாத்திரம் மிக மோசமான சித்தரிப்பு.

என்ன தான் ஹீரோயின் போஷன்டல் என்றாலும், ஒரு காட்சியில் எஸ். ஜே.சூர்யாவை பிடிக்க பெண்களை வைத்தே மகேஷ்பாபு போடும் திட்டம் தியேட்டரில் விசில் பறப்பது உறுதி. காட்சிக்கு பெண்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கொஞ்சம் ஹீரோயினுக்கும் கொடுங்கள் முருகதாஸ்.

படம் கதைக்குள் செல்லும் வரை தான் தடுமாறுகின்றது. எஸ்.ஜே.சூர்யாவை தேட ஆரம்பிக்கும் போது சூடு பிடித்து கிளைமேக்ஸ் வரை நன்றாக சென்று, கிளைமேக்ஸில் தடுமாறி மெசேஜ் சொல்ல வேண்டும் என்பதற்காக சில கருத்துக்களை சேர்த்தது போன்ற உணர்வு.

ஹரிஸ் இசையில் பாடல்கள் எல்லாம் பொறுமையை சோதிக்கின்றது. பாடலில் விட்டதை பின்னணி இசையில் மிரட்டி விட்டார், சந்தோஷ் சிவனின் ஒளிப்பதிவு படத்தில் கூடுதல் பலம்.

கதைக்களம், எஸ்.ஜே.சூர்யாவிற்கான கதாபாத்திரம் மேலும் அதற்கான விளக்கமும். பின்னணி இசை, ஒளிப்பதிவு.

இரண்டாம் பாதியில் பெண்களை வைத்துக்கொண்டு மகேஷ்பாபு செய்யும் ஸ்பை வேலை. நன்றாக செல்லும் படத்தில் தேவையில்லாமல் வரும் பாடல்கள். CG படத்திற்கு செட் ஆகவே இல்லை.

மொத்தத்தில் மகேஷ் பாபுவிற்கு தமிழில் ஸ்பைடர் நல்ல எண்ட்ரீ என்றாலும், முருகதாஸிற்கான களமாக இந்த ஸ்பைடர் இல்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி நீக்கம் எழுப்பும் கேள்விகள்



அ.தி.மு.கவைச் சேர்ந்த 18 சட்ட மன்ற உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்திருப்பதன் மூலம், தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறார் சபாநாயகர் தன பால். தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 19 பேர், தமிழகப் பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவைச் சந்தித்து மனு கொடுத்ததைத் தொடர்ந்து உருவான ஊகங்களைத் தனது இந்த உத்தரவின் மூலம் நிஜமாக்கியிருக்கிறார்.

சபாநாயகரின் இந்த உத்தரவைத் தொடர்ந்து, சட்ட மன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 233 இலிருந்து 215 ஆகக் குறைந்துள்ளது. எனவே, தேவையான பெரும்பான்மை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 117இலிருந்து 108 ஆகக் குறைந்துள்ளது.

இது எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசுக்குச் சாதகமாகவே அமைந்திருக்கிறது. ஏழு மாதங்களைக் கடந்திருக்கும் பழனிச்சாமி தலைமையிலான ஆட்சியை நீட்டிப்பதற்கான முயற்சியாகத்தான் சபாநாயகரின் நடவடிக்கையைப் பார்க்க முடிகிறது. முதலமைச்சர் சட்ட மன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண் டும் என்று ஆளுநர் உத் தரவிட்டிருந்தால், இந்த அசா தாரண சூழல் உருவாகியிருக்காது.

அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தகுதிநீக்கம் செய்யப்பட வாய்ப்பிருக் கிறது என்று எதிர்க்கட்சியான திமுக அஞ்சியது. அதன் காரணமாகத் தான், சென்னை உயர் நீதி மன் றத்தை அணுகியது. செப்டெம்பர் 20 இற்குள் நம்பிக்கை வாக்கெடு ப்பை நடத்தக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், இப்படி ஒரு உத் தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

அரசியல் சட்டத்தின் 10ஆவது அட்டவணையின்படி, சபாநாயகர் பிறப் பித்திருக்கும் உத்தர்வு நீதிமன்ற ஆய்வுக்கு உட்பட்டது. ஒரு கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் தங்களது கட்சி யின் ஆட்சிக்கு அளிக்கும் ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொண் டாலே, அவர்கள் கட்சி உறுப்பினர் நிலையிலிருந்து தாங்களாக முன்வந்து விலகி விட்டார்கள் என்று பொருளா? அவ்வாறு செய்வதால் அவர்களை எம்.எல்.ஏ. பதவியிலிருந்து நீக்க முடியுமா என்பதை யெல்லாம் நீதிம ன்றம் முடிவுசெய்யும்.

ஏற்கனவே, கர்நாடக சட்ட மன் றத்தில் இதே போன்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறிப்பிடத்தக்கது. தாங்கள் சார்ந்திருக்கும் கட்சி ஆட்சியில் தொடர்வதற்கு ஆதரவளிக்காத 11 எம்.எல்.ஏ.க்களைத் தகுதிநீக்கம் செய்வது செல்லாது என்று உச்ச நீதிமன்றம் 2011இல் பால்சந்திரா எல். ஜர்கி ஹோலி எதிர் பி.எஸ். எடியூரப்பா வழக்கில் தீர்ப்பளித்திருக்கிறது. கொறடா உத்தரவை மீறியிருந்தால் மட்டுமே எம்.எல்.ஏ.க்கள் பதவி நீக்கத்துக்கான சூழல் ஏற்படும்.

கடந்த ஆண்டில், உத்தரகாண்டில் ஹரீஷ் ராவத் தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கும் இதுபோன்ற சிக்கல் எழுந்தது. காங்கிரஸைச் சேர்ந்த ஒன்பது எம்.எல்.ஏ.க்கள் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து கொண்டதைத் தொடர்ந்து அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

அப்போது உச்ச நீதி மன்றம் தலையிட மறுத்து விட்டது. அந்தப் பிரச்சினையில் ஆளுங்கட்சி யைச் சேர்ந்த அதிருப்தி எம்.எல்.ஏக்கள் எதிர்க்கட்சியான பா.ஜ.க வினருடன் சேர்ந்து ஆளுநரைச் சந்தித் தார்கள்.

ஆனால், தற்போது தமிழ்நாட்டில் அ.தி.மு.கவைச் சேர்ந்த அதிருப்தி எம்.எல்.ஏ.க்களுக்கும் எதிர்க் கட்சி யான தி.மு.கவுக்கும் தொடர்புள்ளது என்பதற்கு எந்த உறுதியான ஆதா ரமும் இல்லை. இந்தப் பிரச்சினையில் சட்ட ரீதி யாகவும் அரசியல் சட்ட அடிப்படையிலும் எழு கின்ற கேள்வி களை நீதிமன்றம் முடிவு செய்யும்.

ஆனால், தமிழகத்தில் அரசியல் விழுமியங்கள் வீழ்ந்து விட்டன என்பதையே இந்த நிகழ்வுகள் உண ர்த்துகின்றன.

ஆளும் அ.தி.மு.க அரசு, பெரும்பான்மை வாக்கெடுப்பில் வெற்றி பெறலாம். ஆனால், தார்மீக அடிப்படையிலிருந்து அது விலகி விட்டது!

**ஆசிரியர் தலையங்கம்:**
**த ஹிந்து**

# மழை நின்ற போதிலும் தூவானம் ஓயவில்லை



அ.தி.மு.கவில் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் செயற்பட்ட அணி, முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அணியில் இணை ந்து விட்ட நிலையில், அரசின் முக்கிய முடிவுகளை எடப்பாடியே எடுக்கிறார் என்ற குற்றச்சாட்டு ஓ.பி.எஸ். முகாமில் தொடர்ந்து நிலவுகிறது. இதனால், ஓ.பி.எஸ் - ஈ.பி.எஸ். ஆதரவாளர்கள் இடையே தொடர்ந்து பனிமோதல் நீடித்து வருவதாக தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

"மழை விட்டாலும் தூவானம் விடவில்லை" என்ற கூற்றுக்கு ஏற்ப, ஓ.பன்னீர்செல்வம் அணியுடன் எடப்பாடி தரப்பினர் இணைந்து விட்ட போதிலும், இதுவரை ஓ.பி.எஸ்-க்கு பல்வேறு விடயங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்று அங்கலாய்க்கின்றனர் அவரின் ஆதரவாளர்கள்.

மேலும் ஓ.பி.எஸ் அணியினரை எதிர் முகாமில் உள்ளவர்கள் தொடர் ந்து புறக்கணிப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சசிகலாவால் முதல்வராகப் பதவி யேற்ற எடப்பாடி, சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா சிறை சென்றதும், அவரின் உறவினர்களை புறக்கணிக் கத் தொடங்கினார். இரட்டை இலைச் சின்னம் பெறுவதற்கான லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில், டி.டி.வி. தினகரன் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் பிணையில் வெளியே வந்தார்.

இரு அணிகளும் இணைவதற்கு காலக்கெடு விதித்தார். அவர் விதித்த கெடுவுக்குள் இரு அணிகளும் இணையவில்லை.

இதையடுத்து, கட்சிப்பணிகளில் தினகரன் தீவிரம் காட்டத் தொடங் கியது, எடப்பாடி மற்றும் அமைச்சர்க ளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. இதனால், எடப் பாடிக்கும், தினகரனுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

தினகரனின் ஆதரவாளர்களைப் புறக்கணித்த எடப்பாடி தரப்பினர், ஓ.பன்னீர்செல்வம் அணியுடன் இணைந்து கட்சியின் பொதுக் குழுவையும் நடத்தி முடித்துள் ளனர்.

பொதுச்செயலாளர் பதவியில் இருந்து சசிகலாவை நீக்கி தீர்மானம் நிறைவேற்றியதுடன், அவரால் நியமிக்கப்பட்ட டி.டி.வி. தினகரன் உட்பட எந்தவொரு நியமனமும் செல்லாது என்றும் அ.தி. மு.க. பொதுக்குழுவில் முடிவெடுக் கப்பட்டது.

"சரி, அணிகள்தான் இணைந்து விட்டதே" என்று அ.தி.மு.க. தொண்டர்கள் நிம்மதி அடைந்த நிலையில், தினகரனை ஆதரிக் கும் 19 எம்.எல்.ஏ-க்கள், எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கியதுடன் ஆளுநரிடம் மனு கொடுத்தனர்.

இந்நிலையில் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ-க்கள் 18 பேரை தகுதிநீக்கம் செய்து சபாநாயகர் நடவடிக்கை எடுத்தார்.

இதுபோன்ற அரசியல் பரபரப்புக்கு இடையே, ஓ.பன்னீர்செல்வம் வகிக்கும் நிதித்துறை, வீட்டு வசதித்துறை உள்ளிட்ட துணை முதல்வரின் கீழ் வரும் அனைத் துக் கோப்புகளும், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பார்வைக்குச் சென்ற பிறகே ஒப்புதல் அளிக்கப்படுவதாக தலைமைச் செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால், ஓ.பி.எஸ்.முகாமில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

முதல்வராக பதவி வகித்த பன் னீர்செல்வம், தற்போது எடப்பாடி யின் கீழ் வரும் அமைச்சர் என்பது ஒருபுறம் இருந்தாலும், அணிகள் இணைப்பின் போது துண்ண முதல்வர் என்ற பதவியை அளித்து விட்டு, தற்போது வேண்டுமென்றே புறக்கணிப்பதாக வருத்தப்படுகி றார்கள் ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook கடமை கணனி கட்டுப்பாடு

கணனிகள் நம்மை ஆட்கொண்டு பலஆண்டுகள் ஆகின்றன. இன்று நாம் கைபேசியும் கணனியும் இல்லாமல் வாழ்வது சாத்தியமா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

ஆண்டு 2020 கணனியை அடிப்படையாகக் கொண்டு அமைத்த நகரம் ஒன்று. அதில் நகரத்தின் எல்லா வகையான முக்கிய பணிகளும் கணனி வழியாக செய்யும் திறனுடன் அமைக்கப்பட்டிருந்தது.

அடிப்படை சேவைகள் யாவும் மத்திய கணனி மையத்தில் ஒன்றாக்கி, அங்கு கடும் காவலும் இடப்பட்டிருந்தது. நகரத்தின் எல்லாப் பகுதிகளையும் கண்காணிக்க புகைப்படக் கருவிகளும், அதிலிருந்து வரும் படங்களை உடனுக்குடன் செய்தியாக பதிவு செய்து மத்திய கணனிக்கு அனுப்பும் திறனார்வும் அமைத்து, அந்த செய்திகள் மூலம் நகரம் நல்ல நிலையில் இயங்குவதை அதிகாரிகளுக்கு கைக்கணனியில் தெரிவித்து நகரம் எவ்வித தடையும் இல்லா மல் இயங்குவதை காண வழி வகுக்கப்பட்டிருந்தது.

உலகத்தில் அனைத்து நகரங்களிலும் தொழில் நுட்பமும், மென்பொருளும் ஒன்றாக சேர்ந்து படைக்கப்பட்ட முதல் நகரமாக பறைசாற்றப் பெற்று விளங்கியது. இந்நகரத்தை வெல்ல யாராலும் முடியாது என குறிப்பிட்டு, இம் மாதிரி நகரம் உங்களுக்கு வேண்டுமா அணுகவும் என ஒரு தொலைபேசி எண்ணையும் கொடுத்து வைத்திருந்தது.

உலகத்து எல்லா நாடுகளும் தங்கள் நாட்டிலும் ஒரு நகரம் இவ்வாறு அமைக்கப்படவேண்டும் என முடிவு செய்தன. இனி இந்நகரம் எவ்வாறு செயற்படுகிறது. அதன் முக்கிய அம்சங்களை ஆராய்வோம்.

தண்ணீர் தேவைகளை வீட்டில் இருக்கும் நபர்களை வைத்து கணக்கெடுத்து எல்லோருக்கும் வேண்டிய அளவு சென்றடைய விநியோகிக்கும் பாங்கும், மின்சாரத்தை கணக்கெடுத்து ஒளிக்கேற்றவாறு எந்த இடங்களுக்கு தேவையோ அங்கு சென்றடைய அனுப்பும் நேர்த்தியும், அன்றாட சேவைகளான காவல் துறை,தீ அணைப்பு படை,மருத்துவமனை அம்புலன்ஸ் முதலியவற்றை தன் கண்காணிப்பில் வைத்து செயற்படுத்தும் அழகும் யாவரையும் கவர்ந்தது. வசித்தால் இந்நகரத்தில் வசிக்க வேண்டும் என சொல்லும் அளவிற்கு பேச வைத்தது.

மிகவும் துரிதமாகவும், துல்லியமாகவும் சேவைகளை நடைபெற உதவும் கணனியை கவனிக்க பொறுப்புள்ள அதிகாரிகளை தேர்ந்தெடுத்து நியமித்து அவர்கள் இந்த பதவியில் கவனத்துடன் செயலாற்ற எல்லோரும் வியக்கும் வண்ணம் நகரம் செழிப்புடன் விளங்கியது.

நாம் கேள்விப்பட்ட ராமராஜ்யம் இன்று நம் கண்முன்னில். இவ்வாறு எல்லாம் சீராக நடக்கையில், ஒருநாள் அலுவலகத்தில் முக்கிய பொறுப்பில் உள்ள அதிகாரி தன் மகனுடன் அலுவலகத்திற்கு வந்தார்.

அவனுக்கு தன் அலுவலகத்தில் உள்ள கண்ணாடி திரைகளை பற்றி விளக்கி, தன் கடவுச் சொல்லை தட்டினார். கண்ணாடி திரைகளில் வண்ணமயமாக



நகரத்தின் அனைத்து சேவைகளும் தெரிந்தன. சிறுவனின் கண்கள் வியப்பில் விரிந்தன.

அப்பாவின் திறமையை கண்டு அவன் மனம் பெருமை கொண்டது. அப்பாவின் அனுமதியுடன் தான் கணனி முன் உட்கார்ந்து ஒவ்வொரு சேவையாக ஆராய, மகனின் ஆர்வத்தை கண்டு மனம் பூரித்து அவரும் விளக்கலானார். நேரம் கடந்ததை இருவரும் அறியாமல் வேலையில் மூழ்கினர்.

அப்பாவிற்கு தண்ணீர் அருந்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட, மகனிடம் இப்பொழுது வருகிறேன் எனக்கூறி தன் கண்ணாடி அறைக்கு வெளியே வர, மகன் தான் அன்று காலையில் கற்ற பாடங்களை நடைமுறைப்படுத்த கணனியில் உள்ள எழுத்துக்கள் நிறைந்த அந்த மேடையில் தன் திறமையை வெளிப்படுத்த, கண்ணாடி திரைகளில் வண்ணங்கள் மாற ஆரம்பித்தன.

சிறுவன் அதைக்கண்டு களைத்து மேலும் சில மாற்றங்களைச் செய்ய அமைதியாக இருந்த அந்த இடம் ஒலிபெருக்கிகள் சத்தமிட சிவப்பு விளக்குகள் எரிய பதட்டம் மிகுந்த பகுதியாக மாறியது.

தண்ணீர்ப் போத்தலுடன் தன் அறைக்கு வந்து கொண்டிருந்த அதிகாரி நடையை ஓட்டமாக மாற்றி தன் அறைக்குள் நுழைய மகன் தன் செயலால் நிகழ்ந்தவற்றை கண்டு பயந்து பிரமிப்புடன் அவர் அலுவலகத்தில் இருப்பதை கண்டார்.

கண்ணாடி திரையில் தாம் கண்டதை அவராலே நம்பமுடியவில்லை. மருத்துவ அம்புலன்ஸ்கள் தாறுமாறாகச் செல்ல,தீ அணைப்பு படை தீ இல்லாத பகுதிக்கு விரைய, காவற்படை வீதியில் ஓலமிட்டு ஓட,தண்ணீர் தேவைகள் வீடுகளுக்கு அதிகரிக்க ஒரே குழப்பம்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1205

Search for people, places and things Nagendram Home

**கேதன் ஒலிவண்ணன்**




**சாரு மணோகர்**




**கஜமாறன்**




**வசந்தருபன் குகதர்சன்**




**உதயச்சந்திரன்**




**கீர்த்திரீ**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 103

# ஊன்றுகோல்கள்

## Crutches



ஊன்றுகோல்கள் மிகப் பதிவாயின், தகுந்த ஆதாரத்தை வழங்கமாட்டாது. மிக உயரமாயின் உறுதியற்று விடும்.

**எழுந்து நிற்றல்**

ஊன்றுகோல்கள் இரண்டையும் ஒரு கையினால் பற்றியவாறு மறு கையை கதிரையில் வைக்கவும் பாதிக்கப்பட்ட கால் நிலத்தில் படாதவாறு பாதிப்பற்ற காலில் எழுந்து நிற்கவும். ஊன்றுகோல்களை இரு கைகளுக்கும் வைத்து நடக்கவும்.

**நடத்தல்**

முதலில் இரு ஊன்றுகோல்களையும் ஒரு அடி முன்னோக்கி நகர்த்தவும். இரு ஊன்றுகோல்களுக்கும் இடையில் பாதிப்புற்ற காலை முன்னோக்கி நகர்த்தவும். உடலின் எடையை ஊன்றுகோல்களுக்கு மாற்றவும். மேற்கூறிய வட்டத்தை மீட்பதன் மூலம் முன்னோக்கி நகரவும்.

**இருத்தல்**

தட்டம் (பின்பகுதி) கதிரையை நோக்கியவாறு நிற்கவும் இரு ஊன்று கோல்களையும் ஒருகையில் பற்றி மற்றைய கையை கதிரையில் ஊன்றவும். கீழே அமரவும்.

**குறிப்பு:**

வழுக்கும் தரையில் நடக்கும்போது அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். நடத்தல் சட்டகம் (Walking frame) வயது முதிர்ந்தோருக்கு உகந்தது.

**ஊன்றுகோல்களை பயன்படுத்தல்**

**அக்குள் ஊன்றுகோல்கள்**

- கமக்கட்டிலுள்ள நரம்பில் ஏற்படக்கூடிய அழுத்தத்தை தவிர்ப்பதற்காக அக்குள் மட்டையானது கமக்கட்டிலிருந்து 2-3 விரல் தூரம் புதிவாக இருத்தல் வேண்டும்.
- கைப்பிடியானது இடுப்பு அளவிலும், முழங்கை சற்று மடிந்த நிலையிலும் இருக்க வேண்டும்.
- எடையானது கைகளில் தாங்கப்படல் வேண்டும். கமக்கட்டில் அல்ல.
- இறப்பர் உறை நல்ல நிலையில் உள்ளதை உறுதிப்படுத்துவதன் மூலம் வழுக்கி விழுதலைத் தவிர்க்கலாம்.


**உங்கள் ஊன்றுகோல்கள் சரியான உயரத்தைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.**

- ஊன்றுகோல்களின் உயரமானது நிற்கும் நிலையில் வைத்தே செப்பனிடப்படல் வேண்டும். நிபுணத்துவம் உடைய ஒருவரின் உதவியுடன் ஊன்றுகோலின் உயரத்தைச் சரிசெய்யவும்.
- நிபுணத்துவம் உடைய ஒருவரின் அறிவுரையின்றி ஊன்றுகோலின் உயரத்தை மீள் மாற்றம் செய்ய வேண்டாம்.
- சீரற்ற உயர ஊன்றுகோல்களினால் தோள்வலி, இடுப்புவலி, உடல் வலி, நரம்பழுத்தம் ஆகியன ஏற்படலாம்.
- உங்கள் ஊன்றுகோல்கள் அல்லது ஊன்றுகோலுடனான நடை அசௌகரியத்தையோ, வலியையோ ஏற்படுத்துமாயின் உடனடியாக நிபுணத்துவ உதவியை நாடவேண்டும்.



Dr.T. கோபிசங்கர்
என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# சில உணவுகள் பற்றிய தகவல்கள்



**முட்டை:**

- முட்டை ஓர் பூரண உணவாகும்
- இறைச்சி,பால், மீன் போன்றவற்றில் காணப்படும் புரதத்தினை விட அதிக தரமான புரதம் முட்டையில காணப்படுகிறது.
- முட்டையானது ஒப்பிட்டளவில் மலிவானதும் இலகுவில் சமைக்கக் கூடியதுமான ஓர் உணவாகும்.
- ஆரோக்கியமான, உடல் திடகாத்திரத்துடன் வேலை செய்கின்ற வயது வந்தவர்கள் மற்றும் குழந்தைகள் தினமும் ஒரு முட்டையை உட்கொள்ளலாம்.
- முட்டையானது அவித்தோ, பொரித்தோ, ஓம்லட் செய்தோ பரிமாறப்படல் வேண்டும்.
- முட்டையைப் பொரிக்கும் போது அதனுடன் காய்கறிகளைச் சேர்த்தால் கொலஸ்ரோல் அகத்துறிஞ்சப்படுவதைக் குறைத்துக் கொள்ளமுடியும்.





**இறைச்சி:**

- இறைச்சியானது பெறுமதிமிக்க நல்ல தரமான புரதத்தினைக் கொண்ட உணவாகும்.
- இறைச்சியிலுள்ள இரும்புச்சத்தினை (Heamiton) எமது உடலானது இலகுவாக அகத்துறிஞ்சிக்கொள்ளும்.
- ஏனைய உணவுகளிலுள்ள இரும்புச்சத்தினை அகத்துறிஞ்சுவதையும் இறைச்சியிலுள்ள இரும்புச்சத்து கூட்டுகின்றது. (இரும்புச்சத்துள்ள அவரை வித்துக்கள் தானியங்களுடன் சிறிய அளவான இறைச்சியைச் சேர்த்துப் பயன் பெறலாம்)
- இறைச்சியை உண்ணும் போது இயலுமான வரையில் கண்ணுக்குத் தெரிகின்ற கொழுப்புகளை அகற்றவும் மற்றும் கோழி இறைச்சியில் தோலை நீக்கிய பின் சமைத்து உண்ணுங்கள்.



**பால் :** (பிறந்தது முதல் ஆறு மாதங்களுக்கு குழந்தைகளுக்குக் கட்டாயம் தாய்ப் பால் மட்டும் கொடுக்கப்படல் வேண்டும்)

- பால் ஓர் நிறைவான உணவாகும்.
- எல்லா வயதுப் பிரிவினருக்கும் ஏற்ற ஓர் சிறந்த நிறையுணவாகும்.
- எலும்புகளின் விருத்திக்கு பால் ஓர் சிறந்த உணவாகும்.
- பாலில் உள்ள கல்சியமானது உடலினால் நன்றாக அகத்துறிஞ்சப்படக் கூடியதாகும்.



**எண்ணெய் :**

- சமைப்பதற்கு சிறிதளவான எண்ணெயைப் பயன்படுத்துங்கள்.
- ஒட்டாத இரும்பிலான பாத்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் சமைக்கத் தேவைப்படும் எண்ணெயின் அளவைக் குறைக்கலாம்.
- ஆழமாகப் பொரிப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள். அப்படி ஆழமாகப் பொரிப்பதாயின் தேங்காய் எண்ணெய்களைப் பாவியுங்கள்.
- தேங்காய் எண்ணெய் தவிர்ந்த ஏனைய எண்ணெய்களை பொரிப்பதற்காக ஒருமுறை பாவித்த பின் மீண்டும் பயன்படுத்த வேண்டாம்.
- பொதி செய்யப்பட்டு சாப்பிடத் தயாரான உணவுப்பொருட்களின் பொதியிலுள்ள சுட்டுத்துண்டினைப் பார்த்து நிரம்பிய மற்றும் ரான்ஸ் கொழுப்புள்ள உணவுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org